298

# Rakshanya Manoharam

## The Joy of Salvation

*PRAYER AND PRAISE IN VERSE*

BY

H. A. KRISHNA PILLAI,

Palayamcottai

Third Edition

PUBLISHED BY

SIR DAVID DEVADOSS, B.A., B.L., Bar-at-Law., Kt.

*Retired Judge, High Court, Madras.*

1951

(Copyright Registered)

G6:417
N51
093209

# இரக்ஷணிய மனோகரம்

இது

பாளையங்கோட்டை

மகா வித்வான்

**H. A. கிருஷ்ண பிள்ளை**

அவர்களால் இயற்றப்பட்டது.

மூன்றாம் பதிப்பு

சென்னை மாஜி நீதிபதி

சர். டேவிட் தேவதாஸ் அவர்களால்

வெளியிடப்பட்டது.

விலை 1951 ரூ. 1—4—0

# PREFACE

Rakshanya Manoharam is a highly devotional book. I am using it for my devotions. It has been out of print for some time. Knowing the value of the book and how it will be valuable to our Christians I am publishing a new edition of it. I hope it will reach a large circle of readers.

Mylapore.
22nd March 51.

Sir DAVID DEVADOSS

*Copies can be had from :—*

(1) Rao Sahib P. S. Kadambavanam,
Mettu Street, Chingleput.

(2) Sir David Devadoss,
Sylvan Lodge, Mylapore, Madras-4.

# பொருள் அட்டவணை.


| | பெயர். | பக்கம். | கவி. |
|---|---|---|---|
| 1 | பால்ய பிரார்த்தனை... | 1 | 45 |
| 2 | குமாராநுபூதி | 7 | 50 |
| 3 | சந்நிதிமுறை:— | 14 | —— |
| | 1. கடவுள் வணக்கம்... | 14 | 3 |
| | 2. பரமார்த்த பரமநிதி | 15 | 10 |
| | 3. ஞான சம்பந்த குரு.. | 20 | 10 |
| | 4. யேசுநாயகஸ்வாமி.. | 24 | 10 |
| 4 | கிறிஸ்தவ மனோலய சாதனம் | 29 | 19 |
| 5 | பிசாசின் கிரியை—துர்ப்போதனை | 31 | 10 |
| 6 | நல்மனச்சாக்ஷி | 33 | 14 |
| 7 | மரண சிந்தனை | 35 | 11 |
| 8 | தேவகிருபையின் மாட்சியும் கிரியையும் | 36 | 14 |
| 9 | சுவிசேஷ மாட்சி | 38 | 10 |
| 10 | ஜீவநதி மான்மியம் | 39 | 10 |
| 11 | பாவவுணர்ச்சி | 41 | 9 |
| 12 | ஜீவவழிக்கடை திறப்பு | 42 | 10 |
| 13 | வேதியரொழுக்கம் | 43 | 10 |
| 14 | ஸ்தோத்திரம் | 44 | 10 |
| 15 | ஜெபம் | 46 | 11 |
| 16 | திருநாம ஸ்மரணை | 47 | 11 |
| 17 | திருநாமப் பதிகம் | 49 | 11 |
| 18 | காலை ஸ்துதி | 51 | 10 |
| 19 | பிழைநினைந்திரங்கல் | 52 | 12 |
| 20 | கிறிஸ்துவே எனக்கெல்லாமாயிருக்கிறார் | 54 | 10 |
| 21 | கையடைப்பதிகம் | 55 | 13 |
| 22 | விசுவாசக் காட்சி | 58 | 10 |
| 23 | வேட்கையின் விதும்பல் | 60 | 10 |
| 24 | அந்திப்பலி.. | 62 | 10 |
| 25 | கடைக்கணி | 64 | 12 |
| 26 | உண்மை வற்புறுத்தல் | 65 | 10 |
| 27 | போற்றித் திருவிருத்தங்கள் | 67 | 36 |
| 28 | எண்பொருட் பதிகம்... | 73 | 10 |
| 29 | ஆன்ம பிரலாப மூலமும் பொழிப்புரையும் | 74 | 29 |

## பொருள் அட்டவணை.


| | பெயர். | பக்கம். | கவி. |
|---|---|---|---|
| 30 | மோக்ஷக் கடைதிறப்பு ... ... ... ... ... | 82 | 10 |
| 31 | ஜீவ திருவாக்கு ... ... ... ... ... ... | 83 | 34 |
| 32 | விசுவாச மாட்சி ... ... ... ... ... ... | 88 | 16 |
| 33 | மாயாபுரி ... ... ... ... ... ... ... ... | 90 | 39 |
| 34 | பன்மணி ... ... ... ... ... ... | 95 | 7 |
| | அரும்பதவகராதி ... ... ... ... ... ... | 97 | — |

மொத்தம் கவி... 566

# இரக்ஷணிய மனோகரம்

## 1. பால்ய பிரார்த்தனை

இந்தச் சிறு பாடல்கள் ஐந்து வயதுள்ள சிறு குழந்தைகள் உள்ளத்திலும் பதியத்தக்க இயற்சொற்களால் தெளிவான பொருளுள்ளதாகச் சிறு கவிகளா லியற்றப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்களான பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எழுத வாசிக்க அறியாத பருவத்திலுஞ் செவிப்புலவொலியாற் சங்கதிகளை யறிந்துகொள்ளுகிறார்களென்பது தெரிந்த காரியமாதலால் தேவகிருபையை முன்னிட்டு இக்கவிகளைப் பிள்ளைகளுக்கு மனப்பாடம் செய்வித்துப் பழக்குவிக்க முயலுவார்களாகில் பின்காலத்திற் பெரிய நன்மைகளுண்டாகக் காண்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. வயது முதிர்ந்த கிறிஸ்தவர்களிலும் எத்தனையோபேர் ஸ்ரீ கிறிஸ்துவுக்குள் புதுப் பிறப்படைந்து பிள்ளைத்தன்மையாகத்தானே யிருக்கிறார்கள். அத்தகையோரு மிதை யநுசந்தானம் பண்ணிவரில் பெரிய நன்மைக்கிடமாகும். இந்நாட்டிலுள்ள சில கிறிஸ்தவ குடும்பத்தாரே இதற்குச் சான்று பகருவார்கள்.

### தெய்வ வணக்கம்.

நாடிய கருமம் பீடுற முடிய
நீடருள் தருமிறை தாடொழு திடுவாம். 1

தேசுலாந்திரி யேசனார் மாசிலாவருள் வாஞ்சையாற்
பேசுபால்ய பிரார்த்தனை ஓசைமுட்டுக வும்பரே. 2

பத்தியாய்ச்செபம் பண்ணவே
சுத்தமாய்த்தெரி யாதய்யா
புத்தியோடுமைப் போற்றநற்
சித்தமீந்திடும் ஜேசுவே. 1

பாவபாதையை விட்டுநான்
ஜீவபாதையிற் சேரநல்
ஆவிதந்தெனை யாட்கொளுந்
தேவதேவ குமாரனே. 2

ஆசையோடுமக் காட்செயும்
மாசிலாமனம் நல்கியே
நேசம்வைத்தெனை ரக்ஷியும்
யேசுநாத சுவாமியே. 3

இரவில்மோசமொன் றின்றியே
உரிமையாயுறக் காட்டினை
பரமனேபதி னாயிரம்
சரணம்யேசு தயாபரா. 4

நாளுமாறு நயந்திடாப்
பாலனிப்பரு வத்துனைச்
சாலவேதொழ நீயருள்
மூலகாரண மூர்த்தியே. 5

துட்டரோடுற வாடிநான்
மட்டிலாததுன் மார்க்கனாய்க்
கெட்டிடாவகை கிருபைசெய்
தட்டிலாத தயாபரா. 6

பஞ்சிநானொரு பாவியேன்
தஞ்சம் உன்னிரு தாளயா
அஞ்சலென்றருள் வாய்பரன்
மஞ்சனேமனு வேலனே. 7

மெய்மையாக விளங்கிடும்
தெய்வநீயல திலலையே
ஐயனேயுன் னடைக்கலங்
கைவிடாதெனைக் காப்பையே. 8

இந்தநாளிலெப் பாவமும்
சிந்தையாலுஞ் செய்யாமலே
முந்தவுன்கிருபை தந்துகா
வந்தனமனு வேலனே. 9

அன்னையுமென தப்பனும்
உன்னையன்றிலை யுண்மையே
பின்னையென்ன பிணக்குகாண்
என்னைரக்ஷிசர் வேசனே. 10

நீசனேனித யத்துளே
மாசிலாவிசு வாசமும்
நேசமுந்தின நீடவே
யேசுவேயரு ளீவையே. 11

சத்தியங்கதி சார்வழி
நித்தியஜீவனு நீயெனும்
பத்திதந்தெனைப் பாலியாய்
அத்தனேயரு ளாளனே. 12

பொய்யும்வஞ்சமும் போக்கியே
மெய்யுமன்பும் விடாமல்யான்
தெய்வமேயுனைச் சேவித்திங்
குய்யும்நல்வர முதவுவாய். 13

தந்தைதாயருஞ் சார்ந்தவென்
பந்துவும்பரி ஜனரும்வீண்
தொந்தமன்றியோர் துணையிலை
எந்தைநீதுணை யென்றுமே. 14

உன்றிருப்புக ழோதவும்
உன்றிருப்புகழ் கேட்கவும்
உன்றனக்கெனை யுதவவும்
என்றனக்கருள் யேசுவே. 15

அந்திசந்தி யிராப்பகல்
சிந்தையாரவுன் சேவடி
வந்தனஞ்செய்து வாழ்வரம்
தந்திரக்ஷிசர் வேசனே. 16

என்னையோர்பொரு ளாக்வும்
உன்னிமானிட வுருவமாய்ப்
பன்னருந்துயர் பட்டனை
என்னஈடுள தியேசுவே. 17

அப்பனேயுன தன்பினுக்
கெப்படிப்பதி லீட்டுவேன்
செப்புமென்னித யத்தையே
ஒப்படைத்தன னுன்னதே. 18

நாடியுன்புகழ் நாயினேன்
பாடிடப்பதி னாயிரங்
கோடிநாவுள தாயினுங்
கூடுமோகும ரேசனே. 19

கருவிலேபவ நோய்கலந்
துருவழித்தொழி யாதெனைத்
தெருவில்விட்டது தேசிகா
திருவிழிக்கடை திறவயா. 20

மனமும்வாக்கு மசுத்தமாய்த்
தினமும்பாவமே செய்துநான்
சினமுஞ்சாபமுஞ் சேர்த்தனன்
அனகனேமன்னிப் பருளுவாய். 21

நாயினுங்கடையே னெனைத்
தாயினுஞ்சத கோடிபங்
காயவன்புகொண் டாண்டனை
சேயனேதிரி யேகனே. 22

உனதுசித்த முவந்ததே
எனதுபாக்கிய மென்னுநல்
மனதுதந்தெனை வாழ்வியாய்
புனிதபுண்ணிய மூர்த்தியே. 23

பேயினாற்பிடி பட்டுநான்
தீயனாய்த்தியங் காமலே
தூயவாவியின் துணையெனக்
கீயுமெங்கிறிஸ் தியேசுவே. 24

எனக்குமற்றவ னெதுசெய
மனக்கொள்வேனதை மற்றவன்
தனக்குயான்செயத் தகுமனம்
எனக்குநல்கிடும் யேசுவே. 25

அத்தனேயுயி ரளவிலே
மெத்தவுந்திகில் மேவினும்
சத்தியந்தவ றாத்திடச்
சித்தமீந்திடும் ஜேசுவே. 26

வஞ்சமில்மனச் சாக்ஷியும்
நெஞ்சுமொத்துநன் னெறியிலே
செஞ்செவேசெலத் திருவருள்
விஞ்சநல்கிடும் விமலனே. 27

அறையிலந்தரங் கத்திலே
நிறையுமன்பொடு நித்தமும்
இறைவவுன்னை யிறைஞ்சிடும்
முறையெனக்கருள் மூர்த்தியே. 28

தீங்கெனக்கெவன் செய்யினுந்
தாங்கிநன்மை தனைச்செய
ஓங்குநல்மன முதவுவாய்
வீங்குபேருள் வித்தகா. 29

இழிவுமூடிய வேழையேன்
கழிவிலாத்துயர் காணவுன்
விழியைமூடி விடாதைகாண்
ஒழிவிலாவுப காரியே. 30

வேதகீதம் விடாமலே
ஓதியோதியுள் ளன்பினல்
பாதபங்கயம் பரவவென்
மீதிரக்கம்வை வேதனே. 31

திருட்டுநெஞ்சைத் தினம்தினம்
மருட்டுலோகத்தை வந்துவந்
துருட்டுபேயை யொழித்துநீ
தெருட்டுவாயெனைத் தேசிகா. 32

திரணம்நானொரு சிறியனுட்
கரணமோய்ந்துடல் கைவிட
மரணபாசம் வளைக்கையில்
சரணபங்கயந் தாவையா. 33

கள்ளனுக்கருள் காட்டிய
வள்ளலேபர மண்டலத்
துள்ளுளேயெனை யுள்ளியாட்
கொள்ளுவாய்கதி கூட்டுவாய். 34

தழுவுஜீவபுஸ் தகத்திலே
பிழைபடாமலென் பேரையும்
எழுதிவைத்திக ழாதுநீ
முழுதுங்காத்தருள் மூர்த்தியே. 35

சிறுவனானுனைச் செவ்வையாய்
அறியவுமுழு வன்பினால்
நிறையுமுள்ள நிலைக்கவும்
இறைவனேவர மீகுவாய். 36

சிறந்தவேதநற் செம்பொருள்
அறிந்திடற்கென் னகத்தினைத்
திறந்துவைத்தருள் சிலுவைமீ
திறந்துயிர்த்தவென் யேசுவே. 37

கருத்துவைத்துநற் கல்வியை
அருத்தியாய்ப்படித் தறிவிலே
விருத்தியாயுனை மேவவே
திருத்துவாயெனைத் தேசிகா. 38

அண்ணலேயுன தாலயம்
நண்ணிநல்லுணர் வோடுனை
எண்ணியெண்ணி யிறைஞ்சவுன்
கண்ணிலின்னருள் காட்டுவாய். 39

நாளும்வேண்டுவ நல்கியே
ஆளுகின்றனை யப்பனே
மாளுமட்டுமுன் வார்கழற்
காளியான்செய வருளுவாய். 40

உம்பருக்கர சேயுனை
நம்பினேனுனை நம்பினேன்
வெம்பியென்னுயிர் வீடுகாட்
செம்பதத்துணை சேர்த்தியால். 41

ஈன்றுளோரடி யேனுடன்
தோன்றினோர்பர சுகமுற
ஆன்றநல்வர மருளுவாய்
மூன்றொன்றாகிய மூர்த்தியே. 42

அகிலலோகமு மநுதினம்
இகலிலாதுனே யேத்தியே
புகலிடம்பெறப் புனிதமார்
பகவனேகிருபை பார்லியாய். 43

எந்தையேயுலகி யாவையும்
தந்துபாவச் சழக்கற
மைந்தனைத்தந்த வண்மைக்கே
சந்ததந்துதி சாலவே. 44

வேதம்வாழ்கமெய் வேதியர்
போதம்வாழ்கவிப் புன்சொலார்
கீதம்வாழ்க கிறிஸ்துவின்
பாதம்வாழ்க பல்லூழியே. 45

பால்ய பிரார்த்தனை முற்றிற்று.

## 2. குமாராநுபூதி.

**குமாரன்**=ஸ்ரீ கிறிஸ்துவாகிய இரக்ஷணியமூர்த்தி. அநுபூதி=அவருடைய திருவடித் தொழும்பிலடையும் ஆன்ம ஐஸ்வரியம். அது மெய்க் கிறிஸ்தவர்களுக்கு இலவசமா யருளப்படும் ஸ்வர்க்கப்பேறு. இத்தியாதி கவிகளை மனனம்பண்ணி அநுசந்தானஞ் செய்துவருமவர்களே, அந்த நன்மைக்குச் சாக்ஷிகளாயிருப்பார்கள். இதுபற்றியன்றே இந்தியாவிற் கவிகள் பிராபல்ய மடைந்தன.

தாதைமடி மீதுலவித் தங்கியதும் வானாட்டுத்
தூதர்முடி மீதுநனி தோய்ந்ததுவு—மாதரையிற்
கானுருவி யன்பர் கருத்துற் றிருப்பதுமிம்
மானுவேல் நெஞ்சே வடி.

பாசாடவியூடு பதைத்துமனம்
வேசாறிவிடாய்த்துயிர் வீடுவலோ
ஈசாநரதேகமி யைந்தபர
வாசாவருண்ஞான வரோதயனே. 1

தோராமலுனுற்றிய தீமையெல்லாம்
போராமலென்முன்பு பிறங்கநைவேன்
ஓராதாமின்றுனே யன்றியெனக்
காராவமுதாய வரும்பொருளே. 2

நல்லானொருதந்தையை நாடிவரும்
பொல்லாமகனிற்கொடி யேன்புலையேன்
எல்லாமறியுந்திரு வுள்ளமிரங்
கல்லாயெனிலார்புகல் ஆண்டவனே. 3

பண்ணாடுமொழிச்சியர் பால்மயலே
உண்ணாடியொழிந்தன நாள்களெலாம்
கண்ணாடியதண்ணருள் காட்டுதியால்
விண்ணாடர்தொழுங்கழல் வித்தகனே. 4

அன்றஞ்சுறுதீநா காழவரும்
என்றஞ்சிமலங்கி யிடர்ப்படுவேன்
உன்றஞ்சமலாலொரு தஞ்சமிலேன்
இன்றஞ்சலெனாவரு ளெம்பரனே. 5

பொல்லாவுலகத்தொடு போரிடவும்
மல்லாடிதயத்தை மலைத்திடவும்
வல்லாரெவர்உன்னருள் வாய்த்திலரேல்
எல்லாம்வலயேசு தயாபரனே. 6

பன்னப்படுபாதகர் பாருலகில்
என்னிற்பெரியாரிலை யென்னநினைந்
தின்னற்படுபாவி யெனக்குருகி
மன்னித்தருள்வாய் மனுவேலரசே. 7

வல்லாயுனருட்செயல் வாழ்த்திடவும்
கல்லாயவெனெஞ்சு கனிந்திலதே
எல்லாமுடையாயுனை யெய்தும்வகை
சொல்லாயருணாத சுராதிபனே. 8

உச்சிட்டமுவந்தலை குக்கலென
நச்சிட்டபுலன்களி னாளுமனம்
வச்சிட்டலைவுற்று மயங்கிடவோ
முச்சிட்டரோடொன்றிய முன்னவனே. 9

என்போலடியாரிடர் தீர்த்தருளற்
குன்போலுரியாரிலை யுண்மையதால்
பின்பேயெறியென் பிழையத்தனையும்
அன்பேயுருவாகிய ஆரணனே. 10

ஆகாமியனெற்கரு ளாயெனிலித்
தேகாதிசதுஷ்டய சிக்கறுமோ
ஆகாயமகன்றவ னிக்குருகி
மாகாயமெடுத்த வரோதயனே. 11

முப்பற்றெனுமார்கலி மோதலைவாய்த்
துப்பற்றுழல்கின்ற துரும்பெனுளம்
ஒப்பற்றுயருன்னடி பற்றவருள்
எப்பற்றுமிலாத சர்வேசுரனே. 2

உன்னாருளொன்றடி யேற்குளதேல்
என்னாலடையாப்பயன் யாதுசொலாம்
இன்னேதிருவுள்ள மிரங்குதியால்
பொன்னாடுதொழுங் குணபூதரனே. 13

முந்தாரணநூனெறி முற்றுமிகந்
தந்தோகொடும்பாதக னாயினன்யான்
நந்தாவுனருட்பிர சாதநலம்
தந்தாதரியேசு தயாபரனே. 14

நன்றேதுமிலேனுயிர் நாமறுநாள்
இன்றோவலதெப்பொழு தோவறியேன்
என்றோகருணைக்கிலக் காகிடுவேன்
பொன்றாநெறிகாட்டிய புண்ணியனே. 15

சிந்தாகுலமும்முகு செம்புனலும்
ஐந்தாகியகாயமு மாக்கைபடும்
சந்தாபமுமேனுனக் குத்தமியேன்
வெந்தீவினைகாண்விபு தாதிபனே. 16

ஆண்டாயிரமாயிர மாயுள்படைத்
தீண்டோரரசா யுலகாளினுமென்
மீண்டாருயிர் பெற்றனை மேவிலரேல்
மாண்டாருயிரீந்த மகாகுருவே. 17

அல்வந்தமனத்தின னாயினுமுன்
சொல்வந்துதெருட்டி யதித்துணைநீ
நில்வந்தனமைய நினைந்துனருட்
செல்வந்தனையீதி ஜெகத்குருவே. 18

தேடும்படியும்பர் திகாந்தமெலாம்
ஓடுந்தமியேனுள மாவுனையே
நாடும்படியோர்வரம் நல்கியுயர்
வீடுந்தருவாயருள் வித்தகனே. 19

படியேன்கனியேன் பணியேன்விழிநீர்
வடியேனொருநாள் மறவேன்மறம்நான்
கொடியேனெனினுங் குமரேசவுனக்
கடியேனடியேனருள் வித்தகனே. 20

நஞ்சத்தைநிகர்த்தெனை நாளுநலி
நெஞ்சத்தையடக்கல் நினக்கரிதோ
கஞ்சத்தைநிகர்த்த கழற்றுணையால்
வஞ்சத்தையடக்கிய மாதவனே. 21

என்னீதியெனச்சொல யாதுமிலேன்
உன்னீதியடைந்தென தாவியுய
இன்னேதிருவுள்ள மிரங்குதியால்
மன்னேயருள்பொங்கு மகோததியே. 22

நீரின்றமையாதுல கத்துநெறி
வேரின்றமையாது வியன்றருநின்
பேரின்றமையாது பிறங்குகதி
ஆரின்றெனைமீட்ப ரரும்பொருளே. 23

நாவாரமொழிந்து நயந்துனடி
பாவாரமிலைந்து பழிச்சவருள்
ஜீவாரமணீய செஞ்சொற்கவிஞர்
தேவாரமிலைந்த செழும்புயனே. 24

கழியாதகடுந்துயர் கைவரினும்
ஒழியாதவிஸ்வாச முவந்தருள்வாய்
பழியாதுமிலாதரும் பாடுபுணர்ந்
தழியாதநலந்தரு மாண்டவனே. 25

வெங்கானலைநீரென வேட்டிடல்போல்
இங்காதரமுற்றுன தின்னருளென்
பங்காகவுனதவோர் பாமரனென்
மங்காதநலந்தரு மானவனே. 26

ஆவிக்குறுவெந்துய ராற்றுகிலாப்
பாவிக்குனையல்லது பற்றுளதோ
காவிக்குநிகர்த்த கருங்கண்மரி
தேவிக்கொருபுத்ர சிகாமணியே. 27

போராடுமிகத்துயிர் பொன்றிடுநாள்
சீராடுபொலன்கழல் சேர்ப்பைகொலோ
காராடுபொழிற்கணோர் காலுதிர
வேராடுமெழிற்றிரு மேனியனே. 28

கையேன்பிணியுற்றுழல் காயமிதை
எய்யேன்பலதீவினை யீட்டிடவும்
செய்யேனெனதன்புன சேவடிக்கே
ஐயாஇஃதென்னிலை யாரணனே. 29

பின்னித்திகழென்பிழை யத்தனையும்
மன்னித்திலகும்பத வாழ்வருள்வாய்
நன்னித்திலமொத்த நகைத்துவர்வாய்க்
கன்னித்திலகந்தரு கான்முளையே. 30

நேமிக்கிரிபோனிமிர் நீசவினைக்
காமிக்குயர்விண்கதி கூடுவதோ
சாமிக்கொருசேய்தயை கூர்பரிவால்
பூமிக்கிடர்தீர்த்தனை புண்ணியனே. 31

நெஞ்சக்கருமைக்கனி னைப்பதனை
வஞ்சக்கடுவாய்வச னிப்பதிலாப்
பஞ்சைக்கருள்பல்கிடு மோபரமன்
மஞ்சக்கனியாய மனோகரனே. 32

என்றுங்களவிற்பயில் நெஞ்சினன்யான்
நன்றுன்கழல்நீழலை நண்ணுவனோ
பொன்றும்பொழுதிற் புகுவாய்பரதீ
சின்றென்னுடனென்றரு ளெம்பரனே. 33

வருமித்தரியாய வழக்கிடுவோர்
கருமத்தையுமெய்யுறு கக்ஷிதனின்
மருமத்தையுமோருதி வந்துதவென்
தருமத்துரையாய தயாநிதியே. 34

பாசானெருதுக்கள் பகைத்துவளைத்
தேசாவருபோழ்தெனை யஞ்சலெனப்
பேசாவருணல்கிய பேருதவிக்
கீசாவடியேன்புரி யீடுளதோ. 35

பகல்புக்கநிலத்திருள் பாறுதல்போல்
இகல்புக்கவிடந்தெரி யாதிரிய
புகல்புக்கவெனக்கருள் பூததனையே
அகல்புட்கரவீறட லாரணனே. 36

சாலத்தின்முதிர்ந்த சழக்கர்தொழின்
மூலத்தையறிந்து முனிந்தெளியேன்
ஓலத்தையுவந்துத வுற்றனைமா
சீலத்தவஞான திவாகரனே. 37

மாயாபிரபஞ்ச வனத்திருளிற்
பேயோடுநடம்புரி பித்தனெனைக்
காயாதுகசிந்து கடைக்கணியென்
தாயேதரணிக்கொரு தாரகமே. 38

முன்பாக்கியதீமை முதிர்ந்துதினம்
துன்பாக்கியநோவு துடைத்தருள்வாய்
என்பாக்கியநீயல தில்லைசுகம்
நன்பாக்கியநல்கு நராதிபனே. 39

மறுத்தாயெனமுன்னொரு மாதவனை
வெறுத்தாயலையென்னுறு மவம்பிழையும்
பொறுத்தாயெனிலுன்புகழ் மற்றதைவிட்
டொறுத்தாயெனிலுன்னுள முத்தமனே. 40

ஐயோவுலகத்தென தாயுளினாட்
பொய்யோகனவோவெனப் போயினவே
சையாமரணத்தப யாஸ்தமளித்
துய்யானவனத்தெனை யுய்த்தருளே. 41

இருமைக்கிடையாய விருட்கடலுக்
கொருமெய்ப்புணையுன்னிரு சேவடியே
அருமைத்துணையெற்கமை யத்துதவென்
தருமத்துரையாய சதோதயனே. 42

மரணம்வருமேவரு மேயெனவுட்
கரணம்பதையாக்கவ லுங்கடையேற்
காணம்பிறிதின்றர விந்தமலர்ச்
சரணஞ்சரணந்தயை யாதிபனே. 43

ஜெகததுக்கொருரக்ஷக னுய்ச்சிலுவை
முகத்திட்டியாக்ஷணை முன்புறவென்
அகத்தேவிசுவாச மலங்குவதென்
இகத்துன் னுயிரெற்கரு ளெம்பரனே. 44

அன்போடுசெயுங்கிரி யைத்தொடரார்ங்
துன்பால்விசுவாச முரம்பெறவும்
முன்பாவமனைத்து முருக்கியொழித்
தென்பாலருள்யேசு தயாபரனே. 45

அந்தத்தையடுத்தன னஞ்சலெனு
முந்துற்றுன்முகத்தொளி வீசியென
சிந்தைத்திடனல்கிமெய்ச் சீவனிலை
தந்துற்றநலம்புரி சத்தியனே. 46

பொல்லேனிவனென்று புறக்கணியா
தெல்லாநலமாக்கி யிரக்ஷணிய
நல்லாறுபிடித்து நடத்தினையென்
சொல்லாலடங்காது சுராதிபனே. 47

குணித்தாய்குருதிக்கெனக் கொண்டடியேற்
பிணித்தாய்பிணித்தீரிரு பான்வருடம்
நணித்தாயதுநாயக நாயடியேற்
கணித்தாய்வினைதீர்த்தரு ளச்சுதனே. 48

எங்குஞ்சுவிசேஷ விருஞ்சுடரே
பொங்கிப்பொலியத்தரு மம்புவியில்
துங்கச்சபைதுய்க்க நல்லாவியருள்
செங்கோலுலகைச்செயங் கொள்ளுகவே. 49

உண்மைத்திருவாக்கொளி ஞானமெனு
எண்மெய்க்குணமல்கிய வீசனில்வந்
தொண்மைச்சுடரா யுலகுய்யநிகழ்
வண்மைப்பொருள் வாழியவாழியவே. 50

குமாராநுபூதி முற்றிற்று.

# 3. சந்நிதிமுறை.

இதன் பின்வருகிற முப்பத்துமூன்று பாசுரங்களிலும், தேவஸ்துதி, ஸ்தோத்திரம், ஜெபம், மன்றாட்டு, பாவஅறிக்கை, மெய்மனஸ்தாபம், வேண்டுகோள், ஒப்படை இத்யாதி விஷயங்களைத்தவிர வேறெந்த வீண்சொற்களாவது, அவசரமில்லாதவும், அடாதவும் புனைந்துரைகளாவது யாதொன்றுமில்லை. இவைகளுக்குப் பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தங்களென்று பெயர். சற்று நீளமான விருத்தங்களாயிருப்பினும் சங்கதியின் தொடர்பைக் கவனித்துப் படிக்கிறபக்ஷத்தில் வெகு சுலபமாய் மனப்பாடமாகும். கருத்தோடு கவனமாய் வைகறைப்பொழுதில் இயன்றவளவில் கூடிய இசையோடு படிக்க முயன்றுவருவோருக்குத் தேவானுக்கிரகத்தினால் மனசு ஒருமுகப்பட்டுக் கரைந்து உருகும், பெருமூச்செழும், கண்ணீர் சொரியும், நாவு குழறும், உள்ளத்தில் ஆவியின் அனல் மூளும், பரம தயாளுவாகிய ஸ்ரீ கிறிஸ்துவின் அன்பு உள்ளத்தில் நிறையும். வேதிய ரொழுக்கம் விசுவாசத்தில் வெளிப்படும். இவற்றை உண்மையாய் நம்பி முயற்சி செய்துவருவோர் சிலநாளில் அநுபவத்தி லறிந்துகொள்வார்கள்.

நினைத்தது முடிக்கின்ற சர்வசா மர்த்தியமுள
நிருமலச் சித்தை யெங்கும்
நிறைகின்ற பரிபூர ணானந்த வஸ்துவை
நிராதார மான வொன்றை
எனைத்துமா சற்றபரி சுத்தநிஷ் பக்ஷமொ
டிலங்கு நீதிப் பிழம்பை
எப்பொருளு மின்றியே சுத்தசூ னியமா
யிருந் தவக் காலத்திலே
அனைத்துலக மும்விவித பேதங்க ளாயசர
வசரங் களும் படைத்த
அளவிலா ஞானவே தாந்தமுத லைத்தமிய
னாகாமி யத்தை நினையா
தெனைத்தடுத் தாட்கொண்ட கருணைப் பிரவாகத்தை
யெண்ணரிய மகிமைத் திரி
யேகத்து வத்தையுயர் மாகத்தனைப் பணிந்
தென்று மஞ்சலி செய்குவாம். 1

தீயநர கக்கதவ டைத்ததா ரடைபட்ட
செப்பரிய மோக்ஷ கதியின்
செம்பொற்க பாடந் திறந்ததார் நரரெலாந்
தீவினைக் காளா கவே

மாயம் புரிந்தசண் டாளப் பசாசனை
மடித்ததார் நன்றி யறியா
மாபாவி கட்கென்று மழியாத பேரின்ப
வாழ்வருள வேழை மருவாய்
நேயமொ டுதித்துநன் னெறியையுப் தேசித்து
நீசர்கட் காய்ப்பிணை சொலி
நின்றதார் வருதேவ நீதியின் றண்டனையை
நேர்ந்தரிய பாடடைந் தைங்
காயம் படச்சிலுவை மீதுபிரா ணத்தியா
கஞ்செய்த தார்கொ லந்தக்
கருணா கரன்றனிரு சரணார விந்தமலர்
கருதி யஞ்சலி செய்குவாம். 2

உன்னத மகத்துவ பரத்துவ திரித்துவத்
தொன்றான தெய்வத் துவம்
உத்தம மிகுத்தபரி சுத்தசுகு ணத்துவ
முயர்ந்தமெய்ஞ் ஞான தீபம்
மன்னுதற் பரதேவ சித்தபர மார்த்தமாம்
மாபரம ரகசி யத்தை
மனுவுயச் சாசுவத மானசா தனமாக
வரைவித்த கருணா லயம்
பன்னரிய முத்திநெறி யுய்த்துமெய்ப் பத்தரைப்
பாவபந் தத்தி னீக்கிப்
பவித்திர மளித்துமுற் றும்பாது காக்கின்ற
பரமாத்ம சித்ஸ்வ ரூபம்
என்னிதய மூடெழு மலத்திரய விருட்படல
மிரியவிரி சுடர் பரப்பி
இனிதாக வமருமொரு புனிதாவி செயல்நினைந்
தென்று மஞ்சலி செய்குவாம். 3

---

நில்லாது காயமிது புல்லாகு மென்றுநா
னினையாது போன போக்கில்
நெஞ்சத்தை விட்டென்னை வஞ்சித்து நீதந்த
நியமத் தையுங் கடந்து
செல்லாத வழியூடு சென்றுமதி கெட்டுத்
திரிந் தயரு நாளிலுனது
திவ்விய கடாக்ஷமுற வுன்றஞ்ச மாய்வந்த
தீயசண் டாள னேனை

எல்லா ரிலுங்கொடிய பொல்லாத பாவியென்
றெள்ளாது திருவு ளத்தே
எனையுமொரு பொருளாய் மதித்தடிமை யாக்கினவுன்
னேராள மான வன்பை
பல்லா யிரங்கோடி நாக்கொண்டு புகழினும்
பகருதற் கெளி தாகுமோ
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 1

ஆராய வென்றுன்னி வேதாக மத்தையென்
னஸ்தந் திறந்து வைக்கும்
அக்ஷரங் களையுமிரு கண்காணும் வாய்விண்
டவற்றைப் படித்து ரைக்கும்
நேராக வந்துனது கிருபாச னத்தண்டை
நின்று பணியு முழங்கால்
நீசனே னிதயமோ வேறுய லைந்துபோம்
நீசெய்த நன்றி நினையா
தோராது பாவத்தை யென்னைக் கெடுக்கின்ற
வுட்பகை யிதன்றி யுளவோ
உள்ளக் கருத்தறியும் வள்ளலுன தருளிலா
துய்வழி யிலைக் கடைக்கண்
பாரா திருக்கில்வே றூராத ரிப்பர்சொல்
பக்ஷமிகு கர்த் தவ்யமே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 2

கல்லான ஹிருதய முடைந்துருகி யிருவிழிக
ளுழ்ந்துகண் ணீர் சொரியவே
கையுச்சி மேன்முகிழ்த் தஞ்சலித் தங்கபுள
காங்கித மெழும்ப நின்றே
எல்லா நலத்துக்கு மூலகா ரணமாய
வெந்தை நின தருளையுன்னி
ஏழையே னுத்தழு தழுக்கவன் பொடுபணிங்
தெந்நாளு மேத்த வுன்றன்
நல்லாவி யைத்தந்து திரமான விசுவாசம்
நல்கியிக லோக போகம்
நாடாது பரலோக போகமே விழைகின்ற
நன்மனம் நிலைக்க வருள்வாய்

பல்லூழி யூழியொரு கணமாக வலகிடும்
பார மார்த்திக மோனமே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 3

ஆகாமி யத்திலே செத்துக் கிடந்தவெனை
யாவியி லுயிர்ப் பித்தனை
அஞ்ஞான விருளொடு கண்கெட் டலைந்தவெற்
கவியாத வொளி காட்டினை
மாகாத கப்பேயி னடிமையாய்ப் போனவெனை
வலியப் பிடித் திழுத்துன்
மகிமைக் குயர்த்திக் கிறிஸ்துவுக் குள்ளெனையு
மைந்த னாப் பாவித்தனை
தேகாதி பிரபஞ்ச நச்சித் திரிந்தெனைச்
சேவியாப் பாவி யேற்குத்
திருவுள மிரங்கிநீ செய்தவிந் நன்றியைச்
சிதையாத சிந்தை தருவாய்
பாகாயென் னுளமூடு மதுரிக்க நல்லருள்
பழுத் தொழுகு ஜீவதருவே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 4

மாதா கருப்பத்தி யானுற்ற கணமே
ஜன்மப் பாவம் வந்துபற்ற
மண்ணிற் பிறந்தெலாத் துர்க்குணமும் வரவா
மலிந்து துன் மார்க்கனாகி
வாதாடு நன்மனை சாக்ஷியை மழுக்கிமூ
வாசையால் மதி மருண்டு
வரையாது வைகலு மனந்தபா வஞ்செய்து
வாணாளை வீண் கழித்தேன்
ஏதாகி லுஞ்சிறிய நன்றிலே னென்வினை
யெனைக் கண்டதென் செய்குவேன்
எந்தா யுனக்கொளித் தெங்கோ டினும்பிழைப்
பெஃதுமிலை யேழை யுன்றன்
பாதார விந்தமே கதியென்று கிட்டினேன்
பக்ஷமொடு ரக்ஷி யையா
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 5

இலகுபுகழ் பெற்றேக சக்ராதி பதியா
யிருந்துஜெக முழு தாண்டுமென்
யாவரு மதிக்கவே சன்மார்க்க நிலைநின்றி
ரும்பெயர் படைத்து மென்ன
உலகூடு பலகால நிர்ச்சிந்தை யாய்ச்சரித்
துலவா திருந்து மென்ன
உயர்ககன ஜோதிகளி னில்லைமயர் வறநாடு
மொள்ளிய விவேகி யாயென்
அலகிலாப் புவனங்க ளெல்லாம் படைத்தளித்
தாள்கின்ற வைய வுனையும்
ஆன்மகோ டிகளுய்ய நீதந்த மகவையு
மறிந்துமன மொழி மெய்களால்
பலகாலு மேத்திப் பணிந்துனைச் சேவியாப்
பக்ஷத்தோர் பயனு மின்றே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 6

தீதுமுயல் பாதகக் கூளிகர்ச் சிக்கின்ற
சிங்கேறு போல யாரைத்
தின்னலா மென்றயதி நாடியெங் நேரமுந்
திரிகின்ற துறவு காட்டிச்
சூதுபுரி யுலகமு மென்னைக் கெடுக்கத்
துஜங்கட்டி நிற்கு மாலோ
துர்ச்சில மெல்லாஞ் சுரக்கின்ற விதயமுந்
துரோகஞ்செய் கின்ற தந்தோ
ஏதுமவ காசமிலன் வேறுதுணை யிலனிந்த
ஹித சத்ருவை ஜெயிக்க
எம்பிரானே யுன்னை நம்பினே னம்பினே
னெளியேற் கிரங்கி முற்றும்
பாதுகாத் தெனையாள்வ துன்பார மையவொரு
பற்றில்லை வேறறி வையே
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பரமார்த்த பரம நிதியே. 7

எரிசின மிகுக்கவே பரமதத் வேசிக
ளெழும்பிவந் தாதாளி யிட்
டென்பிராண னுக்குலய முண்டாக மாகுரூர
ஹிம்ஸைக் ளியற்றி னாலும்

விரிசுடர்ப் பரிதிமதி தாரகா கணமிரு
விசும்பொ டைம் பூதபேத
வியனுலகம் யாவும்வெந் தழியினு மொழியாத
விசுவாச மொன் றருளுவாய்
தரியலர் வளர்த்தசெந் தழலூடு லாயவத்
தாஸரொரு மூவ ருக்கும்
சண்டைவெஞ் சீயமுழை யண்டையிற் றள்ளுண்ட
தானியேல் தீர்க்க னுக்கும்
பரிவுற்று நீநல்கு விசுவாச மேமுடிவு
பரியந்த நின்ற தன்றோ
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பராமார்த்த பரம நிதியே. 8

காருற்ற முகிலென்ன யான்செய்பவ மானதக்
காட்சிக்கு விஷைய மாகி
கனமான பயபீதி தருதலா லென்மனங்
கவல்கின் ற தோரோர் வேளை
சீருற்ற வையவுன் றிருமதலை கருணையைச்
செயலையருண் மொழியை யுன்னித்
தேறுமொரு வேளைமற் றெந்நேரமும் பொலா
ஜெகமாயை மூடி யுலவை
நேருற்ற சருகெனச் சுழல்கின் ற தறிவையே
நின்னருட் கன்றி யிந்த
நின்மூட மனதைத் திருப்பி நன்னிலையினி
னிறுத்த வென்னால் முடியுமோ
பாருற்ற ஜீவருக் குருகியொரு மகவையும்
பாராத பரம தியாகி
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
பராமார்த்த பரம நிதியே. 9

சீர்கொண்ட மகிமைத்திரி யேகத்வ தேவநின்
றிருநாம துதி யோங்கவும்
ஜெகமெலாம் பேசுவின் றிருவடி வணங்கவுந்
திவ்யாவி செயல் மலியவும்
ஏர்கொண்ட நின்றிருச் சபைவிருத் திக்கவு
மிதரமா மிருண் மதங்கள்
எல்லாநிர் மூலமாய்ச் சத்தியசுவி சேஷவொளி
யெங்கும் பிர காசிக்கவும்

பேர்கொண்ட வாரிதிமுந் நீர்கொண்டு நிறைதல்போற்
பெரும்நின் றன்னை யறியும்
பேரறிவு புவிமுழுது நிறையவும் பலஜாதி
பேதங்கள் கெட் டொழியவும்
பார்கொண்ட வேந்தர்செங் கோல்கொண்டு ராஜ்பபரி
பாலனஞ் செயவு மருள்வாய்
பக்தஜன பரிபால நித்யமவ ரனுகூல
ப்ரமார்தத பரம நிதியே. 10

---

## ஞான சம்பந்த குரு.

நீயா ருனக்கெந்த வகையிலென் னோடுறவு
நினதுவா சஸ்தலமு மிங்
நிலவுலக மன்றுநீ தேவாதி தேவன்நான்
நீசநர புன்கிருமி யாம்
மாயா பிரபஞ்சமு முன்றிரு வுளத்துநினை
வாகவெம் மாத்திரங் காண்
மற்றதிலோ ரணுவுக்கு நிகரிலே னென்னையு
மதித்துனுயிர் மாய்க்க வந்தாய்
தாயேனு மகவின்பொ ருட்டுயிரை யீவளோ
சார்வதா நன்றி கெட்ட
சண்டாள னுக்குன்னை யல்லாம லிப்பெரிய
தண்ணளியை யார் காட்டுவர்
நாயே னிவ்வன்பினை மதித்துணர்ந் தீடுசெய
நணிசிறிதும் வல்ல னல்லேன்
நரசரீ ரங்கொண்ட வரராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 1

முள்ளுமுடி யாகியுன் சென்னியிற் றைத்தது
முரண்கோல தாகி யுன்றன்
முடியீ தடித்ததுவு முமிழ்நீரே தாய்த்திரு
முகக் கஞ்ச மலர்தோய்த்ததும்
எள்ளுபழி மொழியாகி யஞ்செவி நிறைத்ததுவு
மீனர்கர மாகி யந்தோ
எழிலுறு கபோலத் தறைந்ததும் விலாவிலோ
ரீட்டியாய் நுழைவுற் றதும்
விள்ளபய வாதாஸ்த முய்யதிரு வடிநோக
வெவ்விருப் பாணி யாகி
வேதனை விளைத்ததும் பாதகப் புலையேன்
விளைத்த தீவினை யல்லவோ

கள்ளியெனை யுள்ளென்ற கள்ளனுக் கூர்த்தகதி
நல்கு கருணை மூர்த்தமே
நரசரீ ரங்கொண்ட வராஜனேபரம
ஞானசம் பந்த குருவே. 2

அந்தோ வறக்கொடிய நிர்ப்பந்த பாவிநான
னகவுனை யன்றி யிந்த
ஆபாச மாணஜட லத்தினின் றெனைமீட்
டனுக்கிரகஞ் செய வல்லர்யார்
எந்தாய் பராமுகம் பண்ணினு லேழையே
னீடேறும் வகை யெங்ஙனம்
என்னிதய நோவுதிரு வுளமறிய வுங்கணீ
ரிருவன சபத மறியவும்
சிந்தா குலந்தவிர்த் துலகுதர வொண்ணுத
திவ்விய சமாதான மென்
சித்தமிசை நிலைகொளத் திருவிழிக் கடைசிறிது
திறவா திருப்ப தென்னே
கந்தாத கருணைப்பிர வாகமே யெம்மனோர்
கவிலரிய வன்பு மயமே
நரசரீ ரங்கொண்ட வராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 3

ஜென்மத்தி லேயுற்ற கர்மாநு சாரமோ
திரிகரண துர் ஜேஷ்டையோ
திடசித்த மின்மையோ விசுவாச ஹீனமோ
ஜெகசால விப ரீதமோ
உன்மத்த மோபாப கன்மப் பழக்கமோ
ஒன்றுமென் றுரோ வேளையில்
ஊர்ச்சித மடைந்தகச் சாக்ஷியை மழுக்கியெனை
யூர்த்தகதி நெறி விலக்கி
வன்மித்தறக் கேடு சூழ்கின்ற தென்றுநான்
மாறுத நிலையி னின்றுன்
மலரடிக் கந்திலே யன்புநிக ளங்கொண்டு
மனமத்த யானை கட்டி
நன்மைத்திர வியமுண்டு சித்தசாஞ் சல்யமற
நல்லருள் சுரப்பை யையா
நரசரீ ரங்கொண்ட வராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 4

மூட ரியல்பிற்சிறந் தாகாம்ய நொதியிலே
மூழ்கி யின்னுங் கெடாமல்
முந்துசிலு வைக்குவந் துன்றிரு வடிச்சுவடு
முன்கண்டு பின்றொடரவும்
பாடரிய வுன்றிருப் புகழ்பாடி யானந்த
பரவசக் கூத்த னாகிப்
பக்திவிசு வாசத்தி னாலுனைவி டாதுநனி
பற்றிப் பிடித் தனுதினம்
கூடரிய மனநிட்டை கூடிச் சுகிக்கவுங்
குன்றியுயிர் பொன்று நாளுநன்
குரைகழற் றுணைநீழல் விரவியென் னாத்துமங்
குலவியுய் யவு மருளுவாய்
நாடரிய ஞானமே தேடரிய மோனமே
நவிலரிய சுகுண நிலையே
நரசரீ ரங்கொண்ட வரராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 5

சுடுகின்ற சிலகவலை யோடுபல பிணியுந்
தொடர்ந்து பிடிக்க வுள்ளம்
துன்பவெஞ் சுழலிலே யுழல்கின்ற திரணமாய்ச்
சோகமுற் றிடவேழை யான்
படுகின்ற பாடெலாம் பாரா திருக்கவிழி
பாரநித் திரை கொண்டவா
பாவியேற் கஞ்சலென் றொருமொழி பகர்ந்திடப்
பவளவித ழலராத தென்
கடுநின்ற வள்ளமென் கைநின்ற கற்றவுன்
கருணைமடை யடை பட்டவா
கங்குல்பக லாய்க்கூவி வாயுஞ் சலித்ததே
கன்னம் புகாத தென்சொல்
நடுநின்ற நாயனே வடுநின்ற காயனே
நலிவுதீர்த் தெனை யாளுவாய்
நரசரீ ரங்கொண்ட வரராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 6

பொல்லாத நீசப் புலைப்பாவி வஞ்சனை
புரிந்தசண் டாள னிதயப்
புற்றிடங் கொண்டுவள ரிச்சையா டரவைநனி
போற்றிவரு புத்தி யீனன்

கல்லாது சுருதியை யுபேக்ஷித்த மூடன்முன்
காப்பியக் கவிகள் கூடிக்
கட்டிய வறுங்காதை கற்றுவா ணாள்வீண்
கழித்திட்ட மா காதகன்
சொல்லாத பொய்யுமுண் ணினையாத கேடுந்
துணிந்து செய்யாப் பாவமும்
சுத்தமா யில்லைமுற் றும்பாவி நானுனது
துணைமலர்ச் சர ணடைந்தேன்
நல்லாய் மனக்கினிய சொல்லாய் மணிப்பருளி
நாளுளும் ரக்ஷி யையா
நரசீ ரங்கொண்ட வராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 7

அம்புவியி லேதனு வெடுத்துப் பிறந்தநா
ளன்றுதொட் டின்று காறும்
ஆகாத தீவினைக் காளான தன்றியோ
ரணுநன்மை செய்து மறியேன்
வெம்பிமன வேதனையோ டுண்டுடுத் துக்கவலை
மேன்மேலு மதி கரிக்க
வியாதிமுத லாயபல துன்பமு மடர்த்தெனை
வெருட்ட மெலிவுற் றுடைந்தேன்
இப்பரிற் கதியற்ற வேழையா னுயினு
மிகந்துதள் ளாதெம ரொடும்
என்னையாட் கொண்டநின் பேருளை நித்தமு
மெண்ணி யெண்ணித் தேறுகேன்
நம்பிய தொழும்பனென் பிழைபொறுத் துளமாயி
னல்லசுக வாழ் வருளுவாய்
நரசீ ரங்கொண்ட வராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 8

பாவவுணர் வாதிய குணங்களுண் டாத்துமப்
பசிதாக மெத்த வுண்டு
பரிசுத்த நிலைநின் றிரக்ஷண்ய மடையவெகு
பாரமாங் கவலை யுண்டு
தேவபய முண்டுனது திருவடிக்கே தொண்டு
செய்யமன முண்டைய நின்
திருவருளின் மாட்சியே யாயினு மிகந்துபல
தீயநெறி செல்ல வென்னை.

ஏவுமொரு கேடான தத்துவ மிடைக்கிடையென்
னிருதயத் தூ டெழும்பி
இகலிமே லிடுமனர்த் தங்தொலைய வேழைக்
கிரங்கியொரு வார்த்தை நவில
நாவசைய மாட்டாத காரணமி தென்னுன்னை
நம்பிய தொழும்ப னலனோ;
நரசீ ரங்கொண்ட வரராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 9

சாதன சதுஷ்டைய மடைந்தீஷ ணாத்திரய
சம்பந்த மொருவி ஞான
சற்குரு வனுக்கிரக மாக்ஷியால் ஜீவாத்ம
தற்சுபா வந் தெரிந்து
சேதன மகத்வபரி சுத்ததிரி யேகத்வ
தெய்வநிர் ணயமு நீதி
திவ்யபரி பூரண இரக்க சமரசமுந்
தெரிந்துதெளி வுற்று நினது
பாதநளி னத்தையிரு தயமீ தலர்த்திப்
பராவிவரு ஜீவன் முக்தர்
பரிசுத்த வைதீக நெறிநின்று முடிவிலே
பரசுகா னந்த மடைவர்
நாதநின் னருளினா லடியேற்கு மிந்நிலை
லபிக்கநல் லாவி யருள்வாய்
நரசீ ரங்கொண்ட வரராஜ னேபரம
ஞானசம் பந்த குருவே. 10

---

### யேசுநாயக ஸ்வாமி.

காசாசை கொண்டொருக் காலுன்னை யூதாசு
காட்டிக் கொடுத்த னன்முனம்
கள்ளரிற் கள்ளனா லுன்றொழும் பாயுனது
கருணா மிர்தம் பருகியும்
ஆசா வசத்தனாய் நித்தமு மனேகமுறை
யாகா மியம் புரிந்துன்
அன்புமய மானதிரு மேனியைச் சிலுவைமீ
தறைகின்ற துரோகி யையா
கூசா துன் னருளைக் குறிக்கொண்டு கூவுமெக்
கொடியபா வரையு நித்ய
கொந்தழல் சுடாது ரக்ஷிப்பதுன் னியல்பெனிற்
குவலையத் திடையெனைப் போல்

ஈசா மிகப்பெரிய பாவியார் புகழுனக்
கெனையி ரக்ஷிப்ப தன்றோ
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 1

அன்புமய மேகருணை யானந்த வாரியே
யருள்பொழி மழைக் கொண்டலே
ஆருயிர்க் குயிரான வமிர்தசஞ் சீவியே
யடியரித யாம் பரத்தில்
இன்புற வுதித்திலகு மெய்ஞ்ஞான பானுவே
யேத்தருஞ் சுகுண நிதியே
இதரசம யாதீத நிலையமே வானிழிந்
திம்பர்வரு ஜீவ நதியே
மன்பதை புரக்கநடு நின்றோங்கு ரக்ஷணிய
மாமேரு வேயென்று நின்
வண்புகழ் வழுத்திமெய் யன்பினொடு சிந்தைபர
வசமாகி யாவி யனல்கொண்
டென்புருகி யானந்த பாஷ்பஞ் சொரிந்துநின்
றேத்தவரு ளீவ தென்றோ
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 2

பிறவியிற் பிடிவாத கொடியவை ணவனுய்ப்
பிறந்துமுப் பது வற்சரம்
பிரபஞ்ச மயல்கொண்டு மூடாந்த காரப்
பிழம்பிலடை பட் டுழன்று
மறவினைக் காளாகி நெறிநிலாத் தூர்த்தமன
வாஞ்சைக் கிடங் கொடுத்து
மருளுற்று வறிதுநாட் செலவிட்ட நீசனெனை
மலாடிக் காட் படுத்திக்
குறைவிலாப் பேரரு ளளித்தின்று காறுங்
குறிக்கொண்டு காத்தி யெனினுங்
கொச்சைமதி யேற்கின்னு நன்றியறி யாக்கெட்ட
குணதோஷ மொழிய விலையே
இறைவலப் புறமிருந் தடியருக் காப்பரிந்
தென்றுமன் றாடு முகிலே
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 3

கண்ணீ ருகுப்பினு மானந்த பரவசங்
காணினுங் கவன மொன்றி
கருதரிய நின்சீர் புனைந்துகவி பாடினுங்
கன்மனங் கனிய நாளும்
உண்ணீர்மை யொடுமுழங் காலூன்றி நின்றுள்
ளுவப்பொடு ஜெபஞ் செய்யினும்
உள்ளுருகி யேபிறர்க் குன்னன்பின் மாட்சிமை
யுரைத்துரைத் தோல மிடினும்
தண்ணீரை வேட்டலையு மான்போல வினுமனோ
சஞ்சல நிவிர்த்தி நாடித்
தளருகின் றேனிதய தந்த்ரமல துன்னருட்
டாமத மெனப் படுவதோ
எண்ணீர்மை குன்றாத சித்தவிசி ராந்திநிலை
யென்றைக் கெனக் கருள்வையோ
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 4

அன்றன்று மனமொழி மெய்யொத்துத் துணிந்தியா
னுக்குதீ வினை மேருவை
அளியனை மயக்கியென் றலைமீ திருத்திவிட்
டாயுனை ளேக தேசம்
சென்றன வினித்திரும் பாததிலோர் கணமுமென்
செய்குவேன் றிரு வாக்கினால்
ஜீவசா க்ஷியும்விழித் தென்சிரோ பாரந்
தெரிக்கவாற் றாது நலிவேன்
நன்றியறி யாக்கொடும் பாவியேன் வருமோச
நாசத்தில் வீழா முனம்
நரஜீவ ரக்ஷணிய வொருதேவ மைந்தவெனை
நாடியஞ் சேலென்ன வந்
தின்றே தலைச்சுமை யிறக்கியா ளாக்கிநீ
யீடேற்று பதவி யருள்வாய்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 5

வானாதி யண்டபகி ரண்டப் பரப்பெலாம்
வாக்கொன்றி னால மைத்தாய்
மாபூத பௌதிக சிருஷ்டிக ளியற்கைவிதி
வழுவாது நிற்க வைத்தாய்

மேனு ளருக்கனையு நில்லென நிறுத்தினுய்
வேலைவழி விட விதித்தாய்
வெந்நாக வாய்நின் றிம் மண்ணுலகை விண்ணுலக
வீட்டுக் கிழுத் தருளினுய்
தானுன தற்பரா சர்வார்த்த சாதனு
தமியனை யலைக் கழிக்கும்
சண்டாள மனமைப் பிணித்துனருள் வட்டத்
தலஞ்சுழல வைத்த லரிதோ
ஏனோ திருக்கடை விழிக்கிலக் காகிலேன்
என்பாவ மென் பாவமே
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 6

ஆயுளிற் பாதிநித் திரைபோக வொருபாதி
யறியாமை யறிமடம் பூண்
டாக்கைக்கு வேண்டுவன தேடித் தினந்தின
மருந்திச் சுகித் தகோர
தீயவினை யேசெய்து போயதிவ் வளவிலே
ஜென்மசா பலிய நாடும்
சிந்தையுண் டாயருள் வசத்தா லிரக்ஷணிய
ஜீவவழி கூடி நின்றும்
தூயதிரி கரணமிலை பூருவதுர் வாசனை
தொடுக்கின்ற துள்ளத் திலும்
சுத்ததத் துவமொன்று போராட லாலமைதி
சொல்லவொரு சற்று மில்லை
ஏயவொரு பரமார்த்த நன்னிலையில் வைத்தென்னை
யீடேற்ற மரு ளீசனே
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 7

பொல்லாத நெஞ்சஞ் சுரக்கின்ற நினைவைப்
பொதிந்துள் ளடக்கி மறைவாய்ப்
புகலுவன் யாவுஞ்சன் மார்க்கசீ லத்தொடு
பொருந்தவுரை யாடி வெளியே
நல்லா றொழுக்கத்து நடைபோ னடித்துளவும்
நடலைப்பிர பஞ்ச நடையாய்
நாளெலாங் குறுகிவார்த் திகம்வந்து பற்றியெனை
நலியவாற் றுதயர் வனீ

தல்லாமன் மனமொழிமெய் யொத்தணுத் துணையேனு
நின்னடிக் கன்பு செய்த
அடியெனென வொல்லுமோ வையநீ யறியாத
அந்தரங்கமு முண்டு கொல்
எல்லா ரிலும்பாவி யையமிலை யாயினு
மேழையீ டேற்றி யருள்வாய்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 8

சென்றகா லத்தியான் செய்ததீ வினையெலாஞ்
சித்தம் பொறுத் தருளியும்
ஜீவதிரு முறையிலென் பெயரைக் கிறுக்காது
திகழப் பொறித்து வைத்தும்
நின்றகா லத்துநின் னெறிதவறி விழினுமெனை
நீக்காது கைதூக்கி யும்
நேர்வழி நடத்தியும் நின்றொழும் பென்றெனை
நெகிழ்ந்துகை விடாது காத்தும்
பொன்றுமமை யத்துத் தெருட்டியும் சரணிழல்
புதுக்குடி புகுத்து காறும்
புண்ணியா துணைநின்று ரக்ஷைசெய் தருள்வேறு
புகலிலே னென்ப தறிவாய்
என்றுமுனை யேகெஞ்சி மன்றாடி நிற்கும்வர
மீந்தா தரித்து மருள்வாய்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக ஸ்வாமியே. 9

அயலொன்று மின்றியே சுத்தசூ னியமாய
கண்ட வெளியாய காலத்
தநாதியாய் நின்றபர வஸ்துவே யுண்மையு
மவ்வுண்மை யே வஸ்துவும்
மயலின்றி யப்பரம வஸ்துவிட நின்றுவெளி
வந்ததிரு வாக் கநாதி
மைந்தனென் றாகவவ் வத்துவிலு மைந்தனிலும்
வந்தபரி சுத் தாவியும்
செயலிலே தந்தையாய் மைந்தனு யாவியாய்த்
திகழ்ந்துதிரி யேக பரமன்
சிருஷ்டிஸ்திதி ரக்ஷணிய செய்கையினில் மூவராய்ச்
சிந்தனையி லொருவ ராகி

இயலுலகம் யாவும் படைத்தளித் தாள்கின்ற
வீசனே யடியேற் கருள்
ஏகநா யகசருவ லோகநா யககிறிஸ்
தியேசு நாயக் ஸ்வாமியே. 10

சந்நிதிமுறை முற்றிற்று.

# 4 கிறிஸ்தவ மனோலய சாதனம்.

இரக்ஷணிய போதம்.

பின்னுறத் திகழ்த்தும் பன்னிரு துறையிலும்
நன்னர் மனோலய நயமுரைத் தன்று.

ஆத்துமக் கவலையுள்ளா னொருவனுக்கு உத்தமக் குரவன் கூறும் நன்மதி.

உத்தமந் திகழு மேனி யொண்மதி நிதானி யென்னும்
வித்தகன் வரக்கண் டொல்லை விழுத்தகு மரபி னேற்றுச்
சித்தசஞ் சலமெற் குற்ற திறனெலாந் தெரியச் செப்பி
எத்திற மேனு நன்கொன் றியம்புகென் றிரந்து நின்றேன். 1

சேய்முக வாட்டங் கண்டு சிந்தனை கசிந்து போற்றுந்
தாயரின் முகந்தை வந்து தணப்பில்பே றன்புள் ளூறி
வாய்மலர்ந் தொழுகல் போலு மைந்தநீ கலங்க லென்னாத்
தூய ரக்ஷணிய போதந் தொடுத்துரை யாட லுற்றான். 2

உன்னுளத் தெழுந்த பாவ வுணர்ச்சியு முள்ளச் சான்றும்
முன்னுறீஇக் கடிந்த வாக்கு முழுமனஸ் தாப மாய
இன்னலு நினைவீ டேற்ற வெம்பிரான் குறிக்கொண் டுன்பால்
பன்னருங் கிருபை யுய்த்த பரிசென மனத்துக் கோடி. 3

ஞானநூ லனைத்துங் கற்று நற்கரு மங்க ளாற்றி
தூநடை பயின்ற போதும் ஜென்மத்தே தொடுத்து நின்ற
ஈனமாங் குணதோ ஷங்க ளியைதலால் யாவுந் தீதாம்
கானனீ ரருந்தித் தாகங் கழியுமோ கருதுங் காலை. 4

கருவிலே விடம்போற் பாவங் கலந்துபின் கதித்துப் பாழ்த்த
உருவினு மனுதி யந்தக் கரணத்து மொருவா தாக
மருவிநின் றுடற்றி நாளும் மாணபா தலத்தைக் காட்டித்
தெருவிலே விடுக்குந் தன்மை ஜெகங்கண்டு தெருளா தின்னும். 5

கற்பனை பத்து மோம்பிக் கைக்கொளல் கடமை யேயாம்
கற்பனை மீறிச் செய்யுங் கருமங்கள் பாவ மாகும்
கற்பனை காத்து மேனற் கருமங்கள் புரிவ தன்றோ
கற்பனை களுக்கு மேலாக் கதித்தபுண் ணியமாந் தேரில். 6

கண்ணிய கடமைப் பாட்டைக் கருத்துறச் செய்ய கில்லா
மண்ணியல் மாந்தரேம் யாம் மாசறு விதிக்கு மேலாப்
புண்ணியந் திரட்டி முத்திப் புரையில்பே ரின்பங் கூட
எண்ணிய வெண்ண மென்றும் ஏழைமைப் பால தேயாம். 7

தருவிதி விலக்கே யிந்தத் தரணியை யொருங்கு கூட்டி
வெருவரும் பாவ தோட வெஞ்சிறைப் படுத்திற் றம்மான்
திருவுள மிரங்கித் தம்மோர் திருக்குமா ரனை விடுத்துப்
பொருவரு மிரக்ஷை யீட்டி மீட்டனர் புவியை மேனாள். 8

ஜென்மநாட் டொடங்கி முற்றும் ஜீவநா ளளவும் பாவ
கன்மமாந் தீட்டு றாமுக் காரணமும் புனித மேய
தன்மறா பன்செய் தாக்குந் தபோபலங் கிடைத்தா லன்றி
நன்மையாம் ஜீவ ரக்ஷை நருக்கின் றாகு மன்றே. 9

பூதலப் பரப்பில் யாரிப் புண்ணிய மூர்த்தி யாய
மாதவ னென்னி லின்றும் வடுத்திகழ் மேனியோடு
தாதைபாற் சருவ லோக சரணிய னாகத் தங்கி
மேதினிக் கிரக்ஷை நல்குங் கிறிஸ்துவாம் விமலன் மேனாள். 10

மனிதஜீ வருக்குந் தேவ மகத்துவத் தினுக்கு மூடே
நனிதிகழ் மத்தி யஸ்த நரதேவ மூர்த்தங் கொண்டு
வனிதைபாற் றோன்றித் தூய வரன்முறை விதியை யோம்பிப்
புனிதஜீ வியத்தை யுய்த்த புதுமையே புதுமை யாமால். 11

உலகெலாஞ் சமழ்த்த பாவ மொருங்கொரு தனியே தாங்கி
விலகருஞ் சிலுவை மீது விண்ணின்று விழுத்த நீதி
அலகறு தண்ட மேற்றிங் குயிர்ப்பலி யமலற் காக்கி
நிலவுல கருக்கென் றுய்த்த நீதியே தேவ நீதி. 12

பொன்றிய புனித மேனி பூசமா தியினும் புக்கு
நின்றுமன் பகைகட் கெல்லா நித்திய ஜீவன் மல்க
வென்றியோ டுயிர்த் தெழுந்த விந்தையை விசுவ சித்துள்
ளொன்றுமெய் யடிய ரன்றோ வுன்னத பதம்பெற் றுய்வார். 13

இத்திறம் பரம ராஜ்யத் திளவர சாய வெம்மான்
உய்த்தர க்ஷணிய மார்க்கத் துண்மையை விசுவ சிக்கிற்
சித்தசஞ் சலம்போம் நீதி திகழ்ந்தொளி கிளைக்கு நின்னை
மொய்த்தபா பாந்த கார முற்றிலும் விடியு மன்றே. 14

ஆண்டகை நீதி யென்னை யடையுமா றெவன்கொ லென்னாத்
தேண்டுதி மெய்யன் போடு திகழ்விசு வாச முன்னிற்
காண்டகக் கவினிற் றென்னிற் கருணையாற் றொழுக்கீ தொன்றோ
வேண்டுநன் னிதியம் யாவும் வியனகப் புலந்தந் துய்க்கும். 15

நன்மைசால் தேவ மைந்தன் நடுநின்று நரருக் கேயாய்
வன்மைசான் மனுட தன்ம வரம்பறா தொழுகி நீதிப்
பொன்மலை குவித்துத் தம்மைப் புகல்புகுந் தவர்க்கு நல்குந்
தன்மையை நம்பிச் சேறி சான்றுமெய் யடியார் சங்கம். 16

கடைப்படு வன்க ணீசப் புலையனேன் கணிப்பில் பாவ
முடைத்தொழு நோயி னாக்கை முயங்கியேன் றுணிந்து முன்சென்
றடைக்கல மெனலாங் கொல்லோ வருவருக் காதென் கண்ணீர்
துடைப்பரோ புனிதரென்னா வையுறீஇத் துளங்கல் கேண்மோ. 17

பொருந்துவெங் கொடிய பாவப் பொறைசுமந் திளைத்துச் சிந்தை
வருந்துவீர் வம்மின் வம்மின் வந்திளைப் பாறி யென்னொ
டிருந்துண வருந்து மின்னென் றெம்பிரான் விளிக்கு மின்சொற்
றெரிந்திலை போலு மெம்பி செவிகொடு செவிகொ டின்னே. 18

உரைசெயற் கரிதெம் மைய னுபதேச மொழுக்கஞ் சீலம்
விரைசெறி கிரியை துன்ப மிருத்துவே தனையிவ் வெல்லாம்
புரையற விளக்கு மிந்தப் புத்தகங் கொண்ணீ யென்றீந்
துரைநிலை பிசகா திந்த வுலகொழிந் திறினு மென்றான். 19

கிறிஸ்தவ மனோலய சாதனம் முற்றிற்று.

## 5. பிசாசின் கிரியை—துர்ப்போதனை.

—X—

பிச்சுறு பேயி னிச்சக கெடுமதி
சிச்சியென் றெள்ளுந் திறமுடைத் தன்று.

சஞ்சல விதந்தரு சழக்குறு பிசாசம்
விஞ்சுபல மாயமித யத்துவிளை விக்கும்
நஞ்சனைய தீவினை நயக்கநமை யேவும
வஞ்சனை முயன்றுலவு மென்று நமருங்கில். 1

வேதாக மாதியைவி ரித்துணர வொட்டா
தேதாகி லும்முலக வேலேயி விழுக்கும்
வாதாடி யாடிநம் மனக்கரி மழுக்கும்
சூதா விடுக்குமதி துஷ்கிருத சூழல். 2

ஈட்டுபல தீவினையை யுள்ளுற வெடுத்துக்
காட்டுமிறை வன்பெரிய கருணையை மறைக்கும்
வீட்டுலக மின்றென வெருட்டுபு சந்தேகக்
கூட்டிலடை வித்துயிர் முடித்தினி துவக்கும். 3

சீமா னருட்குருசில் ஜேசுதிரு நாமப்
பூமா னமக்குதவு புண்ணிய பலத்துக்
கேமாறி நித்தியவி டுக்சணுற வெத்திக்
காயா துரக்குழிக விழ்த்துற வமிழ்த்தும். 4

தேவால யத்தும்நம சிந்தையை யிழுக்கும்
ஓவாம லேம்பொறியு வக்குமிரை யூட்டும்
ஜீவாதி பற்குதவு தோத்திர ஜெபங்கள்
நாவால்வி டுக்குமன நாடவிடுக் காதால். 5

வீட்டுவழி யன்றிதென வேய்த்துளம் வெருட்டிக்
கேட்டுவழி யுய்க்குமதி கேடுகள் படுக்கும்
சேட்டைபடு கோரணி யனந்தம்வகை செய்யும்
மீட்டுநல் வழிப்பட விடாதுகுரு டாக்கும். 6

பன்னரிய தீவினையி யற்றுபடு பாவி
மன்னியுமெ னுமனம்வ ருந்தியமன் றுட்டில்
என்னபய னுன்னத ரிரங்குவர்கொ லென்னுச்
சந்நிதி யடுக்கவும் விடாதது தடுக்கும். 7

உத்தமர் மருங்குகுறை கண்டுடன் விழுங்கக்
குத்திரமொ டேயுலவுங் கோளரியை யொப்ப
மத்திமரை வெஞ்சிறை மடுக்குமத பர்க்கு
மித்திரரை யொத்துலக வின்பநுகர் விக்கும். 8

பெருந்துயரி லேயவநம் பிக்கையில் விழுத்தும்
இருந்தன மிடுக்கிலுல கின்பளற மிழ்த்தும்
மருந்தனைய வைதிக வொழுக்கை மறப்பிக்கும்
அருந்துகிரு மிப்படுக ராழ்த்தும்வரை தாழ்த்தும். 9

இம்மாநி லத்தவ தரித்த குமரேசப்
பெம்மானை யுங்குறுகி மும்முறை பிதற்றி
அம்மாத கைந்திடமு யன்றதென லாயிற்
சும்மா விடுங்கொணா துர்ப்பல துரும்பை. 10

பிசாசின் கிரியை—துர்ப்போதனை முற்றிற்று.

## 6. நல்மனச்சாக்ஷி.

வள்ள லுய்த்த மாண்புறு மனக்கரி
உள்ளத் துறுத்தி யுரையா டின்று.

நம்பி நல்லுரை நன்றென நல்மனச் சாக்ஷி
எப்பி யாமிரு வேமல மொன்றுபட் டென்றும்
இம்பர் மெய்ப்புரு டார்த்தமி யற்றுவ மென்னில்
உம்ப ருற்றழி யாநல முண்ணுவ மோர்தி. 1

நன்று தீது நவிற்றுத லென்கட னாடி
நன்று னாற்றில் வரும்பய னுண்ணுவ னானும்
நன்றி கந்தனை யேல்வரு துர்ப்பய னண்ணோன்
நன்று கூறியு மீறினை யாதலி னண்ப. 2

ஆதி தொட்டென் னருங்கட னாற்றிய வென்னை
ஏதி லானென வெள்ளினை யென்மதி கொள்ளாய்
நீதி யுற்ற நெறியறிந் தாயலை நீசப்
பாதை பற்றினை பாவிய ரோடுற வாடி. 3

புனித ராய புரந்தர வேந்தினைப் போற்றாய்
மனிதர் கைப்படு மர்ச்சையைப் போற்றுதி வாளா
நனிதி கழ்ந்திடு நல்லற நச்சிலை நாளும்
துனிதி கழ்ந்திடு தீவினை யீட்டுதி தோழ. 4

உற்ப வந்தொட் டிமட்டுமு வந்துண வாதி
அற்பி னல்கி யறிவளித் தாரிடர் போக்கி
நிற்பு ரந்த நிருமல வேந்தை நினைத்துப்
பொற்பி னன்றி புரிந்திலை பேயடி பூண்டாய். 5

பொய்தி ருட்டநி யாயம்பொ றாமைபொல் லாங்கு
கைத வந்தந் திரங்கடுஞ் சூதுவன் கண்மை
வெய்தி னாயவி னைத்திற முள்ளன வேட்டுச்
செய்து தீவிடம் ஜீவனுக் கீட்டுதி தீயோய். 6

தூய ஞானஞ் சுகிர்தஞ் சுசீல மிவற்றால்
ஆய செல்வ மடைந்திலை யாலதி சர்க்கும்
மாய சூனிய வஞ்சக வர்த்தகம் பேணித்
தீய செல்வந் திருத்தினை சிந்தனை யில்லாய். 7

வஞ்ச மாதிய துர்க்குண மேமனை மக்கள்
பஞ்ச பாதக மாதிபஞ் சாமிர்த பானம
விஞ்சு பொய்முத லாயவை மெய்யணி சாந்தம்
அஞ்சு கின்றிலை தீமடி பேணுதி யந்தோ. 8

முன்னம் வேதியர் பன்முறை மோசத்தைக் காட்டிச்
சொன்ன நன்மதி கொள்ளலை தூயநல் லாவி
உன்ன கத்துமல் லாடிய தோர்ந்திலை யொன்றும்
என்னை யும்பகை யாக்கினை யேமதி யில்லாய். 9

இற்றி தோரலை நீரெழுத் தியாக்கையென் றெண்ணாய்
சுற்ற நட்புரி மைத்திறம் யாவுநிற் சூழ்ந்து
பற்று மாய வலைத்தொட ரென்பதும் பாராய்
நிற்றி மோசப் படுகரில் நூனெறி நோராய். 10

உள்ளி னாய வுணர்ச்சிமற் றுன்னத ராஜன்
நள்ளி ரக்ஷணை நல்கிடு நல்லடை யாளம்
வள்ள லாரருண் மல்கிய மாண்புறு வைகல்
எள்ளு வாயலை யீதுன் னிரக்ஷணை நன்னாள். 11

நிண்ண யந்தெரி ரக்ஷ ணியநவ நீதம்
உண்ணி லாத்தும தாபித நோயொருங் கோடும்
நண் ணு மெய்ப்பர மானந்த சிற்சுக நம்பி
புண்ணி யன்பொற் றிருவடிச் சூழலிற் போதி. 12

எத்து ணைப்பெரும் பாவிய ராயினு மெள்ளா
வித்த கக்கும ரேசனை மெய்விசு வாசப்
பத்தி யாயிறு மட்டும்ப ராவுதி யென்னின்
முத்தி வீடுபு குந்தனை முத்தனு மானாய். 13

ஆயு ளெல்லை யறிந்தில மாதலின் முன்னே
மாய வாழ்வை வரைந்து நம்மானை மன்றாடித்
தூய வாவி துணைக்கொடு நன்னெறி துன்னென்
றாய சொன்மதி விண்டன னந்தரங் கத்தில். 14

நல்மனச்சாக்ஷி முற்றிற்று.

# 7. மரண சிந்தனை.

மரணத்தை யுன்னி மனம்பதைத் தேங்கி
அரணங் கிறிஸ்துவென் றருள்படைத் தன்று.

பூதலம் புரிந்த பாவப் புயல்பரந் திருண்ட நித்ய
வேதனை யுததி மொண்டு விழுத்தநீர் வெள்ளம் பொங்கிப்
பேதைமா னிடத்தை யேனைப் பிராணியை மோதி யீர்த்துப்
பாதலப் படுக ருய்க்கும் பாதக மரண கங்கை. 1

ஏதெனென் றுரைக்க நின்ற வெழினறுந் துணர்ப்பூங் காவின்
ஆதியிற் றோன்றி யென்றும் அவனியைச் சூழ்ந்து லாவி
வேதனைப் பயிரை யோம்பி விநாசத்தை விளைத்து நித்ய
மா துயர்க் கடலில் வீழ்ந்து மறிவது மரண கங்கை. 2

ஆசையிற் பெரிது வஞ்சத் தாழ்ந்தது துன்பந் துக்கம்
மூசிய விடரி வற்றின் முறிதிரை புரளு நீர்த்து
மாசடை யிதயம் போல மலிந்திருள் குழுமி மல்கும்
பாசடை மலின மூடிக் கலங்கிய பான்மைத் தம்மா. 3

தாங்கரும் பிணிக ளாக ஜலசரம் பயில்வ தியாண்டும்
ஓங்குதீ வினைக ளாய படாகொடி யுறழ்வ தூக்கிப்
பாங்கரிற் காளி கூளி பைசாசக் கணங்கள் புக்கு
நீங்கரி தாகி நின்று நெடுந்திகில் விளைக்கு நீர்த்து. 4

பள்ளநீ ருலக மெங்கும் பகைகொளக் கரந்து மல்கி
கொள்ளுநன் மருந்தை யெல்லாங் கூட்டுண்டு குணங்கொ டாமே
உள்ளுறப் பரவி யொல்லை யுயிர்வதைத் தொருங்கு கொல்லுங்
கள்ளவெவ் விடவ ராவிற் கிடந்தது மரண கங்கை. 5

நாளென வரம்பு காட்டி நாலைவா ரிதிசூழ் வைப்பிற்
கேளுறு முயிருக் கெல்லாம் நன்றுபோற் கேடு சூழ்ந்து
வாளெனப் பிளந்து தள்ளி மாயமாக் குறைக்கும் வாளுட்
கோளுறு காலத் தோடு கூட்டுற வாமிந் நீத்தம். 6

காலத்தைக் கருதி நின்றுட் பகையாகிக் கலக்கங் காட்டிக்
கோலத்தைக் குலைத்துக் கோறிக் கூரிருட் சூழ லுய்த்து
ஞாலத்தைக் கெடுக்கும் பொல்லா நச்சுத்தீ யலகை யேபோற்
சாலத்தை விளைக்கு மிந்தச் சதிபுரி மரண கங்கை. 7

தேகதத் துவங்கள் குன்றுஞ் சீர்கெடு மையஞ் சேரும்
சோகமாம் பொறி புலன்கள் சுழன்றந்தக் கரண மாயும்
ஆகமுங் கிடையா மேலிட் டாருயி ரொடுங்கு மந்தோ
மோகமா மரண கங்கை யூடுற முடுகுங் காலை. 8

பாபத்தை விளைத்தோர்க் குற்ற பயிரிடுங் கூலி தேவ
கோபத்தின் மிகுதி யிந்தக் குவலயத் தெவர்க்கு நீங்காச்
சாபத்தின் சமைவு மோச சர்ப்பனைக் கிடங்கு மாய
ஆபத்தின் குகையா மிந்த வறக்கொடு மரணச் சூழல். 9

கெடுமதி வித்திற் றோன்றி யிச்சையிற் கிளம்பிப் பொல்லாக்
கடுமனத் தெழுமூ வாசைக் கவடுவிட் டஞராய்ப் பூத்துக்
கொடுவினைத் திரளைக் காய்த்துக் குலவிய பாவ தாருப்
படுபழங் கனிந்த சாறிப் பயங்கெழு மரண நீத்தம். 10

புரண புண்ணியரே யார்க்கும் புகலிட மவர்பொற் பாத
அரணத்தைத் தேடித் தம்மை யடைக்கலப் படுத்தி யுந்தக்
கரணவிந் தியங்க ளோடு காயத்தைப் புனித மாக்கி
மரணத்தை நினைத்து வாழா மாந்தரே மாந்த மாந்தர். 11

மரண சிந்தனை முற்றிற்று.

—X—

## 8. தேவகிருபையின் மாட்சியும் கிரியையும்.

வரையாக் கிருபையொடு மாண்புறு கிரியையின்
அருமை பெருமை யறிவுறுத் தன்று.

மல்லாடு வன்கணைய வஞ்சமுறு மாயப்
பொல்லாத பேயினை முருக்குபு புறங்கண்
டெல்லா நலம்பெற விரக்ஷைதரு மெல்லாம்
வல்லான் மகாகிருபை யுள்ளூற மதித்தி. 1

மாதாவி னின்றெமை வளர்க்குமதி யூட்டித்
தாதாவி னின்றுசம ரக்ஷணை சமைக்கும்
வேதாவு மாகியுயர் வீட்டுலக முய்க்கும்
நீதாதி பண்கிருபை நெஞ்சுற நினைத்தி. 2

நஞ்சீவி யத்தினிடை யெத்தனைகொ ஞசம்
வெஞ்சீய மாமலகை யெத்தனை விதத்தில்
துஞ்சீடு பாடுகள் தொகுத்தன துகைத்திட்
டஞ்சீ ரெஞவுதவிற் றுண்டையரு ளன்றோ. 3

மூண்டெ ழுங்கிரு பைச்செயன் மொய்ம்பினைக்
காண்டல் செய்வர்தங் கைப்படு நெல்லியில்
ஆண்ட கைக்கித யாசன மாக்கிய
மாண்ட போதனர் வாய்மை மனக்கொணீ. 4

எவ னுளங்குடி புக்கதெம் மானருள்
அவ னுளத்திரு ளாக்கிய தீவினைப்
பவ வுணர்ச்சி கதிக்கப் படருறீஇ
தவன முற்றுள் ளுடைந்து தவிப்புறும். 5

சீசி மும்மலச் சேட்டையுட் சிக்கிய
நீச னேற்குய் வியாதென நேடிடும்
ஈசன் கோப மெரிக்குமென் றேங்கியுள்
ஊச லாடுயிர்ப் புற்றுளங் கைத்தழும். 6

ஆய காலைய கத்துறு மாத்தும
நாய கன்சர ணூடு நலங்கிளர்
நேய மார்விசு வாச நிலைப்படத்
தூய சற்கரு மிங்க டுணியுமால். 7

ஜீவ ரக்ஷைதி ருத்திய ஜேசுவை
ஆவ லாய்ப்பின் றொடர்ந்தடி யார்க்குறுந்
தேவ வாக்கி னலம்பெறு சிந்தையின்
ஓவ வின்றி முயலுமு வந்தரோ. 8

முத்தி யிச்சை முதிர்ந்து முழுப்பரி
சுத்த வாஞ்சையி தயந்து தைந்திட
நித்தி யானந்த நின்மல தெய்வத்தைப்
பத்தி செய்யுமுள் ளன்பு பழுக்கவே. 9

ஈண்டு சொற்றவி வற்றோடெம் மானடி
பூண்ட மெய்விசு வாசம் புலப்பட
மாண்ட கும்பரி சுத்த வரம்புளே
காண்ட குந்நடை காட்டுங் கழறல்போல். 10

புல்லொ ழுக்கமொ ருங்கறப் போக்கியே
நல்லொ ழுக்க நிவின்றுநன் னூல்வழி
இல்லொ ழுக்கிக வாமலி ராப்பகற்
செல்லொ ழுக்கம்வி டாவகை செல்லுமால். 11

கோதி லுண்மைகு லாமுக் காணமெய்ப்
போத மல்கு புனிதசம் பாஷணை
சாது சங்கந் தலைப்படு கூட்டுற
வாதி காதலித் தாற்றி வழிபடும். 12

தனைவெ றுக்குந் தணக்கெடுக் கின்றதீ
வினைவெ றுக்கும் விசுவசித் தன்பொடு
முனைவற் போற்றி முறைப்படு செய்கையில்
நினைவிற் காட்டி நிறுக்குமெய்ந் நூனெறி. 13

ஆய வித்தகு சீல் மகம்புறம்
மாய மின்றி மலிந்திடின் மற்றது
தூய தேவ கிருபைச் சுகிர்தமென்
றேய தொண்ட ரெடுத்திசைப் பாரரோ. 14

தேவகிருபையின் மாட்சியும் கிரியையும் முற்றிற்று.

## 9. சுவிசேஷ மாட்சி.

வித்தக னருளுரைச் சத்திய மாண்பைப்
பத்தர் கொண்டாடும் பண்புரைத் தன்று.

எண்படும் அருட்சுவி சேஷ மேய்ந்நூகம்
புண்படு மிருதயப் புரைக ணீக்கிநற்
பண்பொடு பவித்திரப் பத்தி வித்திமெய்
விண்படு போகத்தை விளைக்கு மாலரோ. 1

திருவரு ளாளர்க்கு ஜீவ வாசனை
தருவது புலைநெறி தழுவி யோர்க்குமன்
வெருவரு மரணவா சனைவி ளைப்பது
நிருமலன் றருசுவி சேஷ நீர்மைகாண். 2

பாவதா ருவையறப் படுக்குங் கோடரி
ஜீவதா ருவிலெழுந் தெய்வ மாக்கனி
தேவதூ தரும்வியந் தேத்து செம்பொருள்
பூவுல குயவரு புனிதன் புத்துரை. 3

ஆன்மநோ யகற்றுசஞ் சீவியன் பர்க்குத்
தேனினு மினியதீஞ் சுவைய தெள்ளமிர்
தூன்மனத் திருள்கெட வொளிரு மொண்சுடர்
வானவர் கோமகன் மதுர வாய்மொழி. 4

பாவியென் றுணர்ந்துபுண் பட்ட நெஞ்சர்க்கு
தேவநீ தியில்வருந் திகிலை மாற்றிடுந்
தாவரு நித்யஜீ வனையுந் தந்திடும்
தீவினை யறவரு செம்மல் வாசகம். 5

துன்பெனுந் தீச்சுடச் சுழன்று சோர்வுறும்
அன்பருக் கவ்வன லவிக்கும் நித்யபேர்
இன்பவா ரிதிவிசு வாசிக் கின்னுயிர்
நம்பெரு மானிவ ணவின்ற வாசகம். 6

பரஞ்சுட ரகத்தொளிர் பார மார்த்திகம்
நிரஞ்சன வருட்கட லெழுந்த நித்திலம்
நரஞ்சுக நிலைபெறு ஞான மானிடப்
புரஞ்சுமந் துதித்தநம் புனித னல்லுரை. 7

சிக்கறுத் தகப்பகை செகுத்துத் தெள்ளிதிற்
பக்குவப் படுத்துமிப் பவஞ்ச முற்றையுந்
துக்கசா கரத்துநீர்ச் சுழியி னின்றெடுத்
தக்கரைப் படுத்துநம் மையன் மெய்யுரை. 8

அன்புரை யருளுரை யமுத பிந்துமெய்
யின்புரை யறவுரை யெவர்க்குங் கிட்டுரை
பொன்புரை போதனை பொதிந்த பொன்னுரை
என்புருக் கிடுமுரை யேசுவின் னுரை. 9

தீர்த்தனோ டாதியிற் றிகழ்ந்து தெய்வீக
வார்த்தையாய்ப் புவிக்கொளி மருவ மானிட
மூர்த்தியாய் விளங்கிய முனைவன் றந்தநூற்
சீர்த்தியை யாவரே தெரிக்கு நீர்மையார். 10

சுவிசேஷ மாட்சி முற்றிற்று.

# 10. ஜீவநதி மான்மியம்.

பாவமாந் தொழுநோய் பரிகரித் துலகைத்
தாவறப் புரக்குந் தகையுரைத் தன்று.

உன்னதத் தநாதிதொட் டொழுக்க மேவிய
திந்நிலம் புரப்பதற் கீண்டு லாவிய
தந்நெறி யிரக்ஷணை யமைந்த நீரது
சென்னெறி யெங்குமெய் வளஞ்செ றிப்பது. 1

தூநலம் பயப்பது சுகிர்த முள்ளது
மானவ ருயிர்க்குயி ராய மாண்பது
ஊனமில் லருண்மறை யொழுக்கின் மேலது
வானமும் பூமியு மிணைந்த மாண்பது. 2

சத்தியத் தருக்குலந் தழைய வார்ந்திவண்
நித்திய பலனவிளை விக்கு நீரது
மித்தையின் விடத்தரு வேரொ டுங்கெட
இத்தலத் தறவெறிந் தியங்க வல்லது. 3

கைத்ததீ வினைகளை கட்டுக் காறுறும்
மெய்த்தரு மப்பயிர் விளைக்கும் பாலது
பித்தளை யுயிர்களின் பிறவி நோய்கெடப்
புத்துயி ரளித்திடும் புதுமை சான்றது. 4

அண்ணலார் கருணையி னளவி லையது
வண்ணவான் றூய்மையிற் றெளிந்த மாண்பது
நண்ணுமன் பினிற்சுவை நயம்ப யப்பது
புண்ணியம் பொலிந்தெனப் பொலியும் பொற்பது. 5

மூழ்குவார் தீவினை முருக்கு மாறுவந்
தாழ்முறை யலையெறிந் தொழிக்க லான்றது
வாழ்வுள வம்மினென் றழைக்கு மாறுபோல்
கேழ்கிளர் திரையொலி கெழுமு நீரது 6

அருந்துவார்க் கழல்வினை யவிக்கு நீரது
திருந்துநல் லுளக்களி செறிக்குந் தேனது
பொருந்துவெம் பசிக்கமு தாய பொற்பது
பெருந்துயர்ப் பிறவிவெம் பிணிம ருந்தது. 7

தாரகத் துருவமாய்த் தரணி மேவிய
நீரகத் துறுநர ஜீவர் நித்திய
வரகத் துறுகுண மியைந் திலங்குவார்
பாரகத் தியற்குணம் படைத்தி டாரரோ. 8

உலகநீ ரொழுக்கெலா முயிரைக் காப்பினும்
விலகரு மிருத்துவை விலக்கற் பாலவோ
குலவுமி ஜீவநீர் கொள்ளுவா ரெனில்
இலகுமெய் நித்திய ஜீவன் யார்க்குமே. 9

தாகமின் றும்பசி தணியுஞ் சஞ்சல
சோகமும் ரோகமுந் தொலையு நித்திய
போகபூ மியினலம் பொருந்தும் புல்லிய
தேகமும் புனிதமாம் ஜீவ நீரினே.

ஜீவநதி மான்மியம் முற்றிற்று.

## 11. பாவவுணர்ச்சி.

தன்னுறு பாவத் தழல்சுட வாற்று
தென்னினிச் செய்வலென் றினைவுகொண் டன்று.

ஜென்மமார் கருவிலே வினைவிடந் தீண்டலால்
நன்மனே தத்துவம் நாசமா யினவெலாந்
தின்மையே செயவருந் திறனுளேன் சிறியவோர்
நன்மையே னுஞ்செயத் திறனிலேன் நவையினேன். 1

நான்பிறந் ததுமுயிர்ச் சுமையினுல் நலியவோ
கான்பிறங் கலினுறுங் கதழ்விடப் பாந்தளில்
ஊன்பிறங் குடல்வளர்த் துழலுவே னுணர்விலேன்
ஏன்பிறந் தேன்கொலா மேழையிவ் வுலகினே. 2

அன்னையா யப்பனு யன்றுதொட் டின்றுமட்
டென்னையன் பொடுபுரந் தென்றும்நன் றேதருந்
தன்னையே நிகர்வதோர் தம்பிரான் றயைமறந்
தென்னையே முப்பகைக் கீடழிந் தினைகுவேன். 3

கனிதருந்[1] தருமெனக் கவலுநங் கருணைமன்
இனிதரும் பாதவித் தருவெறிந் திடுகென
முனிதரும் பொழுதினே முடுகுமேன் முடுகுவெந்
துனிதருங் கனல்சுடத் துடிதுடித் தயர்வலோ. 4

ஓணுத் துணையுநல் லுணர்விலே னுலகுசெய்
கோணிக் குளமுடைந் திடையுமோர் கோழையான்
ஆணத் துறைபடிந் தயர்வுயிர்த் திலனினி
மாரணக் கடல்குளித் தயர்வனே மதியிலேன். 5

அண்டர்நா யகனையே யவமதித் தலகையின்
தொண்டனுய்ச் செய்ததீ வினையெலாந் துன்னிமுன்
கொண்டலின் றிரளெனக் குழுமிநின் றுறுமாற்
கண்டிலே னேடியான் புகுதவோர் காவிடம். 6

உரவுநீ ருததிசூ ழுலகெலா முய்யநம்
புரவலன் புதல்வனைப் புனிதநீ தியிலிவண்
வரவிடுத் தமையறிந் தினுமெனோ மடமைபான்
பரவிநின் றருள்பெறாப் பாவமென் பாவமே. 7

எப்பெரும் பதகரு மிதயநொந் தேங்கிவந்
தப்பனை பிழைபொறுத் தருளுமென் றடையிலோர்
ஒப்பரும் புதல்வனுக் குருகிமன் னிப்பமென்
றிப்பெருஞ் சுருதிதந் திறைமறந் திடுவரோ. 8

ஆற்றருஞ் சுமையினோ டல்லல்பல் விக்கினங்
கூற்றெனக் குமுறிநின் றுயிர்தெறக் குறுகினும்
ஏற்றுமுன் னிடுவதே கருமமிங் கேழையேற்
கூற்றமாங் கடவுள்வேந் தொருபெருங் கருணையே. 9

பாவவுணர்ச்சி முற்றிற்று.

## 12. ஜீவவழிக்கடை திறப்பு.

மட்டிலாப் பாவிகள் வந்தருள் வழிக்கடை
தட்டிநின் றோலிடுந் தகையுடைத் தன்று.

மாய வுலக மயக்கறுத்து வரையாக் கிருபை தந்தளித்த
தூய பெருமான் றிருவடிக்குத் தொழும்பன் கபாடந் திறமினோ. 1

ஆசா பாசக் கொடுஞ்சுழலி லகப்பட் டுலைந்தே னருளணுக
நாச தேசந் துறந்துவந்தே னாயேன் கபாடந் திறமினோ 2

உள்ளந் திரும்பிக் குணப்படுமி னுய்வீ ரென்ன வுவந்துரைத்த
வள்ளல் திருவாக் கதுகேட்டு வந்தேன் கபாடந் திறமினோ. 3

கல்லேன் சுருதி நலம்புரியக் கருதேன் பாவங் கசந்திடேன்
பொல்லே னெனினும் வந்தடைந்தேன் போகேன் கபாடந்திறமினோ. 4

ஆறாக் கொடிய பசிதாக மடங்கத் தணிய வருளளிக்கும்
மாறாக் கருணை வரதன்பால் வந்தேன் கபாடந் திறமினோ. 5

வேறு

பாவ மீறிவளர் காடு துற்றியலை பட்ட ழுங்கியயர் பாவியான்
ஜீவ மாநதியி னீர ருந்தவதி தேட்ட முண்டுகடை திறமினோ. 6

நீதி யாதிபர்சி னந்த கிக்குநெறி நின்று தப்பியிநெ றிப்படீஇ
மாத யாபரன டித்தொ ழும்புசெய வந்த பாவிகடை திறமினே. 7

சேரு மாகொடிய தீவி னைத்திரள்சு மந்தி ளைத்தளிகொள் ஜீவநற்
ருரு நீழலிலொ துங்கி யுய்யவரு தமியன் யான்கதவு திறமினே. 8

கொடிய ரிற்கொடிய புலைய ரிற்புலைய னுயி னுங்குமர நாயகன்
அடிய ருக்கடிய னுக வந்திவண டைந்த னன்கதவு திறமினே. 9

நிருப னீதியினி லத்தி ழிந்துபலி நேர்ந்தி ரக்ஷையரு ணேமியாஞ்
சருவ லோகசர ணியனை நம்பிவரு தமியன் யான்கதவு திறமினே. 10

ஜீவவழிக்கடை திறப்பு முற்றிற்று.

## 13. வேதியரொழுக்கம்.

ஏசுவின் றெண்டர்க் கியலுநல் லொழுக்கம்
மாசறு சீல மரபுரைத் தன்று.

வேதமார்க் கத்தின் மேய வேதிய ரொழுக்கம் வேதம்
ஓதற நெறியைப் பற்றி யுற்பவ தோடத் தாலே
சாதக மான பாவஞ் சருவிடா தகற்றி யொல்லுந்
தீதினற் கருமம் யாவுஞ் சிந்தையாற் செய்தல் வேண்டும். 1

அகிலகா ரணராந் தூய வாண்டகைக் கடங்கா தீட்டும்
சகலபொல் லாங்கு முள்ளிச் சஞ்சலித் தழுதுண் ணைந்து
புகலிட மான யேசு புண்ணிய பலத்தை நாடி
இகலிமுப் பகையை வென்றிங் கிடைநிலா தோடல் வேண்டும். 2

ஒளிக்குறி வாயி லூடு புகுந்தொரு வழிப்பட் டுள்ளந்
தெளிக்குநல் லுரைகேட் டான்ம தீக்ஷைபெற் றளவி லின்பம்
அளிக்குநற் சருணை யாய ஆரமிர் துண்டு வேந்தன்
விளிக்குநா ளளவுந் தூய விதிவிலக் கோம்பல் வேண்டும். 3

ஜீவன்முத் தருக்கு நல்குந் திவ்விய சிந்தை ஞானம்
மேவருங் குணங்க ளர்கக விசுவாசம் விரதஞ் சீலந்
தாவருந் நலங்க ளெல்லாந் தந்தருள் புரியுந் தூய
தேவனல் லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும். 4

கிறிஸ்துவி னிடமே கற்றுக் கேவல நிலையை நாடிக்
கிறிஸ்துவின் சிந்தை தன்னுட் கிடைத்திட ஜெபித்து நாளுங்
கிறிஸ்துவின் சிலுவை தாங்கிக் கிட்டிப்பின் றொடர்ந்து சென்று
கிறிஸ்துவுக் கன்பிற் செய்யுங் கிரியையைப் படைத்தல் வேண்டும். 5

அந்தரங் கத்திற் பாவ மருவப் பாதல் வேண்டும்
புந்தியிற் புனித மாகிப் புதுப்பிறப் படைதல் வேண்டும்
சொந்தநீ தியினா ரோபந் துறந்துமெய் விசுவா சத்தால்
சந்ததங் கிறிஸ்து யேசு நீதியைத் தழுவல் வேண்டும். 6

நித்திய கரும மாதி நியமன வநுட்டா னங்கள்
உத்தம வழிபா டுள்ளத் துரிமைபூண் டெழுசன் மார்க்கம்
சுத்தமுக் காண மாய சுகிர்தசா தனத்தை யோம்பி
வித்தகம் பயின்று மேலாம் விழுத்தவ முயறல் வேண்டும். 7

நீதக லாத பொல்லாத் தீயினத் தவர்தங் நட்பு
மீதுமீ தாகத் துன்பம் இருமைக்கும் விளைத்தல் மெய்மை
ஆதலால் விலகி யோடி யருள்வழி பிடித்துத் தூய
சாதுசங் சத்தர் நட்பைச் சாந்துணை தழுவல் வேண்டும். 8

அறிவெலா மான்ம போத மணியெலாஞ் சுகுணந் துய்க்கும்
பொறியெலாம் புனிதஞ் செய்யும் போசெலாம் பகைமூன் றோடு
குறியெலாம் ஜீவ ரக்ஷை யாயின குறிக்கொண் டூர்தத
நெறியெலாம் நோற்றுச் சென்று நித்யவீ டடைதல் வேண்டும். 9

இவ்வகை ஜீவ மார்க்கத் தியல்வதே ஜீவன் முக்தர்
செவ்வியென் றறிமி னீண்டு செப்பிய விவற்றி லொன்றைக்
கைவிடி னுங்கிட்டாது கருதிய ஜீவ ரக்ஷை
தெய்விக போத மித்தைச் சிந்தையுட் பதித்தல் வேண்டும். 10

வேதியரொழுக்கம் முற்றிற்று.

## 14. ஸ்தோத்திரம்.

பெற்றிடுந் திருவருட் பெற்றியைப் புணர்ந்தீ
தெற்றென வியந்துளத் தேத்துச் சிறந்தன்று.

சொல்லொன்றா லனைத்துலகுந் தோற்றுவித்தாய் தோற்றியவை
யெல்லாமிங் கொருபடித்தா யின்றளவு நின்றியல
வல்லாய்நீ யோர்வரம்பு வைத்தாயுன் வல்லமையைப்
புல்லேனே சொல்லிப்பு கழ்ந்துரைக்கும் போதத்தேன். 1

உருட்டுவாய் வையகத்தை யொருகொடியி னுலகினெடுஞ்
சுருட்டுவாய் ககனத்தைச் சூழ்சுடரை நிறுத்துவாய்
திருட்டுவாய் மனத்தினரைத் திரையாழி யிடையமிழ்த்தித்
தெருட்டுவா யடியவரையுன் றிறஞ்செப்பற் பாலதோ 2

ஆக்கவும்வல் லவனீயிங் காக்குவித்த வனவரதங்
காக்கவும்வல் லவனீபின் கருதுங்காற் கணப்பொழுதிற்
போக்கவும்வல் லவனீயிப் பொல்லாங்கு பொறுத்துமுடி
சாய்க்கவருந் திறனென்னே தருமத்தின் றனிமூர்த்தி.

எப்பொருட்கு மிறைநீம கேசனுநீ யென்றிருக்கச்
செப்பரிய பெருந்துன்ப முனைச்சேருந் திறனென்னே
ஒப்பரிய திரியேகத் தொருவாவுன் னுள்ளன்பின்
வெப்பமிகு மனலன்றோ விவ்வாறு விளைத்ததுவே. 4

நீதியான் மனுநாச நேருமெனப் பிணைநின்று
சாதியா லெந்தாயுன் றண்ணளியின் றகையேனும்
ஆதியா னீபடும்பா டத்தனையு மறிந்துள்ளம்
பேதியா துனையிங்ஙன் விடுத்ததுவே பெரிதம்மா. 5

வாழ்வாராம் நரப்புலையர் வந்துநடு நின்றொருவர்
தாழ்வாரா மவர்பொருட்டுத் தாதைமுறை தப்பாமற்
போழ்வாராம் பட்டயத்தாற் பொன்றியொரு பரமசுதன்
வீழ்வாரா மீதென்னே வேந்தன்செங் கோன்முறைமை. 6

வானாடு தொழுதிறைஞ்சு மகிமையெலாம் புறநிறுவிக்
கானாடு மலர்க்குழலோர் கன்னிகருப் பாசயத்துற்
றானாடு முடலெடுத்திங் குயிர்ப்பலிநேர்ந் துதவினைநீ
ஆனாடற் கெளிதோநின் னன்புநிலை யச்சோவே. 7

மூன்றாய கவடுடைய முதுமூலத் தனிப்பொருளே
தேன்றோயு மலர்ப்பொழில்வாய்த் திருவுள்ளந் துயர்மேவி
ஊன்றோயுந் திருமேனி யுதிரவியர் வுகுத்ததும்போய்
ஆன்றோயித் தனைதுயரும் வேண்டுமோ வச்சோவே. 8

பாவிகளிற் பிரதான பாவிகொடும் பாவிமுழுப்
பாவிதுணி கரப்பாவி பகுத்தறிவி னின்மூடப்
பாவிவிசு வாசமிலாப் பாவியதி சண்டாளப்
பாவியான் வந்தடைந்தேன் குமரேச பரிந்தருளே. 9

கைம்மாறு முளகொல்லோ கணிப்பறுநின் பேருதவிக்
கெம்மாவி யுடல்பொருண்மற் றிவையொருமூன் றையுமின்னே
தம்மானின் னருளுக்கே தக்கணையாச் சமர்ப்பித்தேன்
வெம்மாய வினைதொலைத்துன் வீட்டுலகங் கூட்டுகவே. 10

ஸ்தோத்திரம் முற்றிற்று.

## 15. ஜெபம்.

இந்நிலத் திறுத்த விறைகும ரேசனோர்
சந்நிதிக் கோலிடுந் தகையுரைத் தன்று.

உன்னத பரம ராஜ னொருதிரு வோலக் கத்துச்
சன்னதி நினைந்து கிட்டித் தாளிணை முடக்கி நின்று
பன்னருங் கருணை யுன்னிப் பத்தியோ டிருகை கூப்பிச்
சென்னிதாழ்த் திறைஞ்சி யன்பிற் சிந்தனை கசிந்து போற்றி. 1

ஆதிமெய்த் திருவாக் காகி யவிரொளிப் பிழம்பு மாகிப்
பூதலம் புரக்க வந்த புண்ணியப் புனித மூர்த்தி
மாதயா நிதியே ஞான வரோதய கிரியே நின்சீர்
பாதபங் கயம்பல் லாண்டு பல்லாண்டு வாழி வாழி. 2

அறக்கொடும் பாவி கல்லா வசடர்க்குள் ளசட னஞ்சா
மறக்கொடும் புலைய னாய வஞ்சகப் புலைய னேன்யான்
துறக்கநாட் டரசன் சீற்றச் சுடுதழற் சுவாலைக் கஞ்சிச்
சிறக்குநின் சரண நீழ லடைக்கலஞ் சென்று சேர்ந்தேன். 3

என்னிகர் பாவி யில்ல ரெனினும்யா னேழைப் பாவி
இன்னலுற் றழுங்கும் பாவ ஜீவகோ டிகளுக் கென்றும்
நின்னிக ராய தஞ்சம் பிறிதிலை யென்ன நேடிப்
பொன்னடி நீழல் வந்து புகுந்தனன் போது கில்லேன். 4

இரங்குக பாவ பார விருஞ்சுமை யாற்று கில்லேன்
இரங்குக வேழைப் பாவி யெனக்கொரு கதிவே றில்லை
இரங்குக தேவ கோப வெரிவிழுந் தவிக்கா முன்னம்
இரங்குக ஜீவ ரக்ஷைக் கென்றுரு வெடுத்த தேவே. 5

என்னுயிர்க் குயிரு நீயே யீடேற்று மீசன் நீயே
மன்னுசற் குருவு நீயே வழிநடத் தெனையாட் கொண்ட
முன்னவன் றானு நீயே முற்றுநீ சுற்று நீயென்
றுன்னைநன் கறிய நீயென் னுளத்தறி வுறுத்து கெந்தாய், 6

மைவிளை யிதய மாய வகலுளே மலினம் போக்கி
மெய்விசு வாச மென்னும் வியன்றிரி கொளுவி மாறாத்
தெய்விக வருளை யூற்றித் திவ்விய சுடரை யேற்றி
நெய்விளக் கலர்த்தி யென்னுள் நிலவிவீற் றிருத்தி நீண்டோய். 7

உற்றமெய் விசுவா சத்தா லுரிமையாம் பரம நீதி
மற்றது பெறுங்கால் ஜீவன் மல்குமென் றுரைக்கும் வாய்மை
அற்றமில் விசுவா சத்தை யாக்கிநீ தியைத்தந் தாக்கல்
முற்றுநின் னருளின் செய்கை முறையன்றோ கருணை மூர்த்தி 8

ஆழியிற் பெரிதென் பேனின் னருட்பெருங் கிருபை தன்னை
வாழிநின் னன்புக் கெல்லை யாதென வழுத்து கிற்பேன்
பாழியம் புவியின் மிக்க பாவியேற் புரந்த வன்பென்
றூழிதோ றுலக மெங்கு முரைநிற்கு மென்ப தல்லால். 9

எச்சிலை விழையுங் குக்க லெனவிழி தொழில்செ யீனக்
குச்சித மான பாவி குவலயத் தென்னை யொப்பார்
நிச்சய மில்லை யிலலை நீசனேற் கிரங்கி யான்மப்
பிச்சையிட் டருளிப் பாவப் பிழையெலாம் பொறுத்தி யெந்தாய். 10

கிளருமெய்ஞ் ஞான போதம் கேடில்சன் மார்க்க சித்தி
வளர்விசு வாசக் காட்சி மாசறு புனித நீதி
உளமலி யன்பு மேவிட் டென்றெழும் புவக்கு மாசை
விளையநின் னாவி நல்கி விடாதுகாத் தருள்வாய் ஆமன். 11

ஜெபம் முற்றிற்று.

## இரக்ஷணிய தேவாரம்.

நாவார் செஞ்சொற் பூவாற் றொடுத்த
தேவா ரம்பரன் றிருவடி மிலைந்தன்று.

## 16. திருநாம ஸ்மரணை.

(பண்-நேரிசை.

வள்ளல் பரன்குமரன் வண்மைத் திருப்பெயரை
உள்ளி யுள்ளத் துவகைசிறந் தன்று.

முன்னவ னென்கோ வேத முழுமுத லென்கோ முத்தர்க்
கின்னமு தென்கோ சிந்தைக் கினியதெள் ளமுத மென்கோ
கன்னிகா புத்ர னென்கோ கருதரும் பொருளீ தென்கோ
தன்னிக ரில்லா யூத ஜாதிமா ணிக்கத் தையே. 1

வானவர் திலக னென்கோ வையக முய்ய வந்த
மானவ னென்கோ ஜீவ வழியென்கோ வழியைக் காட்டும்
ஞானசற் குருவே யென்கோ நராத்தும நாய னென்கோ
தானவ னான யூத ஜாதிமா ணிக்கத் தையே. 2

முத்திமா முதல்வ னென்கோ மூலகா ரணமாய் நின்ற
சத்துவ மென்கோ லோக சரணிய னென்கோ வான்ம
நித்திய ஜீவ னென்கோ நெறிநின்றார் நினைவி னிற்கும்
சத்திய மென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 3

பேயக நடுங்கி மாழ்கப் பெருந்தகை விடுத்த தெய்வச்
சாயக மென்கோ தூய தனுவென்கோ சருவ லோக
நாயக மென்கோ பாப நராத்தும ஜீவர்க் கேற்ற
தாயக மென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 4

அன்புரு வென்கோ வன்ப ரகத்துள்ளே தெவிட்டா நின்ற
இன்புரு வென்கோ வின்ப மெவற்றிற்கு மேது வென்கோ
மன்பதைத் தொகுதி நித்ய வாழ்வடைந் துய்யும் வண்ணம்
தன்படர் நினையா யூத ஜாதிமா ணிக்கத் தையே 5

சிற்குணா லயமே யென்கோ திகழ்ஜெக ஜோதி யென்கோ
எற்கருள் புரிந்தாட் கொண்ட வீசனென் கோதா வீதின்
நற்குலம் விளங்க வந்த நாயக மென்கோ லோக
சற்குரு வென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 6

விந்தையெம் பகவ னென்கோ மெய்யுணர் வுடைய நீரார்
சிந்தையின் விளக்க மென்கோ திவ்விய வார்த்தை யென்கோ
பந்தநோய் தீர்க்க வந்த பரம பண்டிதனே யென்கோ
தந்தைதா யென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 7

அரணிலை குலையப் பேயை யடர்த்தகாம் பீர னென்கோ
மரணபுண் ணியத்தை நல்கு மாண்புறு வள்ள லென்கோ
தரணியா திக்க னென்கோ சருவலோ கமும் வணங்கும்
சரணிய னென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 8

தமரநீ ருலகு தந்த தற்பரன் றானே யென்கோ
அமருல கத்து வாண ரறிவிற்கு மதீத னென்கோ
எமரொடு மெனை ரக்ஷித்த வெம்பிரா னிரக்க நீதி
சமரச னென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 9

அருண யனத்த னென்கோ வமுதச் செவ்வாய னென்கோ
கருணையார் கலியுட் பூத்த கமலவாண் முகத்த னென்கோ
பருணிதர் தொடையல் வேய்ந்த பதாம்புஜ னென்கோ ஞான
தருணியே யென்கோ யூத ஜாதிமா ணிக்கத் தையே. 10

நிலையிது குண மீதையன் நெறியிது நாம மீதென்
றலகுறு பாஷை கொண்டிங் குரைக்கு மாறரிதென் றுன்னி
அலையு மெய்ச் சுருதியின்னு மறிவிலா மூகை யாய
புலையனே னினையும் புன்சொற் பொருந்துமோ புனையத் தானே. 11

திருநாம ஸ்மரணை முற்றிற்று.

## 17. திருநாமப் பதிகம்.

(பண்-காந்தாரம்.)

நரதேவ மூர்த்தமாய் நரஜீவ ரக்ஷைசெய்
பரதேவ மைந்தனோர் பண்புரைத் தன்று.

மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் திலும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ ஜீவருக்
கின்னமு தாயது யேசு நாமமே. 1

தெருளெலாந் தனதெனுந் தெய்வமா மறைப்
பொருளெலாந் தனதெனப் பொலிந்தி லங்குவ
தருளெலா மன்பெலா மறனெ லாம்வளர்த்
திருளெலாந் தொலைப்பது யேசு நாமமே. 2

பன்னருங் குணத்ததும் பவித்தி ரத்ததும்
துன்னரும் பொருளதுந் தூய்மை பூண்டுளோர்
நன்னர்நெஞ் சத்திடை நடித்து நிற்பதும்
என்னுயிர்த் துணையதும் யேசு நாமமே. 3

நித்திய ஜீவனும் நெறியும் போதமும்
சத்திய நிலையமுந் தானென் றுள்ளது
பத்தியிற் பரவுவோர் பரம வீடுற
இத்தலத் திறுத்தது யேசு நாமமே. 4

பொன்னுல கத்துளோர் புணரி சூழ்புவி
தன்னிலுள் ளோர்தலை தாழ்ந்து போற்றிட
மன்னிய தகையது மருவி வானிழிந்
திந்நிலம் புரப்பது யேசு நாமமே. 5

நன்னெறி புகுத்திடும் நவையி னீக்கிடும்
இன்னலை யகற்றிடும் இகல் செகுத்திடும்
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே. 6

அன்பினுக் குருவநல் லறத்துக் காலயம்
மன்பதைக் கருண்மழை வழங்கு பைம்புயல்
நின்பர மென்றினை வோர்க்கு நித்யபே
ரின்ப சஞ்சீவிதம் யேசு நாமமே. 7

வஞ்சகக் கூளியை மடிக்கு மந்திரம்
பஞ்சவிந் தியங்களைப் படுக்கு மந்திரம்
செஞ்செவே ஜெகமருள் தீர்க்கு மந்திரம்
எஞ்சலில் மந்திரம் யேசு நாமமே. 8

கூறுமந் திரமறை குணித்த வேதியர்
தேறுமந் திரம்ஜெபத் தினுக்குச் செவ்விதின்
வேறுமந் திரமிலை வேதனர் செவிக்
கேறுமந் திரங்கிறிஸ் தியேசு நாமமே. 9

தருமமு மொழுக்கமுந் தவமும் ஞானமும்
கருமமு மிவ்வலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை யாதலால்
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே. 10

நஷ்டமே தருஜெக நகைக்க நாளெலாம்
கஷ்டஜீ வனஞ்செய்து கழிப்ப மாயினும்
துஷ்டவல் வினையெலாந் தொலைக்குந் தூமன
இஷ்டகா மியந்தரும் யேசு நாமமே. 11

திருநாமப் பதிகம் முற்றிற்று.

# 18. காலை ஸ்துதி.

(பண்-காந்தாரம்.)

வைகறை யெழுந்து மகத்துவ பரமற்
குய்வழி துதிபகர்ந் தொப்படைத் தன்று.

எந்தையே ஸ்தோத்திர மிகலின் மண்பொதுத்
தந்தையே ஸ்தோத்திரஞ் சருவ லோகமும்
விந்தையாய்ப் படைத்தருள் விமல ஸ்தோத்திரம்
அந்தணு ஸ்தோத்திரம் அனந்த ஸ்தோத்திரம். 1

பொருட்படு பொறிபுல னொடுங்கிப் பொன்றல்போல்
மருட்படு துயில்கொளீஇ மறந்திக் கங்குல்வாய்
இருட்பெருங் கடல்குளித் தேனைக் காத்தனை
அருட்பெருங் கடலணு யனந்தஸ் தோத்திரம். 2

எத்தனை யோவிபத் திரவிற் றேர்கிலேன்
அத்தனை யுந்துறந் தருள் விழிக்கடை
வைத்தெனக் காருயிர் வழங்கிக் காத்தனை
அத்தனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 3

எண்ணவெம் மாத்திர மேழை யானுன
புண்ணிய விழித்துணை பொருந்து ருதெனைக்
கண்ணிய துயிலிடைக் காத்த ளித்தனை
அண்ணலே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 4

கனவிரு ளகற்றியிக் காலை யுய்த்தல்போல்
மனவிரு ளதனையு மாற்றி நீதியின்
தினகர னருள்வழி செலுத்தி யென்னையாள்
அனகனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 5

மாதிரம் யாவையும் வளைந்த வல்லிருட்
போதிலே பலர்புந ருலகம் போகவும்
பேதையேற் கெமரொடும் பிழைப்பை யூட்டினை
ஆதியாய் நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 6

கண்டுயி னீத்ததுங் கருணை மைந்தனைக்
கொண்டெனைப் புரந்ததுங் குறிக்கொண் டன்பொடு
தொண்டுனக் கியற்ற மெய்த் துணிவுதந்தருள்
அண்டர்நா யகவுனக் கனந்த ஸ்தோத்திரம். 7

ஐயமே விடமர ணூந்த காரம்வந்
தொய்யென மூடிநின் றுடற்று போழ்தினுந்
துய்யபங் கயமுக ஜோதி காட்டியாள்
ஐயனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 8

மைப்படு கங்குலைக் கடந்துன் வண்மையால்
இப்பகல் கண்டுனே யேதத நின்றனன்
எப்பரி சியான்கைமா றியற்று கேனென
தப்பனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 9

திகிலுலாம் பவவிருள் சிதையத் திவ்விய
சுகிர்தமார் திருமொழிச் சுருதி வான்சுடர்
மகிதல மெங்கணு மலிய நல்குவாய்
அகிலலோ கேஸ்வர அனந்த ஸ்தோத்திரம். 10

காலை ஸ்துதி முற்றிற்று.

## 19. பிழைநினைந்திரங்கல்.

(பண்-நேரிசை)

தன்பிழை நினைந்தெழு மெய்மனத் தாபத்
துன்புறழ்ந் திருவிழி சொரிந்தன்று கண்ணீர்.

---

நின்னடிக் கன்பு செய்யா நீசனேன் ஈசனே யுன்
பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர் குழாத்துட் புக்கு
நன்னடை கற்று மில்லேன் நன்றெலா மொருவி நின்ற
என்னடை யிகந்து மில்லே னென்செய்வான் றோன்றி னேனே. 1

தன்னுயிர் போல விந்தத் தடங்கடற் புடவி மேய
மன்னுயிர்க் கிரங்கி மேனாள் மநுமக னாகத் தோன்றி
இன்னுயிர் கொடுத்தி ரக்ஷை யீட்டிய விறையை யேத்தி
என்னுயி ரோம்பு கில்லே னென்செய்வான் றோன்றி னேனே. 2

வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனேன் றிகழ்ந்தி டாதென்
புன்கணுக் கிரங்கி யோர்பூம் பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரிந்துஞ் செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணே னென்செய்வான் றோன்றி னேனே. 3

கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமையங் கீறிப்
பிதிர் படச் சிலுவைமீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோ லத்தை மனக்கணாற் றரிசித் தேத்தி
இதயநெக் குருகு கில்லே னென்செய்வான் றோன்றி னேனே. 4

கன்றிய காம நெஞ்சக் கள்வனேன் காம நீத்த
நன்றிகொள் மாந்தர் போல நடித்திடு நடலை யுள்ளேன்
ஒன்றிய மனத்தோ டெந்தா யுன்னருட் டுணையை நாடி
என்றினி யுய்யப் போகே னென்செய்வான் றோன்றி னேனே. 5

தேசுற்ற மின்னார் மோகச் சிக்குளே சிக்கிச் சிந்தை
மாசுற்றே னுலக மாய வாழ்க்கையை மருண்டு நச்சி
வேசுற்றேன் கவலை யாலே மெலிவுற்றேன் விழைந ராலும்
எசுற்றேன் ஈச னேயா னென்செய்வான் றோன்றி னேனே. 6

அருளுடை முகிலை யன்பி னாருயிர்க் குயிராய் நின்ற
தெருளுடை யமுதை யுள்ளந் தித்திக்குஞ் செழுந்தேன் வைப்பை
மருளுடை யுணர்விற் கெட்டா வாழ்வினை வழுத்தி வாழேன்
இருளுடை மனத்தேன் யானே யென்செய்வான் றோன்றி னேனே. 7

பொறிவழி யுள்ளம் போக்கிப் புலைநெறி யொழுகும் பொல்லேன்
அறிவிலி யாத லாலே யாத்துமக் கவலை கொள்ளேன்
செறியுடற் போக நச்சித் திரண்டபே ராசை யென்னும்
எறிகடற் குளித்து நின்றே னென்செய்வான் றோன்றி னேனே. 8

சுத்தனே அல்ல னன்மை சொல்லவெட் டுணையு மில்லேன்
பித்தனான் பெரிய பாவி பிழைக்குமா றுணர மாட்டேன்
நித்தநீ யருளு மீவை நினைகிலே னன்றி யீனம்
எத்தனை யிறைவ னேயா னென்செய்வான் றோன்றி னேனே. 9

மெய்த்திடப் பிறர்க்கு வேதம் விளம்புவன் விரித்தென் னுள்ளே
உய்த்ததை யுணர மாட்டே னொழுக்கிடை யவர்போ னின்றும்
கைத்திடேன் பாவப் பிச்சைக் கடுகிநாட் கழிய வாளா
எய்த்திளைத் தயர்ந்தே னெந்தா யென்செய்வான் றோன்றி னேனே 10

அழுகிலேன் மனங்க சந்திட் டளியனேன் பிழையை யுன்னி
விழுகிலே னின்பாதார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலே னாவி யாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலே னீச னேயா னென்செய்வான் றோன்றி னேனே. 11

பன்முறை யிதய மென்னும் படுகரைப் பார்க்குந் தோறும்
நன்மையோ ரணுவுங் காணேன் நஞ்சினை யமுதா நச்சும்
புன்மையேன் போத மில்லேன் புவிப்பொறை யாய தன்றி [12
இன்மையேன் பயன் மற்றெந்தா யென்செய்வான் றோன்றினேனே.

பிழைநினைந்திரங்கல் முற்றிற்று.

## 20 கிறிஸ்துவே யெனக்கெல்லாமா யிருக்கிறார்.

(பண்–இந்தளம், நட்டராகமுமாம்.)

கிறிஸ்து வென்ஜீவன் சாவுமென் னாதியம்
கிறிஸ்துவே யெனக்கெலா மெனக்கிளந் தன்று.

சத்தாய்நிஷ் களமாயொரு சாமியமும் மிலதாய்ச்
சித்தாயா னந்தமாய்த திகழ்கின்ற திரித்துவமே
எத்தால்நா யடியேன்கடைத் தேறுவனென் பவந்தீர்ந்
தத்தாவுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 1

எம்மாவிக் குருகியுயி ரீந்துபுரந் ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ கடைகாறுங் கையடையாய்ச்
சும்மாரக்ஷணை செய்சொல் சுதந்தாம் யாதுமிலேன்
அம்மானுன்னை யலாலெனக் கார்துணை யாருறவே. 2

பித்தேறிச் சுழலும்ஜெகப் பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன்உன் னருளாற்பிழைத் தேன்மறு ஜென்மமதாய்
எத்தோடங் களையும்பொறுத் தென்றுமி ரங்குகவென்
அத்தாவுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 3

துப்பார்சிந் தையிலேன்மறைந் தீட்டிய தொல்வினையுந்
தப்பாதே வெளியாம்நடு நாளெனைத் தாங்கிக்கொள்ள
இப்பாருய்ய வென்றேமநுக் கோலமெடுத் தவெங்கள்
அப்பாவுன்னை யலாலெனக் கார்துணை யாருறவே. 4

மையார்கண் ணிருண்டுசெவி வாயடைத்துக் குழறி
ஐயால்மூச் சொடுங்கியுயி ராக்கைவிட் டேகிடுநாள்
நையேல்கை நெகிழேனு னைநானுண் டஞ்சலெனு
ஐயாவுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 5

வான்றேய்ந் திட்டதன்றே தமியேன்புரி வல்வினைதான்
என்றுனிவ் வுலகிற்சனித் தேனென வீடழிவேன்
மூன்றாய்மூன் றுமொன்ருய்த் தொழில்மூன்று மியற்றிநின்ற
ஆன்றேய்உன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 6

திரைசேர்வெம் பவமாங்கடல் மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த்துய்க்க வென்றேபுணை யாயினை கண்ணிலியான்
பரசேன்பற் றுகிலேனெனைப் பற்றியப் பற்றுவிடாய்
அரசேயுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 7

தாயேதந்தை தமர்குரு சம்பத்துகட் பெவையும்
நீயேயெம் பெருமான்கதி வேறில்லை நிண்ணயங்காண்
ஏயேயென் றிகழுமுல கோடெனக் கென்னுரிமை
ஆயேயுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே.

என்னேர்பா வியர்தானுல கத்திலை யென்னினுமுன்
பொன்னேருங் கழற்கே புகலாக வந்தடைந்தேன்
மன்னோ க்ஷணியவமிர் தூட்டி மனுப்புரக்கும்
அன்னேயுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 9

ஈண்டே யென்னுளத்தில் விசுவாச விளக்கிலங்கத்
தூண்டா யென்னிலந்தோ மயல்சூழ்ந்து கெடுத்திடுங்காண்
மாண்டா யெம்பிழைக்கா வுயிர்த்தாயெமை வாழ்விக்கவே
ஆண்டோயுன்னை யல்லாலெனக் கார்துணை யாருறவே. 10

கிறிஸ்துவே எனக்கெல்லாமா யிருக்கிருர் முற்றிற்று.

# 21. கையடைப்பதிகம்.

(பண்-தக்கராகம்.)

தைவிக வருளைச் சார்ந்து கடைப் பிடித்துக்
கையடை யாக்கிக் கசிந்திரங் தன்று.

ஓதியே சுருதி தினந்தினம் படித்தும்
உணர்விலா துலகொழுக் குவந்து
தீதிலே பயின்று செந்நெறி யிகந்த
தீயனே னுய்யுமா றறியேன்
கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிழம்பே
குணிப்பருங் கருணைவா ரிதியே
ஆதியே யடியேன் நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 1

பக்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன்
பகலெலாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தே னின்றுளே னாளை
யிலனென வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரரு ளல்லாற்
பிழைக்குமா றில்லையா தலினால்
அத்தனே யடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 2

கலைக்கணுக் கரிய காட்சியே சிரத்தைக்
கண்ணினுக் கெளியகண் மணியே
புலைக்குடி லோம்பும் புன்மதி யதனாற்
பொருவரும் பொழுதைவீண் போக்கி
உலைக்கம டம்போ லுலகமா யத்தை
யுவந்தநின் மூடனென் றுளச்சான்
றலைக்கநொந் தடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 3

மண்டலத் தெனைப்போற் பாவியு மில்லை
மற்றுனைப் பொருவதோர் தெய்வம்
உண்டொருக் காலென் றுணர்வுளா ரெவரு
முரைத்திடா ருண்மையா தலினால்
தொண்டருக் கிரங்கி மனுவுரு வெடுத்த
தொல்லைமூ லப்பாஞ் சுடரே
அண்டருக் கரசே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 4

வெப்புறு பாவ விடத்தினைப் பருகி
மெய்யறி விழந்துனை மறந்தேன்
அப்புற வுலக மடுக்கிலென் செய்கேன்
ஆண்டெனக் காதர வியாரே
ஒப்பற உயர்ந்த வொருதனி முதலே
உணர்வுடை யோலத்துக் குருகும்
அப்பனே யடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 5

எனாதியா னென்னு முடல்பொரு ளாவி
யிவையொரு மூன்றையு மின்னே
உனாதென வுனக்கே கையளித் தெளியே
னுன்னருட் பற்றையே யுவந்து

7A 1-57

மஞதிதத் துவங்கட் கதிதமா யன்பர்
மனத்தவி சுகந்துவீற் றிருக்கும்
அநாத ரக்ஷகனே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 6

படித்தொழும் பாகிப் பதைத்துழல் வேனைப்
பரிந்துன தருள்விழி பரப்பிக்
குடித்தொழும் பாக்கிக் கொண்டகோ மானே
குன்றிடா விழுநிதிக் குவையே
மிடித்தொழும் பிணியு மகற்றிடா தென்னே
விநயமே தும்பிறி துளவோ
அடித்தொழும் பலனே வப்பனே யடியேற்
கஞ்சலென் றடைக்கல மருளே. 7

உருளுறு சகடம் போலவென் மனமு
மொருவழி நிலையிலா துழலும்
மருளுறு முலகோ டலகையுங் கொடிய
மாயமாம் வலையிடைப் படுத்தும்
தெருளுறு பொருளே நின்னடிக் கன்பு
செய்துநா னுய்யுமா றெங்ஙன்
அருளுறு மெந்தாய் நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 8

என்புதோல் போர்த்த யாக்கையைச் சதமென்
றெண்ணியாத் துமத்தையெட் டுணையும்
முன்பி னெண்ணுது புரிந்ததீ வினையென்
முன்புநின் றுடற்றலான் முதிர்பேர்
இன்பநாட் டரசே புண்ணியப் பொருப்பே
யிருநிலம் புதைத்தெழுந் தோங்கும்
அன்பினர் கலியே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 9

புறத்தொரு புகலு மிலையுனை யல்லாற்
பொய்யுறு மலகையின் புணர்ப்பாம்
முறத்தினிற் புடையுண் டயருவேன் கருணை
முளரியை மூடுதன் முறையோ
மறத்தியோ மாறு மெய்த்திரு வாக்கை
வரதனே யபயனே வண்மை
அறத்தனி முதலே நின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 10

மருண்மனோ வாஞ்சைச் சுழலிலே யுழலும்
வறியபுன் றிரணமென் னாவி
இருண்மலோ ததிபுக் கழுந்திடி லந்தோ
வென்செய்கே னேழைநின் னடிமை
தெருண்மனோ கரமே ஜீவதா ரகமே
திகழ்குண மேருவே சீர்சால்
அருண்மகோ ததியே நின்சா ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 11

வேதமே வேத விளக்கமே விளக்கின்
விழுத்தகு ஜோதியே விமல
போதமே போதங் கடந்தமெய்ப் பொருளே
பொருள்புலப் படவெளி வந்த
நாதமே யூத குலநா திபனே
நன்னெறி பிழைத்துல குழலும்
ஆதன னடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென றடைக்கல மருளே. 12

வாழியா ரணநூல் வரம்பெலா மிகந்து
மதியிலாப் பேதையான் மயங்கிக்
கீழியான் பிழைத்த பிழையெலாம் பொறுத்துன்
கிருபைதந் தருளெனக் கெஞ்சி
ஊழியா யூழிக் குறையுளா யெவையு
முலப்பினு முலப்பிலாத் தரும
ஆழியா யடியே னின்சர ணடைந்தே
னஞ்சலென் றடைக்கல மருளே. 13

கையடைப்பதிகம் முற்றிற்று.

## 22. விசுவாசக் காட்சி.

(பண்-காந்தாரம்.)

மாட்சிசால் சிலுவையின் மாண்டிருக் கோலக்
காட்சியை யன்பிற் கண்டு களிந்தன்று.

---

கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே. 1

படிசாய்த்த பெரும்பாவப் பாரஞ்சுமந்து பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக
முடிசாய்த்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே. 2

பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருட்டாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த
சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே. 3

மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் றனித்தாயைத்
தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே. 4

மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தநுவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே. 5

துன்னெறிபுக் குழல்கின்ற தூர்த்தரிலுந் தூர்த்தனுயப்
பன்னெறிகொள் பாசமயப் படுகுழிவீழ்ந் தழிவேற்கு
நன்னெறியின் றுணிபுணர்த்தி நயந்திதயக் கண்டிறந்து
செந்நெறிகாட் டியகுருவைச் சிலுவைமிசைக் கண்டேனே. 6

அந்தரதுந் துமிமுழங்க வமரரெலாந் தொழுதேத்தத்
தந்தைதிரு முனமகமைத் தவிசிருந்த தற்பரனை
நந்தம்வினை தொலைத்திடற்காய் நரனாகி நலிந்திரத்தஞ்
சிந்தியுயி ரவஸ்தையுறச் சிலுவைமிசைக் கண்டேனே. 7

நிந்தனைசெய் திருப்பாணி நிரையழுத்திக் கொலைபுரியும்
வெந்தொழிலர் செய்வினையின் விளைவறியார் பொறுத்தருளும்
எந்தையென வெழிற்கனிவா யிதழவிழும் பெருமானைச்
செந்தனிக்கோல் கொளுந்தேவைச் சிலுவைமிசைக் கண்டேனே. 8

மறம்வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி
அறம்வளர்க்கு மருண்முகிலி னன்புமழை மாரிபெய்து
புறம்வளர்க்கு மிரக்ஷிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம்வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே. 9

காயொளியிற் கதிர்பரப்புங் களங்கமினீ தியின்சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னை பணிக்கருஞ்சிந் தாமணியைத்
தூயொளிகொ ணித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே. 10

விசுவாசக் காட்சி முற்றிற்று.

## 23. வேட்கையின் விதும்பல்.

(திருத்தாண்டகம்.)

தெய்வநா யகனைச் சிந்தையுள் விழைந்து
மெய்வரு வேட்கையின் விதுப்புடைத் தன்று.

அம்பரம திரியேகத் துவத்தொன் றாகி
அருட்டிருவாக் குருவாகி யகில மீன்ற
நம்பரனுக் கொருமகவாய் ஜீவ ருய்ய
நடுநின்ற நாயகத்தை நயந்தெந் நாளும்
உம்பருல குவந்துதொழு மகாதெய் வத்தை
யொன்றான வூர்த்தகதி வழியைக் காட்டி
இம்பருல கம்புரந்த வெம்பி ரானை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 1

இல்லையொரு நாமம்நர ஜீவ ரக்ஷைக்
கியேசுதிரு நாமமலா லிகத்தி லென்று
தொல்லைமறை முறையிடுபே ரின்ப வாழ்வைத்
துரிசறநின் றிலங்குபரஞ் சோதி தன்னைப்
பொல்லையெனப் புறக்கணியா தெனையாட் கொண்ட
பூரணபுண் ணியநிலையைப் புகழ்ச்சி யோங்கும்
எல்லையிலாப் பேரருளி னிருப்பை நாயேன்
என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 2

அருள்பழுத்த திருமுகமண் டலத்தி னானை
அளிநிறைந்த கமலலோ சனத்தெம் மானைத்
தெருள்பழுத்த ஜீவமொழி கனிவா யானை
ஜென்மவிடாய் தணித்தருள்சீர் பாதத் தானை
மருள்பழுத்த மனத்தேனைத் தெருட்டி னானை
வான்கதிக்கு வழிதிறந்த வலத்தி னானை
இருள்பழுத்த நரகடைத்த வெம்பி ரானை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 3

மன்னுசுர கணங்கள்ஜெய ஜெயவென் றேத்தி
வாழ்த்தெடுப்ப வீற்றிருந்த மகிமைத் தேவைப்
புன்னரகி டங்களையோர் பொருளா யுன்னிப்
புசலரிய பெரும்பாவப் பொறைசு மந்து
தன் னுயிரைப் பரிந்தளித்த மேசி யாவைச்
சர்வபரித் தியாகனைமெய்த் தரும வாழ்வை
என் னுயிருக் குயிராய வீசன் றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 4

பன்னரிய பரமபத நாடு நீங்கிப்
பவித்திரமாய்க் கன்னிமரி பால னாகிப்
பின்னர்விரத் துவம்பூண்டு ஞான தீக்ஷை
பெற்றுவிதி விலக்கோம்பி ஜீவ ருய்ய
நன்னெறியின் றுணிபுணர்த்தி யருளி னானை
நாஜீவ தாரகனை நம்பன் சித்தம்
இந்நெறியா மெனத்தெரித்த விறைவன் றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 5

ஜென்மதரித் திரத்தழியாச் செல்வ மோங்கச்
சிறுமையிலே மகிமைநலந் திகழ்ந்து தோன்ற
வன்மரணந் தனில்நின்று நித்ய ஜீவன்
மல்கவரு ணீதிமுறை வழுவா வண்ணம்
தன்மவுரு வெடுத்தகும ரேசன் றன்னைத்
தற்பரமா யகிலசரா சரங்க ளொன்றும்
இன்மையிலே தோற்றுவித்த வீசன் றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 6

அலகைதலை நசுக்கியபே ராற்ற லானை
அவித்தையிரு ளறுத்தொளிர்மெய்ஞ் ஞானத் தானை
உலகமயக் கொளித்திரக்ஷை யுதவி னானை
உத்தமசற் குணத்தானை யுல்ப்பி லானை
விலகியுயி ருடலைவிடு மமையத் தென்னை
விலகாது விசுவாச விளக்கைத் தூண்டி
இலகுதிரு வடிநீழ லிருத்து வானை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 7

தம்மாவி யினைந்துபெருந் துயரந் தாங்கித்
தண்ணறும்பூங் காவிலொரு தனியா மத்தில்
விம்மாவுள் ளுடையாநெட் டுயிர்ப்பு வீங்கி
மெய்புழுங்கி வெங்குருதி வெயர்வை சிந்தி

அம்மானை விளித்திறைஞ்சி யலக்க ணுற்ற
அருந்தவத்தின் பெருந்தகையை யருளின் வாழ்வை
எம்மாவிக் கினியானை யெய்தி நாயேன்
என்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 8

பொல்லார்முண் முடிசூடிக் கோல்கொண் டோச்சப்
பொழிகுருதி யுடனனைப்பப் போதம் யாதும்
இல்லாமன் னவன்கொலைத்தீர்ப் பிசைந்து கூற
எருசலேம நகர்கடந்து கொல்க தாவிற்
செலலாநின் றருகிரண்டு திருடர் நாப்பண்
சிலுவைமரத் தறையுண்டு செயல்மு டிந்த
தெல்லாமென் றுவிவிட்ட விறைவன் றன்னை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 9

தண்ணளியங் குறித்தெழும்பி யன்பு மூலந்
தாரணிக்குள் ளூறவூன்றித் தயைமு டாகி
நண்ணுமிரு தத்துவக்கோ டார்ந்து தூய
நல்லுரையாந் தழைமல்கி நன்மை பூத்துப்
புண்ணியங்காய்த் தருள்பழுத்துப் பரமா னந்தப்
புத்தமுதங் கனிந்துகதி பொருந்தி நிற்கும்
எண்ணரும்நித் தியஜீவ கற்ப கத்தை
யென்றுகொலோ கண்குளிரக் காணு நாளே. 10

வேட்கையின் விதும்பல் முற்றிற்று.

## 24. அந்திப்பலி.

(பண்-பழம்பஞ்சுரம்.)

இருண்முகந் திடுங்கா லென்னையஞ் சேலெனத்
திருமுகத் தொளிதந்து தெருட்டுகென் றன்று.

---

அலகிலாவருட் ஜோதியேபக லருணனொரொளி யத்தமித்
துலகெலாமிருட் படலமூடிய துனக்கந்திப்பலி யுதவுவான்
இலகுநின்கிரு பாசனத்தைவந் தெய்தினேனித யத்தொளி
அலரவைத்தெனக் காவிதந்தரு ளகிலலோகசர் வேசனே. 1

தேவதேவதிரி யேகஸ்தோத்திரம் ஜேசுநாயக தோத்திரம்
பாவகாரிசி ரஞ்சிதைத்தெழு பாதபங்கஜ ஸ்தோத்திரம்
ஜீவபாதையில் வழிநடத்திடுந் திவ்வியாத்தும ஸ்தோத்திரம்
ஆவலோடுனக் கனந்தஸ்தோத்திரம் அகிலலோகசர் வேசனே. 2

உடைப்பெரும்பொருள் கல்விநட்புற வுரிமையாவுமிவ் வுடலொடும்
இடைக்கணின்றிடு முதவுமோர்துணை யென்றுநீயடி யேற்கியான்
படைக்கநின்றழற் படுகருய்க்குமென் பாவமஞ்சியுன் பாதத்தே
அடைக்கலம்புகுந் தேன்கடைக்கணி யகிலலோகசர் வேசனே. 3

நஞ்சமல்கிய வஞ்சவல்வினை நச்சிநச்சியென் னுளெலாங்
கிஞ்சித்தும்பய னின்றியோய்ந்தன கெஞ்சவந்துனைக் கிட்டினேன்
தஞ்சமுன்னிரு கஞ்சநாண்மலர்ச் சரணலாற்புக வரணிலேன்
அஞ்சலென்றெனை யாதரித்தரு ளகிலலோகசர் வேசனே.

பையுளேனுனைப் பற்றிலேன்பயன் பட்டிடேனொரு பாவியான்
கையதாகிய ஜீவபுஸ்தகக் கணக்கிலென்பெயர் காண்பதோ
துய்யவாவியை யருளியென்குண தோஷம்யாவையு நீக்கியாள்
ஐயதாரகம் யாதுமின்றெனக் ககிலலோகசர் வேசனே. 5

ஓரணுத்துணை மதியிலாதுசிற் றின்பமுண்டுலைக் கமடமாய்க்
காரணத்தைவிட் டலகையோடுகை கோத்தெனுயுள்க ழிந்ததே
மாரணத்துறை நேரினித்திய மங்களக்கரை வாய்க்குமோ
ஆரணத்துறை காட்டியெற்கரு ளகிலலோகசர் வேசனே. 6

துன்புறழ்ந்துறழ்ந் தலசிவைகலுஞ் சுவைமணம்பெறு கிற்கிலாப்
பொன்பொலிந்தசொன் மாலைகொண்டுனைப் போற்றினும்பய னென்
என்புநெக்குரு கிக்கணீர்சொரிந் தேத்துமெய்விசு வாசமோ [னையாம்
டன்புறழ்ந்தசொற் பாலியென்கவிக் ககிலலோகசர் வேசனே. 7

பற்றெலாம்விடு பட்டபோழ்தினும் பாழ்த்தவென்னகப் பற்றினும்
முற்றுநீங்கல வாகிநின்றெனை முரணிவைகலு மோசஞ்செய்
புற்றராவொடு நாட்கழிப்பது புண்ணியாதிரு வுள்ளமேல்
அற்றதாகுக வெற்புரந்தரு ளகிலலோகசா வேசனே. 8

உண்டுபட்டவென் மடமையும்பல வினைமுந்திரு வுள்ளத்தே
கொண்டருட்கும ரேசன்புண்ணிய மொன்றையேகுறிக் கொண்டெ
கண்டகாண்கிற காணுமென்பிழை யாவையுங்கணக் கேற்றிடா [னிற்
தண்டர்நாயக பொறுத்திரக்ஷநல் ககிலலோகசர் வேசனே. 9

திமிரநீங்குமுன் தேகநீங்கியென் ஜீவனம்மையிற் சேரினும்
குமரநாயகன் றிருவடித்துணை கூட்டியுய்யருட் கொண்டலே
எமரொடுந்தடுத தாண்டபேரரு ளென்றும்வாழிய வாழிய
அமரர்நாயக வாழிவாழிய வகிலலோகசர் வேசனே. 10

அந்திப்பலி முற்றிற்று.

## 25. கடைக்கணி.

(பண்—இந்தளம்.)

அடைக்கல மடியே னடியேனை ஐய
கடைக்கணி கடைக்கணி யெனக்கனிந் தன்று.

---

பரனேபரம் பரனேபரப் பொருளேபரஞ் ஜோதி
உரனுடிய விசுவாசிகட் குவந்தாதரம் புரியும்
பெருமானடி யேனேபெரும் பாவிபிழை பட்டேன்
சரணடிவந் தடைந்தேனொரு தமியேன்கடைக் கணியே. 1

தூலத்தையு வந்துண்டுசு கித்துச்சுகம் பேணிக்
காலத்தையுங் கழித்தேனுயர் கதிகூட்டும்ரக்ஷணிய
மூலத்தனி முதலேகடை மூச்சோயுமுன் முடுகிச்
சீலத்திரு முகத்தாரொளி திகழக்கடைக் கணியே. 2

தொடுவீரையின் மணலைத்துளி துளியாக்கிமுன் னீரை
இடினுங்கணக் கென்றீவினைக் கின்றேயெல்லை யெந்தாய்
படுபாவியென் றெள்ளாதெனைப் பரிவாய்மன்னிப் பருளி
நடுநாளுன தடியாரொடு நணுகக்கடைக் கணியே. 3

அன்பார்கலி யருண்மாமழை யடியார்க்கன வரதம்
இன்பார்தரு கிருபாநிதி யிரக்ஷண்யபுண் ணியக்குன்
றன்பாற்சர ணடைந்தேனெனை யொறுக்காயகத் தொளிதந்
தென்பாற்பிழை பொறுத்தாதரித் தெந்தாய்கடைக் கணியே. 4

பெற்றாருடன் பிறந்தார்தமர் பெண்டீர்மக்கள் பெருநட்
புற்றாரினு முற்றார்சில ருலந்தாருயி ருலக்கப்
பெற்றேனல னென்னோதிரு வுள்ளம்பெரு மானே
நற்றாயினு மினியாயுனை நாடக்கடைக் கணியே. 5

மாணுந்தவல் விருண்மூடிமெய் வசமற்றுயிர் மறுகிக்
கரணங்களும் பொறியாதியுங் கலங்கித்திகைத் தயருந்
தருணங்கிறிஸ் தரசேயெனை யஞ்சேலெனத் தாங்கும்
அரணம்பிறி திலையேயுனை யல்லாற்கடைக் கணியே. 6

அந்தக்கர ணத்துள்ளன வறிவாயடி யேனில்
எந்தக்குறை யுளவென்னினு மெந்தாய்பொறுத் திரங்கிச்
சிந்தைக்கவ லையுந்தீர்த்தெனைத் திருத்திக்குணப் படுத்தி
அந்தத்திரு சரணீழல்தந் தருளிக்கடைக் கணியே. 7

கோதார்குணக் கேடன்மிகக் கொடியன்கொடும் பாவி
ஏதாகிலு நன்றொன்றில னெனினும்புறக் கணியா
தாதாரசர் வேசாவன வரதாவருணாதா
பாதாரவிந் தஞ்சேர்த்தெனைப் பரிவாய்க்கடைக் கணியே. 8

ஓசைக்கடற் புவிக்குள்ளெனை யொப்பாரொரு பாவி
ஆசைக்குமி ராரென்பதென் னகங்கண்டறி யுண்மை
ஈசற்கொரு புதல்வாவெனக் கிரக்ஷண்யபுண் ணியனே
பாசத்தலை விடுத்தெற்கருள் பாவிகடைக் கணியே. 9

ஒன்றாயொரு மூன்றாயொரு மூன்றுமொரு முதலாய்
நின்றாயிது பரமார்த்தநிஷ் கருஷமிந்த நெறியை
நன்றாய்ந்துளந் திரும்பியுனை நாடிற்கதி நாடும்
என்றாயுனை யடைந்தேனெனக் கிரங்கிக்கடைக் கணியே. 10

பேராதர முடையாய்பெரி யோனேபெரு மானே
பாராதரித் துயிரீந்திர க்ஷணையீட்டிய பரனே
ஓராதர முனையன்றிலை யுயிர்போம்பொழு துடன்வந்
தாராதரம் புரிவாரெனக் கையாகடைக் கணியே. 11

கிருபாகர கருணாகர கிளர்புண்ணியப் பொருப்பே
பெருமாவடி யேன்செய்பிழை பொறுத்தென்னுயிர் பிரிகால்
மருவார்தரு குருசிற்றிகழ் வதனம்புஜ மும்முன்
திருநாமமந் திரமும்மகந் திகழக்கடைக் கணியே. 12

கடைக்கணி முற்றிற்று.

# 26. உண்மை வற்புறுத்தல்.

(பண்-பழம்பஞ்சுரம்.)

வண்மைக் கிறிஸ்துவின் மகத்துவ ரக்ஷணை
உண்மை வற்புறுத்த வுளங்குவிந் தன்று.

தொக்கபாவமன் னிப்புநித்திய ஜீவனன்மையுஞ் சுகிர்தமும்
மிக்கபேரின்ப வீடுநங்கிறிஸ் தியேசுவைவிசு வாசிக்கில்
கைக்குள்வந்ததிங் கையமொன்றிலை கண்டுகேட்டுணர்ந் தலகுளீர்
தக்கவாறுநன் றாய்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 1

தேவதேவத்ரி யேகதெய்விக ஜேசுவின்றிரு நாமமே
ஜீவரக்ஷணை நல்குதிவ்விய சீலமார்திரு மந்திரம்
ஆவதன்றிமற் றில்லைவேறிதை யாயுமின்விரைந் துலகுளீர்
தாவரும்பர மார்த்தரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 2

இம்பர்மெய்ப்புரு ஷார்த்தமீட்டுதற் கேற்றநல்வழி யீசனை
நம்பியன்புசெய் வார்க்கெலாமழி யாதபேரின்ப நன்னிதி
உம்பர்நோக்குசன் மார்க்கமாதியு ணர்த்துசற்குரு வுலகுளீர்
தம்பிரான்கதி கூட்டும்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 3

எமையுயக்கொண்ட வீசனாதிதொட் டெழுதுவித்தது மிம்பரிற்
சிமயத்தேயலர் தீபம்போன்றுள திருச்சபைக்குய்த்துத் தெருட்ட
உமையடுத்தடுத் துண்மைகூறிவற் புறுத்திநிற்பது முலகுளீர் [லும்
சமயபாஷ்கர னாமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 4

முத்துவத்தனி யேகவஸ்துவு மோக்ஷமுந்தரு மார்த்தமும்
நித்யஜீவனும் ஜீவமார்க்கமு நெறிதிரிந்துசெல் பாவமும்
சித்தசஞ்சலப் படுகரும்முள தீர்க்கசத்திய முலகுளீர்
சத்தியந்தவ றாதரக்ஷண்ய சயயநிர்ணயந் தானிதே. 5

ஆதிநித்திய மாத்துமாமற்ற வகிலம்யாவும நித்தியம்
பூதலத்திறந் தோருயிர்த்தெழுந் தெம்பிரானடுப் புரியுநாள்
நீதியாய்வரு பலனுநித்திய நீக்கமின்றுல கத்துளீர்
சாதுசங்கத்தைச் சார்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 6

கனிதநீர்மையிற் கிறிஸ்துவின்றிருக் கடைக்கணுக்கிலக் காகிடில்
துனிதவிர்ந்திடும் பாவசங்கடந் தொல்லையுறுந்நடை சுகிர்தமாம்
புனிதநன்மனம் பொருந்துமன்புளம் பொங்கிமேவிடு முலகுளீர்
தனிதமாருண் மல்கும்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 7

கிழக்கெழுஞ்சுடர் போலச்சத்தியங் கிளரக்கண்டினுங் கேதமார்
பழக்கமானதீ வினையைவேரறப் படுத்துநன்னெறி பற்றிலீர்
வழக்குரைத்துவா னாளைப்போக்குதல் மதிகொலோவுல கத்துளீர்
சழக்கைவிட்டுளந் திரும்பும்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 8

சேயருந்தம ருஞ்சிநேகருந் தேடுபல்பொருட் செல்வமும்
காயநீத்துயிர் பிரியுங்காலொரு கடிகைபின்வரக் காண்டுமோ
நாயகன்கிறிஸ் தியேசுவேமறு மைக்குநற்றுணை யுலகுளீர்
தாயகம்பிறி தில்லைரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 9

நம்மைநோக்கிய தண்டனைக்கொரு நடுவராய்நின்று தாங்கியும்
செம்மையிற்றிறம் பாதநித்திய ஜீவபுண்ணியந் திரட்டியும்
இம்மைக்குமறு மைக்குநன்மையுண் டாகவிங்குதித் துலகுளீர்
தம்மையுந்தந்த சாமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே. 10

உண்மை வற்புறுத்தல் முற்றிற்று.

## 27 போற்றித் திருவிருத்தங்கள்.

(பூர்வ சுருதி.)

பூர்வோத் தரமாப் புகலுஞ் சுருதியை
ஓர்வுறச் சுருக்கி யுளம்பொறித் தன்று.

ஆதிமத் யாந்த ரகிதநிஷ் களங்க
வநாதியங் கடவுளே போற்றி
ஜோதியா யகண்டா காரமாய் விளங்குந்
தூயசை தந்யமே போற்றி
பேதியா நிலைநின் றுலகெலாந் தந்த
பிரணவ தெய்வமே போற்றி
நீதியோ டிரக்க சமரச நெறியை
நிறுவிய நிமலனே போற்றி. 1

முன்னமோர் நாளுல் விளைந்ததீ வினையை
முனிந்திடு முதல்வனே போற்றி
பின்னரவ் வினைதீர்க் துலகெலா முய்யப்
பேரரு ளளித்தவா போற்றி
நன்னெறி யிகந்தோர் பிரளயத் தமிழ
நயந்திடும் காதனே போற்றி
மன்னு நோவாவோ டெண்மரைப் புரந்த
மாபெருங் கருணையாய் போற்றி. 2

குழுமியோர் குலையப் பாஷைவே றுக்கிக்
குழப்பிடுங் கொற்றவா போற்றி
வழிவழி சுருதி முறைமுறை யாக
வகுத்த வேதாந்தனே போற்றி
விழியருள் பரப்பி யாபிர காமை
விளித்தருள் விமலனே போற்றி
கிழமுதிர் பருவத் தொருமக வளித்த
கேடிலாக் கிருபையாய் போற்றி. 3

தொண்டனை வலிந்து நகர்ப்புறங் கொடுபோய்த்
துரந்தபே ரருளினைப் போற்றி
வண்டரூ ரெரிவாய் மடுத்திட முனிந்த
மாண்புறு நீதியாய் போற்றி
கொண்டொரு மகவைப் பலியிடத் துணிந்த
கொற்றவன் றெய்வமே போற்றி
பண்டுபோன் மகவீங் கவற்குநல் லாசி
பகர்ந்திடும் பகவனே போற்றி. 4

உத்தம தொழும்பற் குரைத்தவாக் கனைத்து
முவந்துகாத் தளித்தவா போற்றி
பத்தனை யடர்க்கப் பலமிலா தொல்கிப்
பரிவுறும் பரமனே போற்றி
சித்தம்வைத் தவனிற் பன்னிரு மரபு
திகழ்ந்திடச் செய்தவா போற்றி
வித்தகன் யோசேப் பினைநனி யுயர்த்தும்
விட்புல வேந்தனே போற்றி. 5

கருப்பினி லிஸரேல் மக்களைக் காத்த
கருணையங் கடவுளே போற்றி
விருப்பொடங் கவரை வாரிதி மணற்போல்
மிகச்செயும் விந்தையாய் போற்றி
திருப்பரு மடிமைத் தனத்தினு லவரைத்
திருத்திய தெய்வமே போற்றி
ஒருப்படீஇ யோல மிடுமவர்க் குருகி
யுறுதுயர் களைந்தவா போற்றி. 6

அருளினாற் செங்கோ லளித்து மோசேயை
யனுப்பிய வமலனே போற்றி
இருளுறு மனத்தா ரிடைப்பல புதுமை
யியற்றிய வீசனே போற்றி
மருளுறு மிஸரேல் சிறைதவிர்ந் தேக
வரந்தரும் வள்ளலே போற்றி
தெருளிலாப் பார்வோன் ஜனத்தொடு மடியச்
செங்கடல் விடுத்தவா போற்றி. 7

மற்றவர் தமக்கு வழித்துணை யாகி
வானமு தருளினைப் போற்றி
வெற்றியங் கிரிமீ துலகெலாம் நடுங்க
விளங்கிடும் விபுதனே போற்றி

நற்றவன் வழியே விதிவிலக் கருளி
நயந்திடும் நம்பனே போற்றி
கொற்றமொ டிஸரேல் வளமிகு கானான்
குடிபுக வருளினாய் போற்றி. 8

மன்னர சுரிமை முறைநிறீஇக் குடிமை
வளந்தரு மகிபனே போற்றி
அன்னைபோற் கசிந்துந் தந்தைபோற் கடிந்து
மாம்பரி சுணர்த்தினாய் போற்றி
நன்னெறி யிகந்த மன்னரைச் செகுத்து
நலம்புனை நம்பனே போற்றி
செந்நெறிச் சென்றோர்க் குறுதுணை யாய
திரியேக தெய்வமே போற்றி. 9

கோலநீத் தொருசெங் கோலிசாய் மகற்குக்
கொடுத்தருள் கொற்றவா போற்றி
சீலமா யவன்சொல் நயந்துசங் கீதஞ்
செவிமடுத் துகந்தவா போற்றி
சாலமோன் றேவா லயமுவந் தருளித்
தரித்திடுந் தற்பரா போற்றி
மேலைநாள் யூத ஜனஞ்சிறைப் படவும்
மீளவு மருளினாய் போற்றி. 10

திருவுளக் குறிப்பைத் தீர்க்கரால் முன்னம்
தெரித்திடுந் தீர்த்தனே போற்றி
வருவர்மே ஷியக்கென் றடியருக் கினிய
வாக்கமு தூட்டினாய் போற்றி
பொருவரு மான்ம ரக்ஷைமார்க் கத்தைப்
புதுக்கிய புராதனா போற்றி
சருவலோ கமுமீ டேறவோர் மகவைத்
தந்தருள் தந்தையே போற்றி. 11

(உத்தர சுருதி.)

ஆதிமெய்த் திருவாக் காய வகிலகா ரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே போற்றி
மாதுவித் தாகி யிந்த மாநிலம் புரப்ப லென்று
தாதைபாற் பரிந்து நின்ற தற்பரா போற்றி போற்றி. 12

பன்னரு மகிமை யோடு பண்ணவர் பாவி யேத்த
உன்னரும் பரமா காயத் துச்சிவீற் றிருந்தாய் போற்றி
புன்னரர் பொருட்டுப் பாவப் புலையுல கத்து மேவிக்
கன்னிபா லுதித்தாய் போற்றி கருணைவா ரிதியே போற்றி. 13

வறிதுடல் லணையிற் கந்தை வனைந்தொரு குழவி யாகி
அறிதுயி லமர்ந்தாய் போற்றி யலகில்பல் லுயிரை யூட்டிச்
செறிதரு பசிக்காற் றாது தேம்பிநின் றழுதாய் போற்றி
நெறிதிக ழறவோ ராயர் நேர்ந்தநின் மலனே போற்றி. 14

ஈசனா ருரைகொண் டேகி யெகிப்துநா டடைந்து மீண்டு
நாசரேத் தூர்வந் துற்ற நசரேய நம்பி போற்றி
ஆசற வளர்ந்து பெற்றோர்க் கமைந்திடு மைய போற்றி
தேசிக ஞான தீக்ஷை செவ்விதி னடைந்தாய் போற்றி. 15

அம்முறை விரத மேற்கொண் டாரணி யத்து மேவிச்
செம்முறை திறம்பா வண்ணம் ஜெபதபம் புரிந்தாய் போற்றி
மும்முறை முனிந்து பேயை முடுக்கிய முனிவா போற்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கிய வெந்தாய் போற்றி. 16

வந்தது பரம ராஜ்யம் மனந்திரும் புங்க ளென்று
முந்துப தேசஞ் செய்த முத்திவித் தகனே போற்றி
சிந்தனை கசிந்தீ ராறு சீஷரை யழைத்தாட் கொண்டு
விந்தையாய்ப் பரம ஞானம் விளம்பிய குருவே போற்றி. 17

நள்ளுந ரோடுசூ ழுற்ற நரசமூ கங்கட் செல்லாம்
விள்ளருங் கருணை யாளோர் வெற்பிடை விளங்கித் தோன்றி
எள்ளருஞ் சுவிசே ஷத்தி னிருஞ்சுடர் விரித்தஞ் ஞான
நள்ளிருட் பிழம்பு சீத்த ஞானசூ ரியனே போற்றி. 18

மையுறு வஞ்ச நெஞ்ச மாய்வல் வியற்கை முற்றும்
கையுறு நெல்லிபோலக் காண்டலாற் கதியைக் கூட்டும்
மெய்யுறு தருமம் யாவும் விழுத்தக விளம்பி யாங்கு
பொய்யறு சான்றா நின்ற புண்ணிய மூர்த்தி போற்றி. 19

பாரிடம் வியக்கத் தீய பாரிடந் துரந்து நேர்ந்த
கோரவெம் பிணிகூன் மூகை குருடுவன் செவிடு பங்கு
தீரமெய் நிமிரப் பேசத் தெரியக்கண் டிறக்கச்செல்ல
ஆரரு ளளித்த திவ்ய வற்புத மூர்த்தி போற்றி. 20

அன்றொரு சிறுமி யேழை யமங்கலை சிறுவன் சேமத்
தோன்றிய தொழும்ப னின்னோர்க் குருகிக்கண் கலுழி சிந்தி
பொன்றிய வுயிர்வந் தெய்தப் புண்ணியம் புரிந்தாய் போற்றி
நன்றிலேன் சிறார்க்கும் ஜீவ னல்கிய நம்பா போற்றி. 21

பாழியங் கிரிமீ தோர்காற் பரிதிபோற் பொலிந்தன் பர்க்கு
வாழிய வதனச் சேவை வழங்கிய தேவே போற்றி
ஆழிமீ துலவி யாழி யலையினை யடக்கி யாங்கே
சூழிரும் புசலைக் காத்த தொல்லையெம் பரனே போற்றி. 22

விஞ்சிய வகங்கா ரத்தால் வினவுவே தியருண் ணுணி
அஞ்சிவா யடைபட் டேக வவிரித மூலர்ந்தாய் போற்றி
வஞ்சரான் மடிபு மாறு மறுத்துயிர்த் தெழும்பு மாறுஞ்
செஞ்செவே யுரைத்த ஞான தேசிக மூர்த்தி போற்றி. 23

தொண்டரைத் தெருட்டி யாங்கோர் துறுமலர்ச் சோலை நண்ணி
அண்டர்நா யகன்வெஞ் சீற்றத் தாழல் குளித்தாய் போற்றி
கொண்டொரு முத்தத் தாலே குறிப்பிடக் கட்டுண் டேகிக்
கண்டகர் முன்றி னின்று கடுந்துய ரடைந்தாய் போற்றி. 24

கைதவர் சினந்து தூய கமலவாண் முகத்து மிழ்ந்து
வைதுமுண் மௌலி வேய்ந்து வார்கொடு புடைப்ப மாழ்கி
வெய்துயிர்த் திழிசெஞ் சோரி மெய்யெலாம் புதைப்ப யாங்கள்
உய்திற நாடி நின்ற வுபசாந்த மூர்த்தி போற்றி. 25

முழுதுநா னறியே னென்று மும்முறை மறுத்த சீடன்
அழுதுளங் கசக்கச் செய்யு மருணோக்க முடையாய் போற்றி
பழுதின்மை யறிந்தும் வேந்தன் படுகொலை தீர்ப்புக் கூற
இழுதைய ரிகழ நின்ற யேசுநா யகனே போற்றி. 26

எம்பவச் சும்மை தானே ஹீனமாங் குருசுந் தாங்கி
அம்பதம் பெயர்ப்ப மாழ்கி யணிமறு கணைந்து நின்ற
வம்பவிழ் கோதை மாதர் வாய்திறந் தரற்ற வாண்டோர்
வெம்பரம் பிறுத்தாய் போற்றி வினைத்தொட ரறுத்தாய் போற்றி. 27

வேதனை குணிக்கற் பாற்றோ வெங்குரு சுறைந்து கொல்லும்
பாதகர்க் காய்மன் றாடிப் பரிந்துவாக் கருளிச் சோரற்
காதரம் புரிந்து ஜீவ வரும்பலி யமலற் காக்கிப்
பூதல முயச்ச மாதி பொருந்திய தேவே போற்றி. 28

பொங்குநீ ருலகுக் கெல்லாம் புண்ணியம் பொலிபப் பாவ
சங்கடந் தொலைய நாளுந் தனியறந் தழைப்ப வேத
மங்கல வோசை மல்க வானவர் மகிழ மீட்டும்
இங்குயிர்த் தெழுந்தி ரக்ஷை யீட்டிய வெந்தாய் போற்றி. 29

மலங்கிய சீட ரோடு வைகலீ ரிருபான் வைகி
நலங்கிளர் வாக்குக் கூறி நயந்தொரு முகின்மீ தேகி
இலங்குமைங் காயங் காட்டி யெம்பிரான் றிருமுன் னென்றும்
வலங்கிள ரணைமீ துற்ற மாநுவே லரசே போற்றி. 30

மூதுல கருக்கு ஜீவ முக்திசா தனமுண் டாகக்
கோதறு புனித வாவிக் கொழுங்கதிர்ப் பிழம்பை நல்கிக்
காதலுற் றடைந்தோர் தம்மைக் காப்பது கருதி யென்றும்
தாதைபாற் பரிந்து பேசுந் தயாபரா போற்றி போற்றி. 31

(பரிசுத்தாவியின் பரம்.)

திரித்துவ பராப ரத்தில் திகழதி பரிசுத் தாத்ம
ஒருத்துவ வநாதி நித்ய வுயர்மகத் துவமே போற்றி
விரித்தமுன் னீர்மு கத்து விந்தையாய் விளங்கி மேனாள்
திருத்தகு புவனம் பூத்த தெய்வமே போற்றி போற்றி. 32

மறைவழிப் படரா மாந்தர் வன்மனந் தனிற்போ ராடி
இறைவழிப் படுத்துந் தூய வெம்பெரு மானே போற்றி
சிறைவழிப் பட்டோர்க் குள்ளந் தெளிந்தநோ வாவைக் கொண்டு
முறைவழிப் போத மீந்த முக்தியா ரணனே போற்றி. 33

சுத்தமெய் விசுவா சத்தைத் துரிசற விளக்கித் தூய
பத்தனு மாபி ராமைப் பாதுகாத் தளித்தாய் போற்றி
நித்திய ஜீவ மார்க்க நெறிகடைப் பிடித்து நின்ற
உத்தமர்க் கியாண்டு நீங்கா வுறுதுணை யானாய் போற்றி. 34

வலிந்தெனை மருவு கென்று மருட்டிய வனிதைக் குள்ளம்
மெலிந்தழி யாது முன்னோர் விடலையைக் காத்தாய் போற்றி
மலிந்திடு ராஜ போகம் வரைந்தினத் தோடு மோசே
நலிந்துறு நிந்தை நச்ச நயந்தரு ளளித்தாய் போற்றி. 35

கோட்டமற் றுளந்தி ருத்திக் குலவுமெய்ப் பத்தி வித்தி
நாட்டம்வைத் தருணீர் பாய்ச்சி நலிவெலா மகற்றி யாதும்
வாட்டமின் றூக வோம்பி வரகதி விளைவித் தன்பர்
ஈட்டமார்ந் துயத்துய்ப் பிக்கு மிதயநா யகனே போற்றி. 36

போற்றித் திருவிருத்தங்கள் முற்றிற்று.

# 28 எண்பொருட் பதிகம்.

(பண்—இந்தளம்.)

ஒன்று முதலா வொருபஃ தீரு
நின்றவெண் பண்பினி கழ்வுசொற் றன்று.

ஒன்றுகொ லாம்பர மோன்னத வஸ்து
ஒன்றுகொ லாமவ ருன்னத முகதி
ஒன்றுகொ லாமுல குக்கருள் வேதம்
ஒன்றுகொ லாங்கதி யுய்த்திடு வழியே. 1

இரண்டுகொ லீச னெழுந்தரு ளாசனம்
இரண்டுகொ லாமவ ரீந்த வுடம்படி
இரண்டுகொ லாமிறை யீந்தருள் கட்டளை
இரண்டுகொல் தத்துவ மீசன் மகற்கே. 2

மூன்றுகொ லாம்பர மன்செய் முறைத்தொழில்
மூன்றுகொ லாம்விசு வாச மொழித்திறன்
மூன்றுகொ லாந்திருத் தொண்டர் முறைத்திறம்
மூன்றுகொ லாமிறை முற்படு பொழுதே 3

நாலுகொ லாமிறை நாட்டிய பூதங்கள்
நாலுகொ லாநமக் குச்சுவி சேஷம்
நாலுகொ லாநமக் குப்புரு ஷார்த்தம்
நாலுகொல் பகைவர்க்கு நம்பனுத் தரமே. 4

ஐந்துகொ லாமநி யாய விசாரணை
ஐந்துகொ லாமவஸ் தைக்களை ளுண்டகைக்
கைந்துகொ லாம்படு காயங்க ளாக்கையில்
ஐந்துகொ லாமுல கன்றதி சயமே. 5

ஆறுகொ லுலகிறை யாக்கிய திவசம்
ஆறுசொல் யோபடை யாத விடுக்கண்
ஆறுகொ லிஸரேல் தொண்டுசெய் வருடம்
ஆறுகொல் பழநறை யாக்கிய பரணி. 6

ஏழுகொ லாமுத லெண்படு வாரம்
ஏழுகொ லாமுத விடுசபை விளக்கு
ஏழுகொல் யூதருக் கெண்படு முற்றெண்
ஏழுகொல் சிலுவயி லிறைகடை வசனம். 7

எட்டுக்கொ லாந்திரி யேக ரியற்குணம்
எட்டுக்கொல் மானிடம் பிரளயத் துய்ந்தன
எட்டுக்கொ லாண்டினி யரசு சுகம்பெற
எட்டுக்கொ லாம்படைப் பியைந்துள திசைகள். 8

ஒன்பது கொன்மணி சிலுவையி னுயிர்ப்பலி
ஒன்பது குஷ்டரு றார்துதி செலுத்த
ஒன்பது வாமோஸ் உரையதி காரங்கள்
ஒன்பது வருடம் ஓசியா வரசியல். 9

பத்துக்கொ லாமெகிப் பத்துறு வாதைகள்
பத்துக்கொ லாம்பர மன்பிர மாணம்
பத்துக்கொல் கன்னியர் கைப்படு பந்தம்
பத்துக்கொல் குன்மருக் காக்கினர் வான்சுகம். 10

எண்பொருட் பதிகம் முற்றிற்று.

## 29. ஆன்ம பிரலாப மூலமும் பொழிப்புரையும்.

உம்பர் மேயசீ யோன்மலை யுன்னத கீதம்
பப்ப வேதிய னகத்துறை யாத்துமப் பன்னி
எம்பி ராணநே சரைத்தலைக் கூடுநா ளெதுவென்
றைம்பு லன்களு மயங்கிமெய் யவசமுற் றயர்ந்தாள்.

பொழிப்புரை. கிறிஸ்தவனுள்ளத்தில் வசிக்கிற ஆத்தும நாயகியானவள் ஸ்வர்க்க லோகத்திலிருக்கிற பரம சீயோன் தேவாலயமாகிய மோக்ஷவீட்டில் மிகவுஞ் சிறந்த சங்கீததொனி யெழும்பக் கேட்டுக் கர்ணானந்த பரவசியாகி யென்பிராணனாயகனாகிய ஸ்ரீகிறிஸ்துவை யென்றைக்கு முகமுகமாய்த் தரிசிக்கப் பெறுவேனோவென்று ஐம்பொறிகளு மயக்கமடைந்து தேகஸ்வாதீனமற்று மூர்ச்சித்தாள் என்பதாம்.

ஆத்துமப் பன்னி=திருச்சபையாகிய ஆத்தும நாயகி. ஸ்ரீகிறிஸ்துவே ஆத்தும மணவாளன், அல்லது சபாநாயகன் 1

தூநலந் திகழ் காதனோய் சுடச்சுடத் துய்க்கும்
பான லந்திக ழுணவெது மருந்திலள் பகைப்பாள்
கான வேடுவர் வலைப்படு மானெனக் கலங்கி
ஊன ளைந்ததன் னுயிர்துடித் துள்ளமுங் குலைவாள்.

பொ-ரை. பரிசுத்தமும் நன்மையும் விளங்குகிற பேரின்பக் காதல் தன்னை வெதுப்ப ஆற்றாளாய்ப் புசிக்கத்தக்க பால்போன்ற எந்த நல்ல ஆகாரத்தையும் புசியாளாய்ப் பகைப்பாள். கானகத்திலே வேடன் விரித்து வைத்த வலையிற் சிக்குண்ட மான்போலக் கலக்கமுற்று மாம்ஸ தேகத்தில் பந்திக்கப்பட்ட தன்னுயிர் துடித்து மனநடுக்கமுறுவாள் எ-ம்.

பாலுணவு=திருவசனமும், அதன் கருத்துள்ள மற்ற நூல்களுமாம். வாசிப்புந் தியானமுமின்றி ரக்ஷாபெருமானையே உள்ளத்து நாடியிருப்பாள் என்றபடி 2

ஆசை நாயக னருளுரு வெளியினா லயர்வாள்
தேசு லாவிய திருமுகத் தொளியகந் திளைப்பாள்
சீசி யிவ்வுடற் சுமையென்று தீர்வலென் றிணைவாள்
நேச மாற்றரி தாய்மிக நெட்டுயிர்ப் பெரிவாள்.

பொ-ரை. அன்புள்ள தன் பர்த்தாவின் கிருபாமயமான உருவெளித் தோற்றத்தை இடைக்கிடை தரிசித்து அது மறைவதினாற் சோர்ந்து வருந்துவாள். அழகுள்ள அவருடைய திருமுகப் பிரகாசத்தைத் தன்னுள்ளத்திலநுபவிப்பாள். சீசீ! இந்த ஆபாசமான தேகச்சுமை யென்றைக்கு என்னைவிட்டு நீங்குமென்று வருந்துவாள்; இவ்வாறாகத் தன் நாயகன்பேரிலுள்ள நேசத்தை விட்டுவிட இயலாதவளாய்ப் பெருமூச்சு விடுவாள் எ-ம்

உருவெளித்தோற்றம்=மானத தரிசனம். 3

உலக பாசங்க ளொழிந்துந் தம்முயிர்க் குயிராகி
இலகு மாத்தும நேசர்பா லாசைமிக் கேங்கி
விலகி னேசபா சத்தினா லிறுகுற விசிப்புண்
டலகி லாத்துமத் துயரடைந் தாக்கையுந் தளர்வாள்.

பொ-ரை. புறப்பற்றுக்கள் யாவுந் தன்னைவிட்டு நீங்கியும், தன் பிராணனுக்குப் பிராணனாயிருக்கிற ஆத்தும மணவாளன் பக்கத்தில் அன்பு மிகுத்து ஏக்கமுற்று என்றும் பிளவுபடமாட்டாத ஆசாபாசத்தினா லிறுகக் கட்டப்பட்டவளாய் அளவிறந்த ஆவிக்குரிய வருத்தத்தை அநுபவித்தலோடு தேக தத்துவங்களும் தளர்ந்து வருந்துவாள் எ-ம்.

புறப்பற்றுக்களாவன=பெண்டுபிள்ளை தனதான்ய சம்பத்து முதலாயினவை. 4

அருமை நாயகன் மூட்டிய வாசைநோய் தணியா
தெரிமுகத் துற்ற மெழுகென விளகியுள் ளுடைவாள்
திருமுகச் செவ்விகாண் குறுஞ் செவ்வி நீளிதெனக்
கருமுகிற் றுளி காண்குறுப் பயிரென கரிவாள்

பொ-ரை. தன் பிராண நாயகன் மூட்டிவிட்ட பரிசுத்த வாஞ்சையாகிய அனலவியாமல் அதன்முகத்துக் காட்டப்பட்ட மெழுகைப்போல மன முருகி வருந்துவாள். தன் நாயகனுடைய திருமுகப் பிரகாசத்தைத் தான் தரிசிக்குங்காலம் மிகவுந் தூரத்துள்ளதுபோலுமென்று மழைத்துளி காணப்பெறாத பயிர் தீவதுபோல மனந்தீந்து கருகுவாள் எ-ம்.

நோய் என்றது பரிசுத்த காமாக்கினியை. 5

உத்தமங் திகழ் காதன்மிக் குயிர்க் குயிராய
வித்தகன் றிறத் தோங்கிய விரகதா பத்தால்
சித்த சஞ்சலங் கதித்தலிற் றெருமா லுழந்து
பித்த ரிற்றிகைத் தலமரீஇ மருண்டுபே துறுவாள்.

பொ-ரை. உத்தம நிறைந்த அன்புமிகுந்த தன்னுயிர்க்குயிராகிய ஸ்ரீகிறிஸ்துவின்பேரில் தனக்குண்டான விரகதாபத்தினால் (பக்தி ஜ்வாலையினால்) மனது தாபிதப்பட்டு புத்தி மயங்கிச சித்தப்பிரமை யடைந்தவர்போலத் திகைத்துக் கலக்க முறுவாள் எ-ம்.

உத்தமங் திகழ்காதல் என்று மேற்கூறியதால் விரகதாபத்தைப் பக்திஜ்வாலை யென்றாம். 6

பண்டு பாரிடச் சூழலின் மாதவிப் பாங்கர்க்
கண்டு நெஞ்சையுங் கருத்தையுங் கவர்ந்துடன் மணந்து
கொண்டு வந்தொரு குறியிடத் துய்த்தருட் கனிவாய்
விண்ட மெய்த்திரு வாக்கெலா நினைந்துவெய் துயிர்ப்பாள்.

பொ-ரை என்னுடைய பூர்வ நிலைமையில் பைசாசக் குழாத்தின் மத்தியில் மாதவி விருக்ஷ நிழலில் என் ஆத்துமநேசர் என்னைக் கண்டு என்னெஞ்சையும் என் கருத்தையும் தமது கிருபாநோக்கத்தினாலுடனே கவர்ந்து இடைவிடாது என்னைத் தம்மோடு நடத்திவந்து தம்முடைய சாநித்தியமான வொரு குறியிடத்தில் விட்டுத் திருவாய்மலர்ந்து அருளிச செய்த அவர் திருவாக்குகள் இவை யிவையென்று மனனமாக்கி நெடு மூச்சு விடுவாள் எ-ம்.

பாரிடம்=உலகமென்றுமாம். மாதவியென்றது குருக்கத்தி மரத்தை; ஆத்துமக் கவலை தோன்றியவிடத்தென்றுமாம். ஒரு குறியிடம்=ஒரு மனப்பட்ட திருத்தொண்டர் குழீஇய கிறிஸ்துவின் திருச்சபை. 7

ஏது செய்குதி ரென்னொரு நேசர்பா லெனக்காங்
காத னோய்க்கொரு மருந்துமுண் டோவவர் கனிவாய்ப்
போது மல்குபுத் தமுதலா லென்றகம் புலந்து
மீது மீதெரி தவழ்ந்தென வெந்துபுண் படுவாள்.

பொ-ரை. (மணவாளியானவள் தன் பக்கத்துள்ளாரை நோக்கி) பாங்கியரே! நீவிர் என் பரமாக ஏதேதோ அவுஷதப் பிரயத்தனஞ் செய் கிறீரே, என்னுடைய அன்புமிக்க ஆத்தும மணவாளனிடத்து எனக் குண்டுபட்ட (இரக்ஷணிய வாஞ்சையாகிய) ஆசைநோய்க்குப் பரிகா ரார்த்தமாக நீவிர் எனக்குத் தெரிந்து கொடுக்கக்கூடிய யாதொரு மருந் தும் பயன்படுங்கொல்? ஆ! என்ன பேதமை: என் பிராணநாதாது செங்கனிவா யிதழ்விண்ட வசனாமிர்தமே யெனக்கு நித்திய ஜீவனைத் தரத்தக்கது, பிறிதொன்றுமில்லை யென்று மனதில் வெறுப்புற்றுப் பேசி விட்டு ஊடிக்கொண்டு மேலுமேலும் தாபாக்கினியால் வெதுப்பப்பட் டவளாய் ஆற்றாளாய் நொந்துவருந்துவாள் எ-ம்.

ஒரு நேசர்=ஒப்பற்ற ஒன்றான பர்த்தாவென்பதாம் காதல்நோய்= பேரின்பக் காதலில் உண்டுபடும் ஆன்ம நோய் புலத்தல்=ஊடுதல் 8

அழுத நெட்டுயிர்த் தழுங்குதல் சோருத லவாவி
எழுதல் வீழுத லிரங்குத லிருகரங் கூப்பித்
தொழுத லாதிய தொழிலலாற் றொழிலின்றித் துயர்வாள்
உழுவ லன்பினிற் கொடிதியா துவரிசூ ழுலகில்.

பொ-ரை. ஆத்துமநாயகி அழுதலாதிய தொழிலேயன்றி வேறு தொழிலொன்றுமில்லாதவளாய்த் துயரமுறுவாள். ஆதலால் தொடர்பு பற்றிய வன்பைப்பார்க்கிலும் மேலான கொடுமை உலகத்திலுள்ளனவா? இன்று எ-ம்.

உழுவலன்பு=விடாது பற்றி நிகழுமன்பு. 9

மீக்கி ளர்ந்தெழு காதலால் வெவ்விடர் பழுத்த
தீக்கொ டுஞ்சிறை மீட்டவென் னாயகன் செறுக்கும்
ஆக்கை வெஞ்சிறை மீட்டெனை யணைக்கில ரென்னாக்
கூக்கு ரற்படுத் தழுங்கித்தன் னாருயிர் குறையும்.

பொ-ரை. மேன்மேலு மதிகரிக்கின்ற இரக்ஷணியக் காதலால் ஆத்தும நாயகியானவள் மகா பயங்கர நிறைந்த நரகச் சிறையினின்று என்னை மீட்ட வென்னுயகன் என் ஆவியை மறித்துச் சிறைப்படுத்தி யிருக்கிற இந்தத் தேகச் சிறையிலிருந்து மீட்டு எனைத் தம்முடைய திருவடியண்டை சேர்த்துக் கொள்ளுகிறுரில்லையே. காரணமென்னென்று கூவிக்கூவி முறையிட்டு வருந்தித் தன்னுயிரொடுங்குவாள் எ-ம். 10

இருண்ட பாதலப் படுகர்நின் றெடுத்தபே ரன்பை
உருண்ட சிந்தையின் மறந்தன ளுலென வுள்ளித்
தெருண்டென் னுயகன் வரவிடு தூதொன்று சேரில்
மருண்ட புன்மைபோய் மாறுமென் றுருநிலை மதிக்கும்.

பொ-ரை. காரிருள் நிறைந்த பாதலமாகிய படுகிடங்கரினின்றும் என்னை யிழுத்து ஸ்வாக்க பேரின்ப மூட்டுவிப்பான் திருவுளங்கொண்டு மீட்ட என் பர்த்தாவின் அளவிடக்கூடாத அன்பின் பெருக்கத்தை ஸ்திர புத்தியற்ற நான் இடைக்கிடை மறந்துபோனேனேயென்று ஆகுலித்து என்னேசர் என்னைத் தமது திருவுள்ளத்தில் நினைத்துத் தம்முடைய ஒரு தூது அனுப்புவாராயின் அற்பத்தனமான இந்த மயக்கமுள்ள புத்தியென்னைவிட் டகன்று போகக் கூடும். போனல் தெளிவுள்ள சுபுத்தியைப் பெறுவேனென்று தன்னுள்ளத்தைத் தாணுகவே தேற்றிக்கொள்வாள் எ-ம்.

நாயகனனுப்புந்தூது = மரணமென்பதாம். 11

அன்பு லப்பிலா னடித்தொழும் பாற்றுதற் குதவாப்
புன்பு லாலுடற் பொறைசுமந் தெத்தனை பொழுது
மன்பு விப்பொறை யாய்த்திரி வேனென மயங்கும்
தன்பு லப்பகை யவித்தயோ கியர்நிலை சாரும்.

பொ-ரை. என்றும் நீங்காத பேரன்புள்ள என் ஆத்தும நேசரின் திருவடிக் கைங்கிரியஞ் செய்வதற்குதவாத அற்பமான இந்த மாம்ஸ தேகத்தைச் சுமந்துகொண்டு இன்னும் எத்தனை நாளைக்கு நான் இந்தப் பூமிக்குப் பாரமாக வலைந்து திரிவேனென்று துக்கித்துக் கவலுவாள். தமக்குப் பகையாகிய பொறிபுலன்களை யடக்கி யொருவழிப்படுத்த முயலும் யோகிகளைப் போல அங்கசேஷ்டை யாதுமின்றி யமைந்திருப்பாள் எ-ம். 12

வேறு.

பன்ன ரும்பர லோக பதவிநீத்
திங்கி லத்துவந் தெய்திய வீசனர்
மன்னு மன்பு மயத்திரு மேனியை
உன்னி யுன்னித் தன்னுள்ள முருகுவாள்.

பொ-ரை. வாக்குக்கெட்டாத பரலோக ராஜ்யத்தை யுபேக்ஷித்து ஆன்ம கோடிகளின் ஜீவரக்ஷையை அபேக்ஷித்து இவ்வுலகத்துத் திருவவதாரஞ் செய்து சற்குரு மூர்த்தமா யெழுந்தருளிய ஈசனுடைய அன்பு மயமான திருமேனியைத் தன்னுள்ளத்தில் நினைத்து உருகுவாள் எ-ம். 13

துருவி வந்தெனைத் தொண்டு படுத்தவும்
பொருவில் பேரின்ப போகத்தை யூட்டவும்
பருவ ரற்கட னீந்திய பான்மைநெஞ்
சுருவு கின்றதென் றுவியு யங்குவாள்.

பொ-ரை. தாமாக என்னைத் தேடிப் பிடித்துத் தமது திருவடிக்குத் தொழும்பாக்கவும், ஒப்பற வுயர்ந்த பேரின்ப வீட்டிலுள்ள நித்தியானந்த போகத்தை யெனக்கு ஊட்டவும் திருவுளங்கொண்டு துன்பசாகரத்தை யொரு தனியே நீந்திச்சென்ற அன்பின் வல்லமை யென்னிருயத்தைக் கிழிக்கின்றதே யென ஆவியில் தளர்ந்து வருந்துவாள் எ-ம். 14

தீங்கு மல்கிய தீக்கடன் யாவையுந்
தாங்கி நின்றுத் தரித்தெனைத் தாங்கியன்
போங்கு காதல ரூடினர் போலுமால்
நீங்கு மாறினி யென்னென நேடுவாள்.

பொ-ரை. தீமைநிறைந்த பொல்லேனுகிய வென்னுடைய பாவக் கடன்கள் யாவற்றையும் தாமேயிறுத்துத் தீர்ப்பதாக வேற்றுக்கொண்டு, அவ்வாறே கடைசிமட்டுந் தாங்கி நின்று, உத்தரவாதஞ்செய்து என்னை யஞ்சேலென அபயப் பிரதாபங்கொடுத்து என்னிடத்துப் பேரன்பு பாராட்டிவந்த என் பிராணநாதர் என்மேல் ஊடல் பாராட்டுகின்றார் போலும். அந்தக் கோபத்தை யினி நான் தீர்த்துக்கொள்ளும் விதமெப் படியென்று ஆராய்வாள் எ-ம். 15

பரதி ரித்துவ வேந்தன் பணிப்படி
வரதன் வைதிக மாட்சி வான்முறை
விரத நோன்பு பிடித்திடும் வித்தக
சரத முள்ளித் தவிப்புறு நீரமையாள்.

பொ-ரை. பரலோகத்தரசன் உத்தாரப்படி ஸ்ரீ கிறிஸ்துவானவர் வைதிக மகத்துவமான தொன்றுதொட்ட முறையின் பிரகாரமாக நாற் பதுநாள் உபவாசஞ்செய்தலாகிய விரதத்தை மேற்கொண்டு அநுசரித்த உண்மையை நினைத்துப் பரிதபிக்கின்ற நீர்மையுடையாள் எ-ம். 16

ஒருமலைச்சிக ரத்தொரு மூவருக்
கிருநி லத்துச் சுடரு மிரவிபோல்
தரும ஜோதி தழைத்திடக் காட்டுமத்
திருமுகச் சுட ருன்னித் தியங்குவாள்.

பொ-ரை. ஒரு மலைக்கொடுமுடியிலே தம்முடைய மெய்த்திருத் தொண்டர் மூவரோ டேறிச்சென்று உலகத்துக்கு வெளிச்சமிடுவான் விளங்குஞ்சூரியனைப்போலத் தருமஞானச் சுடரெறிக்குந் திருமுகப் பிர காசத்தை நினைத்துப் பொருமுவாள் எ-ம். 17

சுதத மாக்கிவெண் டுசணி நல்கித்தம்
முத்தி தந்தின்ப மூட்டிய காதலர்
வித்த கக்கனி வாயிதழ் விண்டசொல்
தித்திக் கின்றதென் சிந்தையுணின் றென்பாள்.

பொ-ரை. தன்னைச் சுத்தமாக்கித் தனக்கு நீதியாகிய வெண் வஸ்திரத்தையுஞ் சுகுண பூஷணங்களையுந் தரிப்பித்துத் தம்முடைய முத்தியையும் அருளி ஆத்மானந்தமான பேரின்ப போகத்தையு மூட்டிய என் மணவாளன் தம்முடைய ஞானபோதங் கனிந்துள்ள திருவாய் மலரிதழலர்த்திய சொல்லமுத மென்னுள்ளத்தைத் திருப்திப்படுத்தி நிலைத்து நின்றுயாண்டு மேன்மேலு மதுரிக்கின்றதே யென்பாள் எ-ம். 18

கள்ள மின்றவர் கட்டுரை யாயினும்
உள்ள முற்று முருக்கிக் கவர்ந்துடன்
கொள்ளை கொள்ளுங் குணமுடைத் தென்றுகண்
வெள்ளந் தோய்ந்தும் வெதுப்புறு மேனியாள்.

பொ-ரை. ஸ்ரீகிறிஸ்துவின் திருவாக்குகளெல்லாவற்றிலும் கிஞ்சித் பொய்யுமின்று வஞ்சமுமின்றென்று சுருதி கூறுவது யதார்த்தமே. ஆயினும் என்னக நிலையறிந்த மாத்திரமே உள்ளத்தை முற்று முருக்கி க்ஷணிகமுந் தாழ்க்காமற் கொள்ளையிட்டுக் கொண்டுபோகத்தக்க குணமுடையதென்று உலகமெல்லா மறிந்திருக்கிறதே, இதெப்படியெனத் திகைப்பவளாய்த் தான் கண்ணீர் வெள்ளமாக வடிப்பாள், வடித்தும் அக்கண்ணீரால் நனைந்து தேகங் குளிராமல் வெதும்புகின்ற தன்மையை யுடையாள் எ-ம். 19

சேவடித் துணை நோவத் திசைதிசை
ஆவலித் தெனைத் தேடிய வன்புளார்
கூவிக் கூவி விளிக்கக் குறிக்கொளார்
பாவி யேன்பிழை யேயென்று பன்னுவாள்.

பொ-ரை. உபய சரணாரவிந்தங்களும் வருத்தமுற நாலாதிசைகளிலும் பாதசாரியாக நடந்து மிக்க பேரன்போடே கூவிளிக்கொண்டலைந்து தேடிய என் ஆத்துமநாயகர் ஈண்டு நான் உரத்த சத்தமிட்டுக்கூவிக் கூவிளிக்கொள்ளவும் அது அவர் திருச்செவிக்குப் போ யெட்டக் காண்கிலன். இதற்குக் காரணம் யாது? பாவியாகிய யான் செய்த கொடும்பிழைகளேயன்றி வேறு காரணமின்று. ஆதலாலவரை நொந்துகொள்ளக் கணக்கில்லையென்று பிரலாபிப்பாள் எ-ம். 20

விண் கலக்கும் வியனெறி வீசியிம்
மண் கலந்த மயலைத் தோங்கிய
எண் கலந்த வெருசலைக் காயிரு
கண் கலுழ்ந்த கருணையை யுன்னுவாள்.

பொ-ரை ஸ்வர்க்க பதவியைக் கூட்டத்தக்க சிறந்த ஜீவவழியை உபேக்ஷையாய் விட்டுவிட்டு மண்ணுலக மயக்கமே கலந்து மேன்மேலாகச் சதிக்கின்ற மௌட்டிய நிறைந்த ஜெருசலை நகரத்தைப் பார்த்து அதன் நிலைமைக்காகத் திருவுள்ளமுருகித் தன் பிராணநாதர் தமது இரண்டு திருநேத்திரங்களிலிருந்தும் கண்ணீர் வடித்த அந்தக் கிருபைப் பெருக்கை உன்னி வருந்துவாள் எ-ம். 21

பொற்பி னுருயிர் பொன்றுடல் கூடவும்
உற்ப வத்தி னுடற்குறை நீங்கவும்
பற்பல் வெம்பிணி தீரவும் பாலித்த
அற்புதச் செய லுன்னி யழுங்குவாள்.

பொ-ரை. அழகிய வருணமயான உயிர் ஒருமுறை வியோகிக்கப் பட்ட தேகத்தில் மறுத்துவந்து புகுந்து பிரவர்த்திப்படுமாறும், பிறவியிலே சார்ந்து நின்ற அங்கவீனங்களெல்லாம் நீங்கித் தொழிற்படவும், பல வேறுவகைப் பட்ட கொடிதான தீராப்பிணிகள் தீர்ந்து வெகு ஜனங்கள் சுகமடையவும் தன் பர்த்தா திருவருள் பாலித்த அற்புத வல்லமையை நினைத்து, என் என் பிரலாபத்தை நீக்கிப் பரமானந்தத்தை யருளுகிறாரில்லையென்று மனம் வருந்துவாள் எ-ம். 22

வருதி னத்து மணத்தொழில் முற்றுவான்
குருதி வேர்த்துளி மேனியிற் கோத்துகத்
திருவு ளத்துத் திருந்தணி செய்தசீர்
கருதி யாவி கரைந்து கலுழுவாள்.

பொ-ரை. அடுத்தநாளில் (பெரிய வெள்ளிக்கிழமையில்) தமது திரு மணச்சடங்கை முடித்துக்கொள்ள விரும்பி முந்தின விரவில் கெத்செமனே யென்ற (பூந்தோட்டத்தில்)தமது திருமேனியில் நின்று இரத்த வெயர்வை துளிதுளியாய்ச் சிந்தத் தமது திருவுள்ள முகந்த தன் ஆத்துமநேசர் தம்மை மணக்கோலஞ் செய்துகொள்ள ஆயத்தப்பட்ட விந்தையைக் கருத்தூன்றி நினைத்து ஆவியிற் கரைந்து அழுது பிரலாபிப்பாள் ஆத்துமநாயகி எ-ம். 23

மெய்ச்சி ரத்தையிற் பாசம் விசிக்கவும்
பச்சி ரத்தஞ் சொரியப் பதகர்முன்
நச்சு முண்முடி தைக்க நலிவுறும்
உச்சி தத்தனி நேசத்தை யுன்னுவாள்.

பொ-ரை. உண்மையாய்த் தாம் நேசித்த அன்பின் மணவாட்டி நிமித்தமாய் பாசக்கயிறு தம்மைப் பந்திக்கவும், தம்முடைய திருமேனியினின்று பசியரத்தம் தாரைதாரையாய்ப் பீறிடவும், தம்மை வருத்தி உபாதிப்படுத்துகிற அந்தப் பாதகராகிய யூதர் முன்னிலையில் விஷ முள்ளுகளால் உண்டுபண்ணப்பட்ட கிரீடம் சிரசில் அழுந்தித் தைத்து வேதனையை மேன்மேலாக விளைக்கவும் திருவுள்ள மமைந்து சகித்திருந்த பொறுமையை யுன்னி உன்னத சிநேகத்தைச் சிந்தனைசெய்து ஆற்றாமைப்படுவாள் எ-ம். 24

குறும னக்கொடி யார்செய் குரூரமும்
சிறுமை யுமவர் தீச்சொலுந் தாங்கியத்
தெறும கத்துவர் சிந்தை சினந்திடாப்
பொறுமை யுள்ளிப் புகைந்து புலம்புவாள்.

பொ-ரை. மௌட்டியமுள்ள பொல்லாத யூதஜனங்களால் இயற்றப்படுகிற கொடுமையான அகங்காரச் செய்கைகளையும், அவர்கள் பேசும் நிந்தனையான பேச்சுக்களையும், இகழ்ந்து செய்யும் கொடிய செய்கைகளையும் நிந்தனையான தூஷணங்களையும் (தன்னைப் பாணிக்கிரகணஞ் செய்வான் வந்து தமது இஷ்டசித்தியின் பொருட்டு) க்ஷணிகத்தில்

சகல உலகங்களையும் நிர்த்தூளியாக்கத்தக்க மகோன்னதரான தேவ மைந்தன் தம்முடைய திருவுளத்தில் க்ஷமித்திருந்த க்ஷமையை நினைத்து ஆன்மநாயகி மனங்கோதித்துப் புலம்புவாள் எ-ம். 25

விருண மேனியில் வெவ்விருப் பாணிசெல்
தருண மற்றிவர் தம்பிழை யோர்கிலர்
அருண யந்துமன் னிக்கவ்த் தாவெனும்
கருணை யுள்ளிக் கசிந்து கலுழுவாள்.

பொ-ரை. காயத்தாற் புண்பட்ட திருமேனியைக் குருசோடு சேர்த்து நெருங்கப் பொருத்திக் கூரான இருப்பாணிகளைத் தைத்து மாறி மாறித் தரங்கிடுஞ் சமயத்திலும் இவர்கள் செய்யுஞ் செய்கையின் பயன் இன்னதன்மையனவென்று அறியாமற் செய்கிறார்கள். பிதாவே உம்முடைய கிருபையினிமித்தம் மன்னித்தருள்வீராகவென்று மன்றாடிய ஸ்ரீகிறிஸ்துபகவான் அன்பை நினைத்துத் தன்னுள்ள முருகிக் கண்ணீர் சொரிவாள் எ-ம். 26

ஞால மேவு நராத்தும நாயகன்
ஓல மார்குரு சொண்மட லூர்ந்தருட்
சீல மாகத் திருத்து திருமணக்
கோல முள்ளிக் குழைந்துளந் தேம்புவாள்.

பொ-ரை. உலகத்தில் அவதரித்த நராத்தும நாயகனாகிய ஸ்ரீகிறிஸ்து பகவான் துக்கத்தொனி நிறைந்த சிலுவையாகிய மடலேறி அவருடைய கிருபைப் பெருக்கத்துக்கு ஏற்ற வண்ணமாகத் தாமே மனப்பூர்வமாய்ப் புனைந்துகொண்ட திருமணக்கோலத்தை மானத பாவனையாகத் தரிசித்து மனங்குழைந்து வாடுவாள் எ-ம்.

மடல் என்றது தமிழ்ப்பாஷையில் அகப்பொருளிலக்கணத் தமைந்து கிடந்த துறை நானூற்றிலொன்று. அது பனையின் கருக்கு மட்டையால் குதிரை வடிவமாகச் செய்யப்பட்ட யந்திரப் பொறி. மணம் விரும்பியோன் இந்தப் பொறியை யூர்ந்து ஊர்வலம் வரும்வரையும் கருக்குகள் சேதித்த அறுவாய்தோறும் வெண்ணீர் சொரியுமாயின் அவனை யுபேக்ஷியாது கன்னிகையை யவனுக்கே பாணிக்கிரகணஞ் செய்விக்கவேண்டும் என்பது தமிழ்த் தேசத்து விவாகமுறைகளி லொன்றாம். ஈண்டு ஏகதேசம் கிறிஸ்துரக்ஷகர் தலைமகன். திருச்சபையாகிய ஆன்ம நாயகியே தலைவி. சிலுவைமரமே மடற் குதிரை. ஜெருசலை நகரமே தலைவியின் ஊர். ரக்ஷகர் திருவிலாவிலிருந்துசுரந்த குருதியும் நீருமே தலைவிக்காகக் கொடுதத சோபனத் திரவியமென்றறிக. 27

செயிர்த்த சிந்தையத் தெவ்வர் திகைக்கவும்
அயிர்த்த தொண்டருக் காருயிர் மல்கவும்
பயிர்சத பூம்பணைப் பள்ளியின் ஞண்டகை
உயிர்த்தெ ழுந்தமை யுள்ளியுள் ளூக்குவாள்.

பொ-ரை. அடங்காத கோபக்குணமுள்ள பகைவரெல்லாந் திகைத்து நடுங்கவும், சந்தேகித்துக்கொண்டிருந்த தம்முடைய திருத்தொண்டருக்கெல்லாம் நித்திய ஜீவபாக்கியம் பெருகவுமாக அமைந்த பூசமாதி

யினின்று புருஷோத்தமராகிய ஸ்ரீகிறிஸ்து உயிர்த்தெழுந்திருந்த ஆச்சரி யத்தைத் தன் மனதிலழுந்த நினைத்துத் தளர்ச்சி நீங்கி யூக்கமடைவாள் எ-ம். 28

ஆழி யான்வலப் பாகத் தமர்ந்துளார்
வாழி வாழியென் றேத்தினும் வைகலோர்
ஊழி யாகத் திகைத்துள் ளுடைந்தனள்
ஏழை யாத்துமப் பன்னியிங் கென்பவே.

பொ-ரை. சர்வலோக சக்ராதிபதியாகிய தமது பிதாவின் வலப் பாகத்தில் எழுந்தருளி யென்றும் வீற்றிருக்கிற ஸ்ரீகிறிஸ்துவை சதா வாழி வாழி யென்று ஸ்துதித்து இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்த போதிலும் தனக்கு இவ்வுலகத்திற் பின்னிடுகிற வொருநாள் ஒரு ஊழியாயிருக்கிறதேயென்று திகைப்புற்றுப் பிரக்ஞை யற்றிருந்தாள் பிரி வாற்றுமையினுல் ஆத்துமநாயகி என்பனவாம். 29

ஆன்ம பிரலாப மூலமும் பொழிப்புரையும் முற்றிற்று.

## 30. மோக்ஷக் கடைதிறப்பு.

திருத்தகு மோக்ஷத் திருக்கடை காதவம்
திருக்கரு ணையினுற் றிறக்கென் றன்று.
தொண்ட ருவி தூய திருக்கடை
கண்டுட் புகுதக் கருதிவிளித் தன்று.

கேடு மல்கிய நாசதே சத்துளேங் கிருபை
காடி வந்தெமைப் பிடித்துநன் னெறியிலே நடத்த
ஓடி வந்திளைத் துறுமர ணத்தையூ டுருவித்
தேடி வந்துகண் டடைந்தனந் திருக்கடை திறமின். 1

நிருத வெஞ்சிறை மறிந்துளே நீசரே முக்காய்க்
குருதி யின்விலை கொடுத்தெமை யாட்கொண்ட கோமான்
சுருதி மார்க்கத்துத் தொழும்புபட் டுளமவர் துணைத்தாள்
கருதி வந்தனங் கருணையீர் கடைதிறந் தருண்மின். 2

ஜேசு வின்திரு வதனமுஞ் செங்கனி வாயும்
நேச முங்கரு ணையும்பொழி நேத்திரங் களுநற்
றேசு லாந்திரு மேனியுஞ் செம்மலர்ப் பதமும்
ஆசை யங்கனன் மூட்டுவ வருட்கடை திறமின். 3

பாவ மாஞ்சுடு பாலையிற் பகலெலா முழன்று
தாவ ருங்கடுந் தாகவி டாய்கொண்டு தவித்திங்
காவி யேவழி காட்டவந் தடுத்தன மடியேம்
ஜீவ வூற்றுநீர் வேட்டனந் திருக்கடை திறமின். 4

பாவ தாருவின் பழநுகர் தீவினைப் பயனும்
சாவு மெம்மைவிட் டகன்றன தற்பர னருளால்
வீவின் றாகிமே னுண்முளைத் தோங்கிவிண் படர்ந்த
ஜீவ தாருவைக் காணுமா றருட்கடை திறமின். 5

இலகு மைந்துகா யங்கொண்ட வடைக்கலத் தெழிலும்
அலகை யின்றலை நசுக்கிய வரவிந்தச் சரணும்
உலகு ளேமுக்கென் றேங்கப யாஸ்தமு முளவெம்
அலகி லாண்டகை யடியரேம் அருட்கடை திறமின். 6

அம்பு ராசிசூ ழவனிக் கீடேற்றத்தை யளிப்பான்
உம்பா நின்றுதஞ் சுதனைத்தந் துன்னத வன்பால்
எம்பி ராணனுக் கிரக்ஷணை யருளெகோ வாவாங்
தம்பி ரானடித் தொழும்பரேங் தலைக்கடை திறமின். 7

அருளி னாலெமை யறிந்தனம் அருள்வழிப் பட்டேம்
அருளி னாமு துண்டன மாருயி ரடைந்தேம்
அருளி னாற்புறங் கண்டன மடுபகை யனைத்தும்
அருளி னாற்கதி யடுத்தனம் அருட்கடை திறமின். 8

பாவ மல்குபூ வுலகுளே மறக்கொடும் பாவர்
தேவ மைந்தனார் சிலுவையி னுகுத்தசெஞ் சோரி
மேவு புண்ணிய வசத்திலிவ் வீட்டுல கடைந்தேம்
ஜீவ நாயகற் றொழும்பரேங் திருக்கடை திறமின். 9

முத்தி சாதன மாகிய சிலுவையின் மூர்த்தம்
மத்த கத்துளே மானுவே லுயிர்கொடுத் தீட்டி
வைத்த மாநிதிக் குரியராய் வகுத்தசா தனமெங்
கைத்த லத்துளேங் காட்டுகேங் கடைதிறந் தருண்மின். 10

மோக்ஷக் கடைதிறப்பு முற்றிற்று.

## 31. ஜீவ திருவாக்கு.

சுவிசேஷ சாரந் துகளறு செந்தமிழ்க்
கவிவழி காட்டுங் கருத்துடைத் தன்று.

பண்ணவர் குழுமிய பரம ராஜ்ஜியம்
கண்ணிய பெருவளங் கைக்குள் ளாயது
எண்ணமென் னிடர்க்கடல் வளாகத் தேக்குறும்
மண்ணுளீர் தாழ்ப்பதென் மனந்தி ருப்புமின். 1

வித்தகந் தயைபொறை விநயந் தண்ணளி
சத்தியம் புனிதமெய்த் தருமம் பத்தியென்
றித்தகு சீலர்நட் பினிதி னூற்றிநீர்
உத்தம வழித்துணை யாய்க்கொண் டோடுமின். 2

ஆவியி லெளியவ ரடைவர் வான்கதி
மேவருந் துயருறின் மேவு மாறுதல்
தாவருஞ் சாந்தருக் குலகந் தம்வசம்
ஈவிரக் கம்முளார்க் கிரக்கங் கிட்டுமால். 3

நீதியைப் பசித்தவர் நிறையத் தேக்குவார்
ஏதமில் தூயர்கண் டடைவ ரீசனை
பேதமற் றைக்கியம் பிறங்கச் செய்குநர்
காதலர் கடவுள்வேந் தருக்குக் காண்மினோ. 4

நீக்கமில் நீதியி னிமித்தந் துன்புறில்
மேக்குயர் வானநாட் டின்ப மேவுவார்
மீக்கிளந் தவரெலாம் விபுத நாட்டுள
பாக்கிய மடைந்துயும் பவித்தி ரான்மிகள். 5

வேறு.

அம்ப ராதிபன் னும்பிதா வவாரு ணன்மை
இம்பர் நல்லர்பொல் லாருக்கு மியைவன கண்டீர்
தம்பி ரானென நீவிருஞ் சற்குணந் தழுவி
வெம்பு தீமைக்கு நன்மையே விருப்பொடு விளைமின். 6

ஈர நீருல கத்தினுக் குப்பென வியைவீர்
சோர விட்டிடா துலகரைத் தூயநல் லொழுக்கால்
சார மேற்றுமி னன்றெனிற் றள்ளுண்டு மிதிபட்
டாரும் வையகத் தவமதிப் படைவீர் தறிமின். 7

உலகி னுக்கொளி நீயிரும் முத்தம கிரியை
இலகு மென்னிலங் கவரகத் திருளிரிந் தோடும்
விலகி வில்லிடு மொளியையுள் ளடக்கிமேல் மூடில்
அலக றுஞ்சுட ராற்பயன் பிறிதுள வாங்கொல். 8

கொலைசெ யற்கவென் றுரைத்தகற் பனையுண்மை குணிக்கில்
புலைசெய் கோபமு மிகழ்ச்சியும் பிறர்நெஞ்சு புண்பட்
டுலைய மீப்படிற் கொலையுமா மாதலி னுடையார்
நிலைமை யாமெரி நிரையபா தலமென நினைமின். 9

விபச ரித்திடா யென்பது விதியதை விரிக்கில்
தபசி யேனுமற் றொருத்திபா லிச்சையுட் டரிக்கில்
அபச ரித்தனு மாக்கினை யடைந்தன னவனை
உபச ரிப்பது நரகபா தலமென வுணர்மின். 10

உள்ள தையுள தென்றுரை யாடுமி னிலதை
விள்ளு மின்னில தேயென விதனின்மேற் பட்ட
கள்ள வாசகம் யாவையுங் கருதருந் தீங்கென்
றெள்ளு மின்சுவி சேஷமாக் கத்தியல் பிதுவே. 11

திருகை ஞாலத்துப் புகழ்பெறச் செயுந்தரு மத்தில்
வருகை யொன்றிலை மறுமையிற் புகழ்மதி யாதிங்
கொருகை செய்வதை மறுகையுற் றறிகிலா துஞற்றில்
பெருக மாண்பய னளிப்பர்நும் பிதாவுள மகிழ்ந்தே. 12

துறைதொ றும்புகழ் நச்சிவீண் மொழிகளைத் தொகுத்துப்
பறைய றைந்தெனப் புரிஜெபம் பயன்படா தென்றும்
அறையி லந்தரங் கத்திலே சந்நிதி யடுத்துக்
குறையி ரந்துமன் றாடுமி னருள்வர்நங் கோமான். 13

செறுத்து மக்குமற் றவர்செயுந் தீமையைச் சிந்தை
நிறுத்தி டாதுமன் னிப்பீரே னீர்செய்தீ மைகளும்
பொறுத்து மக்குமன் னித்தருள் புரிவர்பூ தலமுற்
றொருத்தி டற்கதி காரியா முன்னதத் தாசன். 14

உரிய மாநிதி துறுமிடத் துறுமும திதயம்
அரிய வானிதித் திரட்கரு வூலத்தை யாக்கித்
துரிய பூமியிற் றொகுமினே பூச்சியுந் துருவும்
திரியுஞ் சோரரு மில்லையப் புனிதக்ஷேத் திரத்தில். 15

ஒருவ னூழிய மிரண்டிய மாநருக் குஞற்றில்
ஒருவ னட்பொரு வன்பகை யாமுல கியற்கை
ஒருவு மின்னுல கூழிய மூர்த்தநாட் டரசன்
ஒருவர்க் கேயினி தூழியஞ் செய்மினுள் ளுவந்து. 16

வித்தி டாபயிர் விளைத்திடா விளைந்தவை சேர்த்து
வைத்தி டாவொரு களஞ்சியத் தெனினும்வான் பறவைக்
கத்த னார்பரிந் தெத்தனை யாயுண வளித்து
நித்த மும்பரி பாலனஞ் செயுமரு ணினைமின். 17

கான மல்குபூ மலர்க்குலங் கவின்பெறு காட்சி
ஞான நாயகன் றெழிலலால் நவிலமற் றில்லை
மேன லம்பெறு சாலமோன் வேந்துமவ் விதத்தில்
தான ணிந்துடை தரித்தில ஞலிந்த ஜகத்தில். 18

சொன்ன மற்றிவை துணிந்துநீர் யாமெதைத் துய்த்தும்
இந்நி லதெதை யுடுத்துமென் றேக்குறு திருமின்
பொன்னி லத்தர சன்பிதா வாதலிற் புலவீர்
நன்ன லத்தவூ ணுடைதெரிந் தளிப்பர்நா ணாளும். 19

அழிவி லாப்பர லோகவாழ் வொன்றையே யவாவி
ஒழிவி லாதுளங் கவலுமின் முயலுமி னுண்மை
வழிவி டாதுநே ரோடுமின் மற்றவை யெல்லாம்
பழிப டாதுமக் கருளுவ ருன்னத பரமன். 20

உற்று நோக்கியுன் கண்ணுறு முத்திர மொழித்த
பிற்றை யந்நியன் கட்டுரும் பெடுத்தெறி பெற்றி
தெற்றென் றோர்வையீ தன்றிநீ பிறர்பிழை தெரிந்துன்
குற்ற முள்ளுறப் புதைத்திடல் கொடியமா மாயம். 21

எந்த நீதியிற் பிறர்குற்றங் கண்டுதீர்ப் பிடுதிர்
அந்த நீதியி னுங்குற்றங் கண்டுதீர்ப் படைவீர்
எந்த வாறெந்த நீதியிற் பிறர்க்களந் திடுதிர்
அந்த வாறளக் கப்படு முமக்குமென் றறிமின். 22

அரிய நித்திலக் கோவைநீர் பன்றிமீ தணியில்
தெரிகி லாதத னருமையைச் சீரழித் திடுமால்
உரிய மாண்பரி சுத்தவூண் குக்கல்முன் னுய்த்துச்
சொரிய கிற்பினு மன்னவா மென்பது துணிமின். 23

கேட்டுந் தேடியுந் தட்டியுஞ் சிந்தனை கிடைப்பர்
நாட்டு மானிட ராதலின் நமபனை யடுத்துக்
கேட்டுந் தேடியுந் தட்டியு முயன்றிடிற் கிடையா
வீட்டு வாழ்வுகை யுறுமிது சாதமாம் விரைமின். 24

தீங்கு மல்குநீர் சிறுவர்க்கு நல்லன தெரிந்து
பாங்கி னல்குதிர் மன்பொதுத் தந்தையாம் பரமன்
ஏங்கி நின்றுமன் றாடுமுங் களுக்குள மிரங்கி
ஓங்கு நன்னல மளிப்பரென் பதற்கைய முளகொல். 25

மற்றை யோருமக் குச்செய மனக்கொள்வ தெதுகொல்
அற்ற தேபிறர்க் காக்குநல் லறமென வறிமின்
இற்றி தேநியா யப்பிர மாணமு மேனோர்
சொற்ற பௌஷிக தரிசனங் களுமுண்மை துணியில். 26

ஜீவ பாதையி னிடுக்குறு திருக்கடை சேர்ந்துட்
போவ ரோர்சிலர் பாதையும் புகலரு நெருக்கம்
பாவ மல்கிய பெருவழி கேட்டினுட் படுத்தும்
ஆவ லோடதி னடப்பவ ரும்பல வனந்தம். 27

ஆட்டுத் தோல்பொதிந் தாருயிர் கவருங்கோ ணுயின்
வீட்டுப் பாதைமற் றீதிதென் றவனிக்கு விளக்கிக்
காட்டிக் கைப்பொருள் கவர்ந்திடுங் கள்ளப்போ தகர்வாய்க்
கேட்டுக் குட்படா தகலுமின் கிரியையாற் றெளிந்து. 28

வாயி னுலெனைக் கருத்தனே யென்றுபேர் வழுத்தி
ஆயி ரந்தாங் கூவினு மாவதென் னகில
நாய கன்சித்த மறிந்தந்த நடைகடைப் பிடிப்போன்
தூய ராஜ்ஜிய பேரின்பந் துய்ப்பவ னறிமின். 29

வேறு

நமரங் காளிங்கு சொற்றவை நம்பிரான்
விமல சித்தவி ளம்பர மாதலில்
சமர பூமித ணந்திங்கெ றிப்படீஇ
அமரர் நாடடை யததகு மாய்மினே. 30

மற்றி வாய்மைம னக்கொடு வானெறி
பற்றி யேகுப வனெவன் பாறைமேல்
கொற்றி வானிட்டு வீடு குயிற்றிய
குற்ற மற்றவி வேகிகு ணித்திடில். 31

சண்ட மாருதம் வன்மையிற் றூக்கியும்
கொண்டன் மின்னியி டித்துக்கு முறியும்
மண்டு வெள்ளம றிந்துற மோதியும்
விண்டி டிந்துவி ழாதந்த மேனிலே. 32

உளம்ப டப்பகுத் தோதிய வுன்னத
விளம்ப ரத்தைவெ றுத்தவன் வெண்மணற்
களம்ப டுத்தலிற் கட்டழி மென்றுண
வளம்ப டுத்தம தியிலி போலுமால். 33

இத்தி றத்தன வேகசர் வேசுரன்
சித்த மென்றுதி ருத்தகத் தெள்ளிதின்
வித்த கக்கனி வாயிதழ் விண்டனர்
சுத்த மெய்ச்சுவி சேஷவுத் துங்கரே. 34

ஜீவதிருவாக்கு முற்றிற்று.

## 32. விசுவாசமாட்சி.

பார்க்கி ரக்ஷணியம் பயன்படத் திருச்சபை
தீர்க்க விசுவாசத் திறந்தெரித் தன்று.

எம்பி கேட்டிநம் பொறிபுலன் களுக்கிலக் காகா
தம்ப ரத்துள ரகஸியப் பொருளறி வுறுத்தும்
உம்பர் நாயகன் சுருதியவ் வுண்மையை நம்பி
இம்பர் நோற்றலே மெய்விசு வாசத்தி னியற்கை. 1

தெரிவ ரும்பர ரகஸியம் யாதெனச் செப்பில்
புரவு நூல்வழி தெரித்தநம் புராதன சபையின்
குரவ ரேதிரு வசனத்தைத் தொகுத்தது குணித்தார்
கரவி லாதவம் மொழியினைக் கழறுவல் கேணீ. 2

வானம் பூமியெல் லாவுல கங்களும் வகுத்த
மோன மாகிய சருவவல் லமையுள முதல்வன்
ஞான மேதிரு மேனியாக் கொண்டநந் தாதை
தூந லங்திகழ் வஸ்துவுண் டென்பதென் றுணிவு. 3

தந்தை யாகிய தற்பரற் கொருசுத னருளால்
மந்தி ராற்புத மாக்கன்னி மரிவயிற் றுதித்தோன்
இந்த மாநிலத் திரக்ஷணை புதுக்கிய வீசன்
பொந்தி யுப்பிலாத் துழையரும் பாடுகள் பொறுத்தோன். 4

மாசி லாவுயிர்ப் பலிசிலு வையிலுவந் தீந்தோன்
பூச மாதியுற் றுயிர்த்தெழுந் துன்னதம் புக்கோன்
ஈச னோர்வலப் பாகத்தி லினிதுவீற் றிருப்போன்
ஏசு வாங்கிறிஸ் திரக்ஷக னென்விசு வாசம். 5

மூன்றொன் றாகிய முழுமுதற் பொருளிலே முளைத்துத்
தோன்றி ஜீவரைத் தூய்மையாய்ப் பக்குவப் படுத்தும்
ஆன்ற போரு ளாவியி னனுக்கிர கத்தை
ஊன்றி யேகுவல் ஜீவனுக் கென்மனத் துண்மை. 6

தூய வோர்பொதுத் திருச்சபை தூயரி னைக்கியம்
ஆய பாவமன் னிப்புமீட் டாக்கைபெற் றெழுதல்
ஏயு நித்திய ஜீவனென் றிவையுள வென்றே
மாய மின்றியென் மனக்கொளக் கிடந்தவிஸ் வாசம். 7

என்று ளங்குவிந் தெவனிவண் பகிர்முக மாக
நன்ற றிக்கையிட் டிறுவரை நன்னெறி பிடித்தே
நின்றி டிற்பர கதிபுகூஉ நித்திய ஜீவன்
ஒன்றி வாழ்குவ னுன்னதத் தாழியோ டூழி. 8

இத்த கைப்படு மெய்ச்சுரு தித்தொட ரிதுவே
சுத்த சத்திய மெய்விசு வாசத்தின் றொகுதி
உத்த மந்திகழ் ஜீவனுக் குறுதுணை யுலவா
முத்தி வாயிலுட் புகுத்திடு முத்திரை விகிதம். 9

மரண பாசத்தை மதுமண மாலிகை யாக்கும்
திரண மாக்கிடு மலகையை யுலகத்தைத் திரித்துட்
கரண சுத்தநற் கருமத்திற் கருத்தினைத் திருத்தும்
புரண புண்ணியற் கன்புசெய் புனிதவிஸ் வாசம். 10

களங்க மற்றவிச் சிறத்தைநீர்க் கயங்கட மதிபோல்
உளங்கொ ளீஇச்சில ருழையுரங் கொண்டுநின் றோங்கி
விளங்கு மோர்சில ருள்ளத்து மறைபடூஉ மெலிந்து
துளங்கி நிற்குமா லிறுவரை யுயர்சதி தருவி. 11

ஒரும கப்பலி யூட்டிய வுரிமையு மாசின்
திருவை நீத்தினந் தழுவிய தீரமுஞ் சினத்தீப்
பொருமழற்படு சூளையை முடங்குளைப் புழையை
வெருவு றெதிர் தருக்கிய வெவ்விய விறலும். 12

உலகை யுள்ளுநவர்த் தோட்டிய வுத்தம நிலையும்
அலகை யைப்புறங் கண்டுளா ராற்றலின் மாண்பும்
கலக மிட்டுயிர் கவிழ்த்தபோழ் தத்துமுட் கலங்கா
திலகு மெய்வயி ராக்கியத் தியற்கையு மினவும். 13

தேரி னெம்பிமற் றிவ்வெலாந் தீர்க்கவிஸ் வாசத்
தாருஞ் செய்கையென் றறியினி யற்பவிஸ் வாசச்
சீரு மீண்டெடுத் தியப்புவல் சிறியவோ ரிடுக்கண்
சாரு மாயினுந் தளர்ந்திடுங் குலைந்துளஞ் சாம்பி. 14

பண்டு மாநிலக் கிழமையைப் பத்தியிற் படைத்தும்
மண்டு சோதனைக் கிடைந்துபின் வாங்கிவீழ் மரபும்
ஒண்டொ டிக்கெதி ரூன்றிடா துண்மையைப் புரட்டி
அண்டர் நாதனை மறுத்தபே ரவலத்தின் மாண்பும். 15

நீதி மான்றின மெழுமுறை விழுந்தெழு நீர்மை
பேதி யாதருண் மொழிமொழி பெற்றியும் பிறவும்
சாது மார்க்கஞ்செ லற்பவிஸ் வாசத்தின் சமைவாம்
வேதி யாதுநின் னுளத்திடைப் பொறித்திவிட் டிடலே. 16

விசுவாச மாட்சி முற்றிற்று.

## 33. மாயாபுரி.

பேயா ளுகைசெல் பிரபஞ்ச மாய
மாயா புரியின் மரபுரைத் தன்று.

தீவி னைக்கொரு களஞ்சியந் தீக்குண மன்றம்
பூவி னுக்கநு போகமா ளிகைபுலை புரக்குங்
கோவி னுக்கா சிருக்கைமாந் தருக்கொரு கொப்பம்
ஜீவ னுக்கெலாங் கேடுமா யாபுரிச் சிறையே. 1

பாத கத்தொழில் பயில்விடம் பாதலம் புகுத்தும்
வேத னைப்பயிர் விளைபுலம் வியன்பிர பஞ்சச்
சாத கத்திரள் குழுமிய தனிப்பெருங் கோட்டம்
சோத னைப்படு கிடங்குமா யாபுரிச் சூழல். 2

உலக மாயவர்த் தகம்புரி யொருபெருஞ் சந்தை
கலக வாள்விழிக் கணிகையர் காமியக் கோட்டி
அலகி லாதபொய்த் தேவருக் காலய மழிம்பர்க்
கிலகு கின்றமா யாபுரி யிருதய ஸ்தானம். 3

நாச தேசமென் றிசைபெறு நானிலக் கிழத்தி
நீச மான்மதி வதனமோ நினைவினைக் கவரும்
மோச வாள்விழி யோதட மார்பிடை முயங்கும்
காசி னாமோ வென்கொல்மா யாபுரி கருதில். 4

மெய்யு ரைப்பவர் யாவரு மடம்படு மிலேச்சர்
பொய்யு ரைப்பவ ரேயதி புண்ணிய புருஷர்
கையு லோபரே மதியுளார் கசிந்துப காரம்
செய்யு மாந்தரே பைத்திய ரிங்கர்ச் செல்வி. 5

பத்தி நூல்வழிப் போக்கர்மேற் படாப்பழி கூறிக்
கத்து வார்தெருத் தெருத்தொறுங் கத்தபங் கடுப்ப
குத்தி ரத்துவ வேடர்பாற் கூட்டுண்டு களித்து
மித்தி ரத்துவம் பூணுவர் கொக்கன விரகால். 6

பஞ்ச தந்திரம் பயிலுவர் காமநூல் படிப்பர்
தஞ்ச மாக்கிய வுடைமையைத் தமதெனச் சதிப்பர்
நஞ்ச மன்னதீ வினையெலா நயந்தநுட் டிப்பர்
வஞ்ச மல்குவாய் மொழியினாற் புதைபட மறைப்பார். 7

கடனை வாங்கியே மாற்றுவர் சிலர்சிலர் கையிற்
கடனை வையெனத் தொண்டையை நெரிப்பர்கைக் கணக்கிற்
கடனை யேற்றிமற் கட்டுவர் சிலர்சிலர் கடுகிக்
கடனை யன்றியோர் காசிலை யெனப் பொருள் கரப்பார். 8

தன்ன யங்கெடா துலகுவப் பாக்கலே தருமம்
என்ன தீங்குசெய் தாயினு மீட்டலே பொருள்மற்
றின்ன லின்றியே யருந்தலும் பொருந்தலு மின்பம்
பின்ன ராவதே வீடென்ப திங்கசர்ப் பிரமை. 9

மன்னு நற்குண மங்கல வணியிலா மடவார்
நன்னர் மேனியை மினுக்கியும் நல்லுடை புனைந்தும்
இன்ன றும்புகை யூட்டியு மெழினலம் புகழ்ந்தும்
பொன்ன ருங்கலந் திருத்தியும் பொழுதுபோக் கடிப்பார். 10

சதுரர் யாமெனத் தருக்கிய வாடவச் சழக்கர்
மதுவி றைச்சியுண் டாடியும் வஞ்சனை யிழைத்தும்
முதுவ ரைப்புறக் கணித்துப்வெஞ் சூதுப்போர் முயன்றும்
பொதும னைத்தொழும் பியற்றியும் பொழுதுபோக் கடிப்பார். 11

நீச மல்குமா யாபுரி நெடுநக ரிடைச்செல்
மாசி னூல்வழிக் கிருமருங் கினும்பல வளஞ்சேர்
தோசை பெற்றமா யக்கடை வீதிபொன் றுளதிங்
நாச தேசமா தமங்கலக் கழுத்திடு நாண்போல். 12

வேறு.

மீயுயர் கதியை நாடி வேதநூ னெறியிற் செல்லும்
தூயரைக் கெடுப்பா னெண்ணித் துணிந்து பேயேல் செபூலாம்
பேயினத் தாச னாகித் தியற்றினன் பிறங்க மேனாள்
மாயசூ னியப்பண் டங்கண் மலிந்தவிம் மாயச் சந்தை. 13

அலகறு நிதியுத் யோக மாளுகை மகிமை பட்டம்
இலகுபொன் வெள்ளி யில்ல மிசைதன தானி யங்கள்
பலகலன் வாக னாதி படைக்கலந் தவிசு டம்பம்
உலகசம் பத்துல் லாச முயர்குலப் பெருமை மேன்மை. 14

பலகலை ஞானோ பாயம் பகட்டுரை பஞ்ச தந்த்ரம்
அலகிலாச் சூது வஞ்ச மபகட மபததா பாசம்
கலகமிச் சகமே மாற்றங் கள்ளங்கை தவம்வா சாலம்
குலகுறி யடையா ளங்கள் குசோத்தியங் குதர்க்கங் கோட்டம். 15

மந்திர வித்தை யட்ட மாசித்தி மாய வித்தை
எந்திர வித்தை கண்கட் டிந்திர சால வித்தை
தந்திர வித்தை யோகந் தருவித்தை கருவின் வித்தை
விந்தையா ரோப வித்தை வெகுவித விநோத வித்தை. 16

உரைவிதந் தனைய வாய வுலப்பிலா மாயப் பண்டம்
தரைவளம் படுக்கு மாயச் சந்தையித் தகைமைத் தொன்றோ
வரைவரை போலத் தொக்கு மலிந்தமா பாவப் பண்டம்
விரைவினி லழிந்து தோன்றி விலைப்படும் வைக றோறும். 17

வித்தகக் கலைப்ப யிற்சி மேதையாத் துமவி சாரம்
உத்தம ஞான நன்மை யுண்மைநல் லுணர்ச்சி தேவ
பத்தியுள் ளன்பு சாந்தம் பவித்திரந் தயைகண் ணோட்டம்
சித்தநற் குணநற் செய்கை ஜெபதப விரதஞ் சீலம். 18

முத்திசா தனங்க ளாக முறைமுறை திகழ்த்திக் காட்டும்
இத்தகு வனப்பு வாய்ந்த விரும்பொரு ளிவற்றொன் றேனும்
குத்திரம் பயிலு மாயக் கடைதொறுங் கோடி செம்பொன்
வித்தினுங் கொளக்கிட் டாது விடமன்றித் தருமோ நாகம். 19

அவந்தரு திருவி னைய வாவணத் தணிகொள் வீதி
நிவந்திரு பாலுந் துற்றி நிலவுவர்த் தகசா லைக்குள்
நவந்திகழ் மாய சால நயந்துவீற் றிருந்தெந் நாளும்
உவந்துல கருந்த வூட்டி யுயிர்ப்பலி கொள்ளு மன்றே. 20

மாணுடை யுணவு பான வருக்கஞ் சந்தனஞ் சுகந்தம்
பூணணி கலன்கர்ப் பூரம் புது நறுங் கலவை மென்பூக்
காணநெஞ் சிவருங் காட்சிக் கருப்பொருள் பலவு மீட்டி
நீணகர்க் குதவி யென்று நிறைவளம் படுக்கு மாதோ. 21

வரைகட னகர நாடு வனம்படு மமுதத் தோடு
குரைகடற் புவியின் மேய கொழுநிதிக் குவையும் விண்மீன்
புரைநவ மணியி னாய பொற்குவை பலவும் பொங்கி
நிரைநிரை பொலிய வெங்கும் நிருத்தனம் பயிலு மாயம். 22

அகத்திரு ளிரிக்கு மன்றோ வவிரொளித் தீபம் யாண்டும்
தொகுத்தபன் மணிமுத் தம்பொன் சுடர்விரி வைர மாதி
மகத்தொளி விளக்கநாளும் மாயவர்த் தகஞ்செய் மாந்தர்
அகத்திருண் மலியு மல்லா லகல்கில திதுவே யாக்கம். 23

பல்வளங் கெழுமு நானா தேசத்துப் பயின்றங் குள்ள
நல்வள மொருவி ஜீவ நாசத்தை மலியக் கொண்டு
சொல்வளம் பெருக்கி விற்றுச் சூனியப் பொருளை யாக்கிக்
கொல்வளம் படுக்கு மாயக் குத்திரங் குலவுஞ் சந்தை. 24

அங்கிலோ தேசத் துள்ள வரும்புரு ஷார்த்தங் கொள்ளார்
பொங்குடாம் பீகம் வன்கண் பொருளீட்டு தந்தி ரங்கள்
வெங்குடி கேடென் றாய விநாசத்தை விலைப்பா லீட்டிச்
சங்கடம் பகரு மாயச் சந்தையி னமலைத் தெங்கும். 25

மாயிரு ஞாலத் துள்ள வரம்பில்தீக் குணங்க ளெல்லாம்
தீயசிற் றின்ப போகச் செவ்வியா யுருவு வாய்ந்து
மேயவிவ் வுண்மை தோரார் விழிமருண் டெளிதிற் றுய்ப்பார்
தூயஜீ வியத்தை நல்கிச் சுடர்விழு பதங்க மேபோல். 26

பாரீச னாகக் காட்டும் பாதகப் பசாச னுய்த்த
மாரீசக் கடையின் சால வஞ்சவின் பத்தை நச்சி
நேரீசற் குழுவின் மொய்த்து நிலவுல கத்து மாந்தர்
ஓரீசத் துணர்வற் றான்ம வூதிய மிழப்ப ரந்தோ. 27

ஆரணங் காட்ட நாடி யகங்குழைத் திருப்பார் யாண்டும்
ஆரணங் காட்ட நாடி யகங்குழைந் திருப்பா ரில்லர்
தாரணி தந்த ஞானச் சனியனைப் பணிவார் யாண்டும்
தாரணி தந்த ஞான தம்பிராற் பணிவா ரில்லர். 28

மறங்கடைப் பிடித்து நின்ற வன்கணார் மறுமை நோக்கி
அறங்கடைப் பிடியா ரென்னோ வழிமதி படைத்து மாயம்
பிறங்கிய மறுகு லாவிப் பேதுற்று வறிது மாள்வர்
கறங்கிசை யவாவி மாயுங் கேகயங் கடுப்ப மன்னோ. 29

தெருட்கடல் படியாச் சிந்தை தீவினைக் கடற்குள் ளுய்ப்ப
அருட்கடல் படியா ராகி யாசையங் கடற்குண் மூழ்கி
இருட்கடற் படுவ ரந்தோ விந்நக ரத்து மாக்கள்
மருட்கட லிகந்தா னந்த மாக்கடல் குளிப்ப தென்றே. 30

வேறு

நித்தி லம்பவ ளஞ்செறி நீர்மையிற்
பத்தி யாய்த்திரை நாடிய பான்மையிற்
கத்து லப்பரி தாயக ணக்கினில்
தத்து நீர்க்கட லொக்குமச் சந்தையே. 31

படம்வி ரித்துப் பஃறலை தோய்ந்துபே
ருடல்கி டத்தியு றுவன வாயிடூஉக்
கொடுவி டம்பொதிந் தாருயிர்க் கொள்ளைகொள்
நெடிய பாந்தளங் நீள்கடை வீதியே. 32

மூச்சுக் காயிரம் பொன்படு முந்துபொய்ப்
பேச்சுக் காயிரம் பொன்படும் பேசுவெள்
வீச்சுக் காயிரம் பொன்படும் வீச்சவா
யேச்சுக் காயிரம் பொன்படு மென்றுமே. 33

கோடி கோடிகு விப்பன குத்திரம்
சோடி கோடிகு விப்பன கோண்மொழி
கோடி கோடிதி ரட்டுங்கொ டுவினை
கோடி கோடிகு வைநிதிக் கொள்ளையே. 34

கோடி கோடிகு லப்பெரு மைகொளும்
கோடி கோடிவெங் நோயிற்கு றைந்திடும்
கோடி கோடியுல் லாசத்திற் கொள்ளைபோம்
தேடி வைகலுஞ் சேமித்த தீநிதி. 35

ஆட ரங்கம ழிப்பபல் லாயிரம்
பாட ரங்கம்ப றிக்கும்பல் லாயிரம்
கூட ரங்கங்கு மைக்கும்பல் லாயிரம்
கேட ரங்கங்கெ டுக்கும்பல் லாயிரம். 36

கண்ட மாயக்க டையுங்க வின்கடை
தண்டு மாயச்ச ரக்குஞ்ச ரக்கினின்
மண்டு மின்பமு மாயையெ னுமதி
பண்டொர் ஞானிப கர்ந்தன னுண்மையே. 37

உன்ன தானந்த வோங்கல ரசன்முன்
இந்நி லத்துவந் திவ்வழிச் செல்கையில்
மன்னு மாயவின் பத்தைவ ரைந்துசீ
என்ன வீசிப்பு றக்கணித் தேகினர். 38

தொண்டர் பன்னொரு வோருமித் தொன்னகர்
கண்டு மாயக்க டையைக்க டிந்துமெய்
விண்டு வர்த்துயிர் வீடுமட் டாயுரங்
கொண்டு நின்றுபி ரானடி கூடினர். 39

மாயாபுரி முற்றிற்று.

## 34. பன்மணி.

முனைவனை யறிய வேண்டில் முற்றுநீ யியற்றும் பாவ
வினையெலாந் தொலைய வேண்டில் வீட்டின்ப மடைய வேண்டில்
இனிவருந் தேவ கோப மெரித்திடா திருக்க வேண்டில்
மனுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே. 1

தனியிடத் திருந்து பாவச் சழக்கினைக் கருதி யாவி
அநுமதி பெற்றுத் தேவ வன்பினை யிதயத் துன்னி
கனியுமுள் ளன்பி னோடு கண்கணீர் ததும்ப நின்று
மநுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே. 2

தனுகர ணங்க ளோய்ந்து தளர்ந்துமூச் சொடுங்கு காலை
மனைமகார் துணையா வாரோ மருங்கிருந் தழுவ தல்லால்
அநவர தமுமு னக்கோ ராந்துணை விரும்பி வின்னே
மநுவுரு வாய யேசு மலரடி வணங்காய் நெஞ்சே. 3

காவ னத்திலே நிசியிடைத் தனியிருந் துலகெலாங் கதிசேரத்
ஜீவ னைக்கொடுத் திடவரு திறநினைந் திரத்தவேர்த் துளிசிந்தி
ஆவி யிற்கொடுந் துயரமுற் றையருக் கபயமிட் டதுமங்காள்
தேவ மைந்தனார் சகித்தவே தனையுமென் சிந்தைவிட் டகலாவே. 1

மூசு முண்முடி முடித்திட முனிவுறு முகசரோ ருகப்போதும்
நேச மோடுபே துருமனங் கசந்தழ நோக்கிய நெடுங்கண்ணுந்
தேசு குன்றிவெங் குருதிநீர் பொழிதரு செய்யமே னியுமெம்மான்
ஏசு நாயகன் சரணதா மரையுமென் னிதயம்விட் டகலாவே. 2

பாவி யென்றெனக் குணர்த்திய கருணையும் பாவநா சரைக்காட்டி
யேவி யென்னையங் கவர்வயி னடத்திடு மிருந்திற மையுமெற்கா
யோய்விலாதுபி தாவைமன் றாடலி லுற்றெழு பெருமூச்சும்
தேவ வாவியின் புனிதமாச் செயலுமென் சிந்தைவிட் டகலாவே. 3

சிந்திக்க நெஞ்சடியேன் சென்னியிறைஞ் சக்கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய்—புந்திக்குள்
வீற்றிருக்கும் ஜேசு விரைமலர்ப்பூஞ் சேவடிக்கே
ஆற்றுகமெய் யன்பின் பணி.

பன்மணி முற்றிற்று.

இரக்ஷணிய மனோகரம் முற்றிற்று.

# அரும்பதவகராதி.

## அ.

அகல்—தகழி.
அகோரம்—உக்கிரம், கொடுமை.
அங்குரித்தல்—முளைத்தல்.
அச்சோவே—அய்யாவே.
அஞர்—துன்பம்.
அஞ்சலி—வணங்கல், கைகுவித்தல்
அணை—ஆசனம்.
அதமர்—கடைத்தரத்தார்.
அதீதம்—கடந்தது, எட்டாதது.
அந்தக்கரணம்—மனோதத்துவம்.
அந்தோ—ஐயோ.
அபயாஸ்தம்—பயந்தீரவணைக்குங்கை
அமருலகம்—தேவ லோகம்.
அமலை—சத்தம், இரைச்சல்.
அமையம்—சமையம்
அம்பதம்—அழகியதிருவடி.
அம்புஜம்—தாமரை.
அம்புராசி—சமுத்திரம்.
அம்புவி—பூமி.
அம்மை—மறுமை.
அரணம்—புகலிடம், அடைக்கலஸ்தானம்.
அரவிந்தம்—தாமரை.
அரா—நல்லபாம்பு
அருத்தி—ஆசை.
அர்ச்சை—விக்கிரகம்.
அலகிடுதல்—அளவிடுதல்.
அலகில்லா—அளவில்லா.
அலகை—பசாசு.
அலக்கண்—துன்பம்.
அல்வந்தமனம்—இருண்டமனம்.
அவனி—பூமி.
அவாவி—விரும்பி.
அவிரொளி—பிரகாசம்.
அளியன்—பரிதபிக்கப்படத் தக்கவன்.
அற—மிகவும்.
அற்றம்—சமையம்.
அனகன்—பாவமில்லாதவன்.

## ஆ.

ஆகாமியம்—அக்கிரமம்.
ஆதன்—குருடன்.
ஆதாளி—பேரிரைச்சல், கலகம்.
ஆபாசம்—போலி, அசுத்தம்.
ஆய்—தாய்.
ஆரணியம்—காடு.
ஆர்கலி—சமுத்திரம்.
ஆலம்—விஷம்.
ஆவணம்—கடைவீதி.
ஆழி—கடல்
ஆற்றல்—பலம்.
ஆன்மிகள்—ஆத்தும சிருஷ்டிகள்.
ஆன்ற—மிகுத்த.
ஆன்றோய—மிகுத்தோய், பெரியோனே.

## இ.

இகல்—பகை.
இகவாமல்—கடவாமல்.
இதசத்துரு—நயவிரோதி.
இதயாம்பரம்—இருதயமாகிய ஆகாயம்.
இதர—மற்ற.
இம்சை—துன்பப்படுத்தல்.
இம்பர்—இவ்வுலகம்
இயமானன்—யஜமான்
இழுதையர்—பொய்யர்.
இறுத்தது—வந்தது.
இனைதல்—வருந்தல்.
இன்னல்—துன்பம்.

## ஈ.

ஈஷணாத்திரயம்—மனைவி, மக்கள் செல்வமென மூன்று.

ஈட்டம்—கூட்டம்.
ஈர்த்தல்—இழுத்தல்.

## உ.

உச்சிட்டம்—மிச்சில், எச்சில்.
உஞற்றிய—செய்த.
உததி—சமுத்திரம்.
உத்துங்கர்—மேலான தெய்வம்.
உபசாந்தம்—நீடியபொறுமை.
உபயம்—இரண்டு.
உம்பர்—மறுவுலகம்.
உய்யானம்—பூந்தோட்டம்.
உரவு—வலிமை.
உலத்தல்—முடிந்துபோதல்.
உலவாது—முடியாமல்.
உலைக்கமடம்—உலையிலிட்டவாமை.
உவர்த்தல்—வெறுத்தல்
உறழ்தல்—ஒத்திருத்தல்.

## ஊ.

ஊக்கி—மேலிட்டு.
ஊர்ச்சிதம்—மேன்மேலுள்ள ஊக்கம்.
ஊர்த்த—உன்னதமான.
ஊர்த்தகதி—மேலான பதவி.
ஊழ்—முறைமை, ஒழுங்கு.

## எ.

எம்பி—என் தம்பி.
எம்மனோர்—எம்போல்வார்.
எழில்—அழகு
எள்ளுதல்—இகழுதல்.
எனுதியான்—யான், எனது என்ற இருவகைப்பற்று.

## ஏ

ஏதிலான்—அன்னியன்.
ஏரகத்துறுகுணம் — பேரின்பவீட்டிற் பெறத்தக்க குணங்கள்.
ஏனை—மற்ற.

## ஐ.

ஐயம்—சந்தேகம், சிலேட்டுமம்.

## ஒ.

ஒய்யென—விரைவுக்குறிப்புச்சொல்
ஒருங்கு—முற்றும், முழுவதும்.
ஒருப்படி இ—ஒருமனப்பட்டு.
ஒருவி—நீங்கி.
ஒல்லுமோ — கூடுமோ (கூடாது என்றபடி.)
ஒறுத்தல்—தண்டித்தல்.

## ஓ.

ஓச்ச—அடிக்க, வீச.
ஓம்பி—பாதுகாத்து.
ஓவாமல்—கெடாமல்.

## க

ககனம்—ஆகாயம்.
கஞ்சம்—தாமரை.
கடமதி—குடச்சந்திரன்.
கடு—விஷம்
கடைகாறும்—கடைசிமட்டும்.
கட்டு—கல்வி, பிடுங்கி.
கணம்—கூட்டம்.
கணிகையர்—வேசிகள்.
கணித்தல்—நிச்சயித்தல், குணித்தல்.
கண்ணிய—தொடுத்த.
கதிரொளி—சூரியப்பிரகாசம்.
கந்து—கட்டுத்தறி.
கபாடம்—கதவு.
கபோலம்—கன்னப்பிரதேசம்.
கமலம்—தாமரை.
கம்பிக்க—நடுங்க.
கரந்து—மறைந்து.
கரவிடம்—மறைவிடம்.
கரவு—வஞ்சனை.
கருப்பு—பஞ்சம்.
கருவூலம்—பொக்கிஷம், நிலவறை.
கலைக்கண்—கல்வியறிவு.
கவின்—அழகு.

## கா.

கா—காப்பாற்று.
காமாதுரம்—இச்சை.

காம்பீரம்—மேன்மை, வீரம்.
காயம்—வடு, தேகம்.
காயொளி—காய்கின்றவெயில்.
கார்—மேகம்.
காறும்—மட்டும்.
கானம்—காடு.

### கீ.

கீடம்.—கிருமி, புழு.
கீழியான்—முந்தினநாட்களில் நான்

### கு.

குச்சிதம்—அருவருப்பு
குத்திரம்—வஞ்சனை
குரவர்—குருக்கள்மார்.
குரிசில்—ராஜகுமாரன்.
குரூரம்—கொடுமை.
குவலயம்—பூமி, உலகம்.

### கெ.

கெழுமுதல்—மிகுதல்.

### கே.

கேகயம்—அசுணப்புள்.
கேதம்—குற்றம்
கேழ்—நிறம், ஒளி.
கேளுறும்—நட்புள்ள, சிநேகமுள்ள.

### கை.

கைதவர்—வஞ்சகர், சூதுள்ளவர்.
கைமாறு—பிரதியுபகாரம்.

### கொ.

கொட்டம்—கொட்டில்.
கொண்டல்—மேகம்.
கொப்பம்—யானையை விழுத்துங் கிடங்கு
கொளுவி—மாட்டி, பூட்டி.

### கோ.

கோட்டம்—கோணல்.
கோரம்—கொடுமை.
கோள்—மாறுபாடு, பின்புரணி.

### ச.

சகடம்—பண்டில்.
சஞ்சலம்—துன்பம்.
சஞ்சீவி—சாவாமருந்து.
சடலம்—தேகம்.
சண்டம்—வேகம், கோபம்.
சதகோடி—நூறுகோடி.
சதி—மோசம்
சதுஷ்டயம்—நாற்குணங்கள். அவை: நித்தியா நித்திய விவேகம், நிராசை, சமாதி, முத்தியிச்சையாகிய நாலு.
சதுரர்—சமர்த்தர்.
சதோயம்—எப்போதும்.
சத்துவம்—பலம்.
சந்ததம்—எப்போதும்.
சந்தர்ப்பம்—சமயம்.
சமர்ப்பித்தல் — உயர்ந்தோருக்குத் தாழ்ந்தோர் கொடுத்தல்.
சமூகம்—கூட்டம்.
சரதம்—உண்மை.
சரித்தல்—நடமாட்டம்.
சரோருகம்—தாமரை.
ஜலசரம்—நீர்வாழ்வன, மீன்.
சழக்கு—அறியாமை, பொய்.
சழக்கர்—சண்டிகள், வெட்கமற்றவர்.

### சா.

சாஞ்சல்யம்—துன்பம்,
சாதகத்திரள்—பேய்க்கூட்டம்.
சாதனம்—சாத்தியத்துக்கு மூலம்
சாதியால்—சாகிறாய்.
சாந்தம்—நீடிய பொறுமை.
சாமியம்—உவமை, ஒப்புமை.
சாம்பி—வாடி.
சாயகம்—அம்பு, பாணம்.
சார்வதா—எப்போதும்.
சாலம்—விபரீதப்புணர்ப்பு.

### சி.

சிதையாத—அழியாத, நையாத.
சித்து—மறைந்தும் வெளிப்படு பொருள்.

சிந்தாகுலம்—மனவருத்தம்.
சிமையம்— மலையினுச்சி.
சிரத்தை—விசுவாசம், அன்பு.

சீ.

சீத்தல்—தள்ளிவிடுதல்.
சீமான்—ஐஸ்வரியவான்.

சு.

சுருதி—வேதம்.

செ.

ஜெகசாலம்—உலகமாயம், உலகப் புரட்டு.
செஞ்செவே—நேர்நேரே.
செந்தனிக்கோல்—ஒப்பற்ற செங் கோல்.
செந்நீர்—இரத்தம்.
செம்முறை—உண்மை, வேதம்.

சே.

சேதனம்—அறிவு, ஞானம்.
சேயனே—தேவகுமாரனே.

சை.

சைதந்யம்—ஞானமுள்ள பொருள்.

த.

தக்கணை—குருதக்ஷிணை
தடங்கடல்—பெரியகடல்.
தண்பணை—வயல்.
தண்ணளி—கிருபை.
தமரம்—ஓசை, சத்தம்.
தரணி—பூமி.
தரியலர்—பகைவர்.
தருக்கு—அகங்காரம்.
தருணி—சூரியன்.
தலைப்படல்—சந்தித்தல்.
தவனம்—தாகம்.
தவிசு—ஆசனம்
தழுதழுக்க—நாத்தடுமாற.
தனிதம்—விடாப்பெய்ச்சல்.
தனு—தேகம், வில்.

தா.

தாராகணம்—நக்ஷத்திரக்கூட்டம்.
தாரு—விருக்ஷம்.
தாவரும்—கெடாத.

தி.

திகாந்தம்—திசையின்கடை.
திமிரம்—இருள்.
திரணம்—துரும்பு.
திருகை—மாறுபாடு.
திருவோலக்கம்—மகாதிவ்ய சபை.
திவாகரன்—சூரியன்.
திவேஷிகள்—பகைவர்.
திறம்பா—தவறாத.

தீ.

தீர்த்தன்—கடவுள்.

து.

துஜங்கட்டி—கொடிக்கட்டி.
துணர்—பூங்கொத்து.
துணிவு—நிச்சயம்.
துதைத்தல்—நெருங்கல்.
துப்பற்று—வலிமையின்றி.
துய்த்தல்—புசித்தல்.
துரியபூமி—உன்னத லோகம்.
துவர்—பவளம்.
துளங்கல்—அசைதல்.
துறுதல்—நெருங்கல்.
துனி—வருத்தம், துன்பம்.

தூ.

தூலம்—காத்திரம், தேகம்.

தெ.

தெருட்டுதல்—தெளிவித்தல்.
தெற்றென்று—தெளிவாய்.

தே.

தேகாதிசதுஷ்டயம்—தனுகரணபு வனபோகம்.
தேசு—பிரகாசம்.
தேராமல்—யோசியாமல்.

## தோ.

தொக்க—கூடிய.
தொடையல்—மாலே.
தொல்லே—பழமையான.
தொழும்பு—அடிமைத்தனம்.

## ந.

நச்சி—விரும்பி.
நடலே—வஞ்சனே, மாய்மாலம்.
நடித்து—மாயங்காட்டி.
நந்தாத—கெடாத.
நமரங்காள்—நம்முடையவர்களே.
நம்பி—ஆண்மக்களிற் சிறந்தவன்.
நரலே—ஓசை, சத்தம்.
நல்லாறு—நல்லவழி.
நவை—குற்றம்.
நளினம்—தாமரை
நள்ளிருள்—நடுராத்திரி
நள்ளுநர்—சிநேகிதர்.

## நா.

நாமறுநாள்—சாகுநாள்.

## நி.

நிகளம்—சங்கிலி.
நிட்களம்—கலப்பின்மை, உருவின்மை.
நித்திலம்—முத்து.
நிரஞ்சனம்—வியாபகம்.
நிருதர்—இராக்கதர்.
நிர்ச்சிந்தை—கவலேயின்மை.
நிஷ்பக்ஷம்—பற்றில்லாமை.
நிறுவிய—நிறுத்திய, நிலேப்படுத்திய

## நீ.

நீத்தம்—வெள்ளம்.
நீர்த்து—குணத்தையுடைத்து.
நீரகத்துறுகுணம் — இரக்கமுள்ள மனதின் குணம்.

## நு.

நுகர்வித்தல்—புசிப்பித்தல், ஊட்டுதல்.

## நே.

நேடுதல்—தேடுதல்.
நேத்திரம்—கண்.
நேமிக்கிரி — எப்பக்கமுஞ் சூழ்ந்த மலே.

## ப.

பஃறலே—பலதலே.
பங்கு—முடம்.
பஞ்சாமிர்தம்—பால், தயிர், நெய், கோமயம், கோசலம்.
பஞ்சி } —மிகவும் ஏழை.
பஞ்சை }
படரா—படர்ந்து.
படர்—துன்பம்.
படி—பூமி.
படிறன்—பொய்யன்.
படைக்கலம்—ஆயுதவருக்கம்.
பண்—இசை.
பண்ணவர்—தேவர்.
பதங்கம்—விட்டில்.
பந்தம்—பாபம், கட்டு.
பரமார்த்தம்—உண்மை, உண்மைப் பொருள்.
பரம்—தனிமை, கடவுள்.
பராவுதல்—வணங்குதல்.
பரிதி—சூரியன்
பரிவுற்று—இரங்கி.
பருணிதர்—புகழ்ந்து பாடுவோர்.
பவஞ்சம்—பிரபஞ்சம்.
பவித்திரம்—பரிசுத்தம்.
பன்னப்படு—சொல்லப்பட்ட

## பா.

பாகு—கரும்பின் சாறு.
பாங்கர்—பக்கம்.
பாசடை—பாசி.
பாசாடவி—உலகமாகிய காடு.
பாடு—பெருமை.
பாந்தள்—மலேப்பாம்பு.
பாமரன்—அறிவீனன்.

பாயொளி—பரவிய பிரகாசம்.
பாரகம்—பூமியாகிய உலகம்.
பாரிடம்—பசாசு, உலகம்.
பாலது—தன்மையது.
பாலி—அருள், கிருபைபாலி.
பாலை—கொடுஞ்சுரம், காடு.
பானம்—பருகுதல், நீரருந்தல்.
பாநு—சூரியன்.

பி.

பிதிர்வு—பிதிர்ந்துபோதல்.
பித்தளையுயிர்—மயக்கமுள்ள மனு மக்கள்.
பிந்து—துளி.
பிரணவம்—மூலம், காரணம்.
பிரவாகம்—வெள்ளம்.
பிழம்பு—திரட்சி.
பிழைத்தல்—தப்புச்செய்தல்.
பிறங்கல்—மலை, பிரகாசம்.
பிற்றை—பின்பு.

பீ.

பீடுற—பெருமைபொருந்த.
பீதி—பயங்கரம்.

பு.

புகலிடம்—அடைக்கலஸ்தானம்.
புட்கரம்—சமுத்திரம்.
புணர்ப்பு—வஞ்சனை.
புணை—மிதப்பு.
புநருலகம்—மறு உலகம்.
புயல்—மேகம்.
புரணம்—பூரணம்.
புரந்தரவேந்து—ஸ்வர்க்கலோக ராஜன்.
புரம்—தேகம்.
புரை—குற்றம்
புல்லொழுக்கம்—கெட்டநடக்கை.
புறங்கண்டு—தோற்கவடித்து
புனிதர்—பரிசுத்தர்
புன்கண்—துன்பம்.

பூ.

பூ—பூமி.
பூதரம்—மலை.
பூமான்—மகைஸ்வரியவான்.

பெ.

பெம்மான்—பெருமான்.
பெற்றி—தன்மை.

பை.

பையுள்—துன்பம்.

பொ.

பொல்லை—பொல்லாதவன் சீ.
பொழில்—சோலை.

போ.

போதம்—அறிவு.
போழ்தல்—பிளத்தல்.

பௌ.

பௌஷிகம்—வருங்காலம்.

ம.

மகோததி—சமுத்திரம்.
மடம்—அறியாமை.
மயலற—மயக்கமில்லாமல்.
மருட்டிய—மயக்கிய.
மலங்கி—மயங்கி.
மலத்திரயம்—அறியாமை, ஆணவம், காமியமென்ற மூன்று.
மலினம்—அழுக்கு.
மலோததி—நரகம்.
மல்கிய—நிறைந்த.
மனக்கரி—மனச்சாக்ஷி.
மன்பதை—மனுப்பிரஜைகள்.
மன்பொதுத்தந்தை—கடவுள்.

மன்றம்—பொதுவிடம்.

## மா.

மாசு—குற்றம்.
மாண்பு—மாட்சிமை.
மாரீசம்—கள்ளத்தனம்.
மானவர்—மனிதர்.

## மி.

மிடி—தரித்திரம்
மித்திரர்—சிநேகிதர்.
மித்தை—பொய்.
மிருத்து—மரணம்.
மிலைந்த—சூடிய

## மு.

முகந்து—மொண்டு.
முகில்—மேகம்.
முச்சிட்டர்—சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூவர்.
முத்தன்—ஜீவன் முத்தன்.
முப்பற்று—மனைவி, மக்கள், செல்வமென்ற பற்றுக்கள்.
முரணி—மாறுபட்டு.
முருக்கி—கெடுத்து.
முழை—மலைக்குகை.
முளரி—தாமரை
முறை—நீதி, வேதம்.
முறைப்பாடு—ஜெபம், ஓலமிடல்.
முன்னவன்—கடவுள்.

## மூ.

மூகை—ஊமை.
மூசிய—மொய்த்த.
மூவாத—கெடாத.

## மே.

மேனிலை—உப்பரிகை.

## மோ.

மோனம்—பேசாமை, மௌனம்.

## ர.

ரகிதம்—இன்மை.
ரமணீயம்—மனோகரமானது.

## ல.

லபிக்க—கிடைக்க.
லபிதம்—கிடைத்தபேறு.
லயம்—கட்டு, அடங்கிநிற்றல்.

## லோ.

லோசனம்—கண்.

## வ.

வஞ்சம்—பசாசு, இது ஆகுபெயர்.
வதனம்—முகம்.
வரைதல்—தள்ளுதல், நீக்கல்.
வரோதயன்—வரங்களை யருளிச் செய்கிற தெய்வம்
வள்ளல்—இல்லையென்னுமற் கொடுக்கிறவர்.
வற்சரம்—வருஷம்.
வற்புறுத்தல்—அழுந்தச் சொல்லுதல்.
வசனம்—தாமரை.

## வா.

வாய்விண்டு—வாய்திறந்து.
வாரி—சமுத்திரம்
வாரிதி—சமுத்திரம்.
வார்த்திகம்—மூப்பு, முதுமை.
வாளா—பேசாமை, விருதா.

## வி.

விசிராந்தி—சித்தசமாதானம், இளைப்பாறுதல்.
விடத்தரு—நச்சுமரம்.
விடலை—வாலிபன்.
விடாய்த்து—தாகித்து, இளைத்து.
விட்புலம்—தேவருலகம்.
விதி—பிரமாணம்.

வித்தி—விதைத்து.
விபத்து—ஆபத்து.
விபரீதம்—மாறுபடல்.
விபுதநாடு—தேவலோகம்.
வியனுலகம்—பெரிய உலகம்.
வில்விடல்—ஒளிவிடுதல்.
விவிதம்—பலவிதம்.
விழுநிதி—மேலான திரவியம்
விழைகின்ற—விரும்புகின்ற.

### வீ.

வீடுவலோ—சாவேனோ.

வீரை—சமுத்திரம்.
வீவு—சாவு.
வீறு—பெருமை.

### வெ.

வெருட்பு—அச்சுறுத்தி.

### வே.

வேசாறி—விடாய்த்து, அலுத்து.
வேட்டல்—விரும்பல், விவாகஞ் செய்தல்.

Printed at the N. M. S. Press, Royapettah, Madras—14

٦٨
١٠٤٦